International Trade Centre | SheTrades

UK International Development
Partnership | Progress | Prosperity



# பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்தல்:

## ஆடைகள், காலணிகள், பெண்கள் அணிகலன்கள் மற்றும் வீட்டு அலங்காரத் துறைகளில் இலங்கை பெண்கள் தலைமையிலான வணிகங்களுக்கான கைநூல்

In partnership with

EDB SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

**வெளியீட்டாளர்:** International Trade Centre (ITC)

**தலைப்பு:** பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்தல்: ஆடைகள், காலணிகள், பெண்கள் அணிகலன்கள் மற்றும் வீட்டு அலங்காரத் துறைகளில் இலங்கை பெண்கள் தலைமையிலான வணிகங்களுக்கான கைநூல்

**வெளியீட்டுத் திகதி மற்றும் இடம்:** ஜெனீவா, 2024 நவம்பர்

**பக்கங்களின் எண்ணிக்கை:** 64.

மேலதிக தகவல்களுக்கு, தொடர்புகொள்ளவும்: Kristy@intracen.org
இல் மிச்சேல் கிரிஸ்டி

ITC அதன் வெளியீடுகளை அதிக அளவில் பரப்புவதற்கு மீள்பதிப்பு மற்றும் மொழிபெயர்ப்பை ஊக்குவிக்கிறது. இந்த கைநூலின் சுருக்கமான அம்சங்கள், மூலத்தின் உரிய அங்கீகாரத்துடன், சுதந்திரமாக மீள் பதிப்புசெய்யப்படலாம். இன்னும் விரிவான மீள்பதிப்பு அல்லது மொழிபெயர்ப்புக்கு அனுமதி கோரப்பட வேண்டும். மீள்பதிப்பு செய்யப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட பொருளின் ஒரு பிரதி ITC க்கு அனுப்பப்பட வேண்டும்.

அட்டைப்படத்தில் உள்ள டிஜிட்டல் படம் (கள்) AI இனால் உருவாக்கப்பட்டதாகும்.

© International Trade Centre (ITC)

ITC நிறுவனமானது உலக வர்த்தக தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டு முகவர் நிறுவனமாகும்.






# நன்றி நவிலல்

சர்வதேச வர்த்தக நிலையமானது (ITC) இந்த வெளியீட்டின் தயாரிப்பில் பங்களித்தவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவிக்கிறது.

பிரதீபா குலசேக மற்றும் மாதங்கி ஹரிஹரன் (இருவரும் ITC) மிச்சேல் கிறிஸ்டியின் (ITC) வழிகாட்டுதலின் கீழ் இந்த அறிக்கையைத் தயாரித்தனர்.

இந்த அறிக்கைக்கான கணக்கெடுப்புக்கு பங்களித்த இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கையைச் சேர்ந்த பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு ITC நன்றி தெரிவிக்க விரும்புகிறது. இந்த கைநூல் ஐவுஊ மற்றும் வுசயனநடுயடி இன்டர்நேஷனல் எகனமிக் லோ கிளினிக், வர்த்தகம் மற்றும் ஒருங்கிணைப்புக்கான நிலையம், ஜெனீவா  பட்டப்படிப்பு நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான முன்னைய ஒத்துழைப்பிலிருந்து ஓரளவு பயன்பெற்றுள்ளது.

ITC நிலையமானது ஆசிரியர் பீடம் மற்றும் தயாரிப்பு செயற்பாட்டில் ஆதரவு வழங்கிய எவா சாங் (ITC) அறிக்கையில் திருத்தப் பணிகளை மேற்கொண்ட மார்னி மெக்டொனால்ட் மற்றும் வடிவமைப்பு பணிகளுக்கு பங்களித்த மாக்டலேனா ஸ்டாட்னிக் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

இந்த அறிக்கை ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அபிவிருத்தியின் மூலம் நிதியளிக்கப்பட்டது.

# இந்த கைநூலை யார் பயன்படுத்த வேண்டும்?

இந்த கைநூல் இலங்கை பெண்கள் தலைமையிலான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு (SMEs) சில உற்பத்திகளை பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முக்கிய மற்றும் பொருத்தமான சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் குறித்து விளக்குகிறது. இங்கு விளக்கப்பட்டுள்ள சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்து சந்தைகளில் வைக்கப்படும் உற்பத்திப்பொருட்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும். இந்த கைநூல் வடஅயர்லாந்து சந்தைகளில் வைக்கப்படும் பொருட்களுக்கு ஏற்புடையதாகாது.

ஆடைகள், பெண்களுக்கான அணிகலன்கள், காலணிகள் மற்றும் வீட்டு அலங்காரங்களை ஏற்றுமதி செய்வதற்கான ஒழுங்குமுறை தேவைப்பாடுகளை இந்த கைநூல் குறிப்பிடுகிறது. மேலும் குறிப்பாக, உண்மையான அல்லது சாத்தியமான ஏற்றுமதிகளின் அடிப்படையில், இந்த கைநூல் ஆடைகள், காலணிகள் மற்றும் கைப்பைகள் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது.

இந்தக் கைநூலில் விளக்கப்பட்டுள்ள பல ஒழுங்குமுறைத் தேவைகள் மிகவும் தொழில்நுட்பம் சார்ந்தவை என்பதோடு, விரிவானவை. அத்தகைய தேவைப்பாடுகள் பொதுவாக பிரித்தானியாவுக்கு இறக்குமதிகளை செய்பவர்களுடன் பணிபுரியும் தொழில்சார் ஏற்றுமதியாளர்களால் கவனத்திற்கொள்ளப்படுகின்றன. இந்த யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் வகையில், உண்மையான பௌதீக ஏற்றுமதிகள் நடுத்தர அல்லது பெரிய அளவிலான இலங்கை ஏற்றுமதி திரட்டிகளைப் (export aggregators) பயன்படுத்தும் என்று இந்த கைநூல் கருதுகிறது. ஆயினும்கூட, சிறிய அளவிலான உற்பத்தியாளர்கள் ஒரு நிபுணரைப் பயன்படுத்தாமல் நேரடியாக ஏற்றுமதி செய்ய இந்த கைநூலைப் பயன்படுத்தலாம். இந்த நோக்கத்திற்காக, கைநூலில் ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்புடைய தொழில்நுட்ப தேவைப்பாடுகளை அணுகுவதற்கான தொடர்புடைய இணைப்புகளும் உள்ளன. இந்தக் கைநூலில் உள்ள ஒவ்வொரு அத்தியாயத்திலும் விளக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள், ஒவ்வொரு ஒழுங்குமுறை தேவைப்பாடுகளையும் மேலும் விளக்கும் தொடர்புடைய இணைப்புகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் ஏற்புடைய புதிய ஒழுங்குமுறை தேவைப்பாடுகள் பற்றிய ஒரு மேலோட்டத்தை வழங்குவதன் மூலம் இந்தக் கைநூல் முன்னோக்கிய பார்வையைக் கொண்டுள்ளது.

மேலும், கைநூலில் கலந்துரையாடப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கு ஒத்த ஒழுங்குமுறை தேவைகளைக் கொண்ட உற்பத்திப்பொருட்களின் தொடர்புடைய வகைகளை உள்ளடக்கிய உட்கிடையான விற்பனை வாய்ப்புகள் பெரும்பாலும் இருக்கலாம்.

இறுதியாக, தொழில்நுட்ப ஒழுங்குமுறை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தேவைப்பாடுகள் தவிர, கைநூல் பயனர்கள் சந்தை அடையாளம், வேகமாக மாறிவரும் நுகர்வோர் விருப்பத்தேர்வுகள், போட்டித்தன்மையான தயாரிப்பு விலை நிர்ணயம் மற்றும் பிரித்தானியாவில் தற்போதைய நுகர்வோர் தேவையை பூர்த்தி செய்தல் போன்ற பல்வேறு ஏற்றுமதி தொடர்பான வர்த்தக கரிசனைகளைக் கொண்டிருப்பது முற்றிலும் புரிந்துகொள்ளத்தக்கதாகும். இந்த கைநூல் அத்தகைய சட்டப்பூர்வமற்ற வர்த்தக கரிசனைகளை நிவர்த்தி செய்யவில்லை.

இந்த கைநூலில் உள்ள அனைத்து தகவல்களும் 2024 ஒக்டோபர் வரையான நிலவரப்படியானதாகும். இந்தக் கைநூலைப் படிப்பவர்கள், தங்கள் ஏற்றுமதியைப் பாதிக்கக்கூடிய புதிய ஒழுங்குமுறைத் தேவைகள் குறித்துத் தெரிந்துகொள்ள வலுவாக ஊக்குவிக்கப்படுகிறார்கள்.


© Shutterstock.com



## முன்னெழுத்துச்சொற்கள் மற்றும் சுருக்கக்குறியீடுகள்

வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டாலேயன்றி, டொலர்கள் ($) பற்றிய அனைத்து குறிப்புகளும் அமெரிக்க டொலர்கள் மற்றும் தொன்களுக்கான அனைத்து குறிப்புகளும் மெட்ரிக் தொன்களைக் குறிக்கும்.

**ASYCUDA** - சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்க முறைமைகள்

**CITES**– காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் அழிந்து வரும் உயிரினங்களில் சர்வதேச வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தம்

**DCTS** – அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம்

**EORI**– பொருளாதார செயற்படுத்துனர்கள் பதிவு மற்றும் அடையாளங்காணல்

**FRC**– வன அபாய பொருட்கள்

**GOTS**– உலகளாவிய சேதன ஆடை தரநிலை

**HS**– ஒத்திசைந்த முறைமை

**Incoterms**– சர்வதேச வர்த்தக விதிமுறைகள்

**IPR**– புலமைச்சொத்து உரிமை

**IRD**– உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

**ITC** – சர்வதேச வர்த்தக நிலையம்

**POP**– நீடித்த சேதன மாசுபடுத்திகள்

**REACH**– இரசாயனங்களின் பதிவு, மதிப்பீடு, அங்கீகாரம் மற்றும் கட்டுப்பாடு

**SME** – சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி

**SVHC** – மிக அதிக கரிசனைக்குரிய பொருள்

**VAT** – பெறுமதி சேர் வரி

**VSS** – தன்னார்வ பேண்தகுதன்மை தரநிலை

**UKCC**– ஐக்கிய இராச்சிய பண்ட குறியீடு

## சர்வதேச வர்த்தக விதிமுறை சுருக்க குறியீடுகள்

**CIF**–செலவு காப்புறுதி சரக்கனுப்புக் கட்டணம்

**CIP**–ஏந்தூர்தி மற்றும் காப்புறுதி செலுத்தப்பட்டது

**CFR**–செலவு மற்றும் சரக்கனுப்புக் கட்டணம்

**CPT**–செலவு செலுத்தப்பட்டது

**DAP** –இடத்தில் வழங்கப்பட்டது

**DDP**–வழங்கப்பட்ட தீர்வை செலுத்தப்பட்டது

**DPU**–இறக்கப்பட்ட இடத்தில் வழங்கப்பட்டது

**EXW**–எக்ஸ் வேர்க்ஸ் (Ex Works)

**FCA** – பிரீ கேரியர் (Free Carrier)

**FOB**– பிரீ ஒன் பொன்ட் (Free on Board )

# உள்ளடக்கம்


**நன்றி நவிலல் ........ I**

**இந்த கைநூலை யார் பயன்படுத்த வேண்டும்? ........ 2**

**முன்னெழுத்துச்சொற்கள் மற்றும் சுருக்கக்குறியீடுகள் ........ 3**

**அத்தியாயம் I ஏற்றுமதிகளுக்காக வணிகத்தை தயார்செய்தல் ........ 8**

- இலங்கையில் வணிக பதிவு ........ 9
- கட்டம் 1: வணிக பதிவு ........ 9
- கட்டம் 2: வரி தொடர்பான பதிவு ........ 9
- கட்டம் 3: வர்த்தகத் திணைக்களத்தில் பதிவு செய்தல் ........ 10
- கட்டம் 4: இலங்கை சுங்கத்தில் பதிவு செய்தல் ........ 10
- கட்டம் 5: வணிக மற்றும் வர்த்தக சங்கங்களின் சம்மேளனங்களில் இணைந்துகொள்ளுங்கள் ........ 11
- கட்டம் 6: கைத்தொழில் பதிவு ........ 11
- கட்டம் 7: நிதி அணுகல் ........ 11
- கட்டம் 8: விற்பனை ஒப்பந்தம் ........ 12
- பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்தல்: ........ 14
- கட்டம் 9: ஒத்திசைவான முறைமை குறியீடுகள் மற்றும் தயாரிப்பு வகைப்பாடு ........ 14
- கட்டம் 10: ஏற்றுமதி நிதி ........ 15
- ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் ........ 17
- ஏற்புடைய கட்டணங்கள் ........ 17
- உற்பத்தி இடம் தொடர்பான விதிகள் (Rules of origin) ........ 17
- தரநிலைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் ........ 17
- DCTS இன் கீழ் விருப்பத்தேர்வுகளைக் கோருதல் ........ 17

**அத்தியாயம் 2 தயாரிப்பு மற்றும் உற்பத்தி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் 18**

- தயாரிப்பு பாதுகாப்பு ........ 20
- பொதுவான தயாரிப்பு பாதுகாப்பு ........ 20
- இரசாயன ஒழுங்குமுறையின் பதிவு, மதிப்பீடு, அங்கீகாரம் மற்றும் கட்டுப்பாடு 21
- REACH இணக்கம் ........ 21
- உயிர்க்கொல்லிகளின் பயன்பாடு ........ 22
- நிலைத்திருக்கும் சேதன மாசுபடுத்திகள் ........ 22
- இரவு ஆடை பாதுகாப்பு ........ 22
- அழிவடைந்து வரும் தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இருந்தான தயாரிப்புகள் ........ 23
- புலமைச் சொத்துரிமைகள் ........ 24
- வர்த்தக சின்னங்கள் ........ 24
- வடிவமைப்புகள் ........ 25








- புலமைச்சொத்துரிமையை மீறினால் என்ன நடக்கும்? ........ 26
- தயாரிப்பு பேண்தகுதன்மை Product sustainability ........ 27
- தயாரிப்பு பொதியிடல் ........ 28
- தயாரிப்பு அடையாள குறியீடு இடுதல் Product labelling ........ 29

**அத்தியாயம் 3 பேண்தகுதன்மை தரநிலைகள் SUSTAINABILITY STANDARDS ........ 30**

- தன்னார்வ பேண்தகுதன்மை தரநிலை ........ 30
- நிறுவனத்தின் குறியீடுகள் ........ 31

**அத்தியாயம் 4 சுங்க மற்றும் தொடர்புடைய நடைமுறைகள் ........ 32**

- சுங்க பதிவு ........ 33
- நிதியியல் ஆவணங்கள் ........ 34
- சுங்க அனுமதி ........ 35
- சுங்க பண்டக சாலைகள் (Customs bonded warehouses) ........ 35

**அத்தியாயம் 5 போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியலகள் ........ 36**

- பில் ஒப் லேடிங் (Bill of lading) ........ 37
- காப்புறுதி ........ 37

**இணைப்பு I : ஒரு இலங்கை ஏற்றுமதியாளராக இருக்க தயாராதல் ........ 39**

- Incoterms பற்றிய சுருக்கம் ........ 39
- தயாரிப்பு வகைப்பாடு: HS குறியீடுகள் ........ 40
- HS குறியீடுகள் மற்றும் UKCCகள் பற்றிய மேலோட்டம் ........ 40
- தயாரிப்பு விளக்க அமைவுரு ........ 41
- இந்த கைநூலில் உள்ள தயாரிப்புகளுக்கான பொருட் குறியீடுகளின் குறிப்பான பட்டியல் ........ 42
- ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் ........ 44

DCTS இன் கீழ் கட்டண விகிதங்கள் ... 44
உற்பத்தி இடம் தொடர்பான விதிகள் ... 45

**இணைப்பு II : தயாரிப்பு மற்றும் தயாரிப்பு தேவைப்பாடுகள் ... 46**

**பொதுவான தயாரிப்பு பாதுகாப்பு ... 46**
**ரீச் ஒழுங்குவிதிகள் REACH Regulation ... 47**
**இரவு ஆடை பாதுகாப்பு ... 47**
குழந்தைகள் இரவு உடைகள் ... 47
வயது வந்தோருக்கான இரவு ஆடைகள், பைஜாமாக்கள், குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் பருத்தி கம்பளி குளியல் ஆடைகள் ... 48
தீத்தடுப்பு இரசாயனங்கள் மூலம் பதப்படுத்தப்பட்ட துணியால் செய்யப்பட்ட இரவு ஆடைகள் ... 48
**தயாரிப்பு பொதியிடல் ... 49**
அத்தியாவசிய தேவைப்பாடுகள் ... 49
இணக்கமின்மையின் விளைவுகள் ... 49
**அடையாளக் குறியிடல் தேவைப்பாடுகள் ... 50**
ஆடை அடையாளக் குறியிடல் தேவைப்பாடுகள் ... 50
காலணி அடையாள குறியிடல் தேவைப்பாடுகள் ... 51

**இணைப்பு III: பேண்தகுதன்மை தரநிலைகள் ... 53**

**சான்றிதழ்களைப் பெறுவதற்கான படித்தரங்கள் ... 54**
கட்டம் 1: சரியான தரநிலையை அடையாளம் காணவும் ... 54
கட்டம் 2: ஒரு இடைவெளி பகுப்பாய்வினை மேற்கொள்ளவும் ... 54
கட்டம் 3: சான்றிதழுக்கு விண்ணப்பிக்கவும் ... 54
கட்டம் 4: கண்காணிப்பு மற்றும் திருத்த நடவடிக்கை கோரிக்கைகள் ... 55
கட்டம் 5: சான்றுப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் புதுப்பித்தல் ... 55
**தொடர்புடைய சான்றுப்படுத்தல்களின் உதாரணங்கள் ... 56**
உலகளாவிய சேதன ஆடை தரநிலைகள் (GOTS) ... 56
**ஓகோ–டெக்ஸ்** (OEKO-TEX) ... 56

**இணைப்பு IV: சுங்க நடைமுறைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ... 57**

**வணிக விலைப்பட்டியல் (commercial invoice) ... 57**
**பொதிவுப் பட்டியல் (packing list) ... 58**
**உற்பத்தி இடத்தின் சான்று (Proof of origin) ... 58**
**உற்பத்தி இட பிரகடனம் (Origin declaration) ... 59**
படிவம் A ... 60
பொருட்கள் பிரகடனம் ... 60
ஒற்றை பிரகடனம் ... 60
**பொருளாதார செயற்படுத்துனர்கள் (Economic Operators) பதிவு மற்றும் அடையாள இலக்கம் ... 61**



# உருக்கள், அட்டவணைகள் மற்றும் பெட்டிகளின் பட்டியல்

உரு 1: ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் பற்றிய கண்ணோட்டம் ... 6

அட்டவணை 1: விற்பனை ஒப்பந்தத்தின் முக்கிய விதிமுறைகளின் சுருக்கம் ... 12
அட்டவணை 2: Incoterms 2020 இன் உதாரணம் ... 13
அட்டவணை A1: Incoterms பற்றிய சுருக்கம் ... 39
அட்டவணை A2: HS குறியீடு மற்றும் UKCC வகைப்பாட்டின் உதாரணங்கள் ... 40
அட்டவணை A3: HS குறியீடு வகைப்படுத்தலுக்கான தயாரிப்பு விபர அமைவுரு ... 41
அட்டவணை A4: இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான UKCC களின் குறிப்பான பட்டியல் ... 42
அட்டவணை A5: தயாரிப்பு பாதுகாப்பு மீறல்களுக்கு பிரித்தானிய அதிகார தரப்புகளால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் ... 46

பெட்டி 1: ஏனைய அதிகார அமைப்புகளில் பதிவு செய்தல் ... 11
பெட்டி 2: சரியான ருமுஊஊ குறியீட்டை அடையாளம் காண்பதன் முக்கியத்துவம் ... 4
பெட்டி 3: தயாரிப்பு வகைப்பாட்டின் உதாரணம் ... 14
பெட்டி 4: தயாரிப்பு பாதுகாப்பை சரிபார்த்தல் ... 20
பெட்டி 5: தயாரிப்பு பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் ... 20
பெட்டி 6: SVHC என்றால் என்ன? ... 21
பெட்டி 7: இலங்கையில் REACH பரிசோதனை ... 21
பெட்டி 8: வடிவமைப்பு பாதுகாப்பைப் பெறுவதற்கான தேவைப்பாடுகள் ... 25
பெட்டி 9: உங்கள் தயாரிப்பை எவ்வாறு தனித்துவமாக்குவது ... 25
பெட்டி 10: வன-ஆபத்து பண்டம் என்றால் என்ன? ... 27
பெட்டி 11: ஒரு பேண்தகு எதிர்காலத்திற்கு தயாரிப்பாளர்கள் எவ்வாறு தயாராகலாம்? ... 27
பெட்டி 12: தயாரிப்பு பொதியிடல் பற்றிய உதாரணங்கள் ... 28
பெட்டி 13: பேண்தகுதன்மை தரநிலைகள் என்றால் என்ன? ... 30
பெட்டி 14: விநியோகஸ்தர் பேண்தகுதன்மை வளங்கள் ... 31
உரு A1: UKCCகளின் அத்தியாயம் 71க்கான அத்தியாயக் குறிப்புகளின் உதாரணங்கள் ... 50



© Shutterstock.com

# 01 ஏற்றுமதிகளுக்காக வணிகத்தை தயார்செய்தல்

## இலங்கையில் வணிக பதிவு

### கட்டம் 1: வணிக பதிவு

இலங்கையில் உள்ள மிகவும் பொதுவான வணிக வகைகளாவன: 1) தனி உரிமையாளர் 2) கூட்டாண்மை மற்றும் 3) தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம். ஒவ்வொரு வணிக வகைக்கும் அதன் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் உள்ளன. உங்கள் வணிகத் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமான ஒரு வணிக மாதிரியைத் தெரிவு செய்யுங்கள்.

ஒரு தனியுரிமைக்கு, வணிகம் அமைந்துள்ள மற்றும் பதிவு செய்யப்படும் பிரதேசத்தின் அடிப்படையில் மாகாண சபையில் இருந்து பொருத்தமான படிவங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும். மாகாண சபை இரண்டு படிவங்களை வழங்கும் ஒன்று வணிகப் பெயரைப் பதிவு செய்வதற்கும், இரண்டாவது கிராம உத்தியோகத்தரிடமிருந்து ஒரு அறிக்கையைப் பெறுவதற்குமானதாகும். விண்ணப்பப் படிவங்களில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து துணை ஆவணங்களையும் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பித்து தனிப்பட்ட வணிகப் பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

நிறுவனங்கள் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும்.பதிவு நேரில் அல்லது eROC ஒற்றைச்சாளர் (single window) முறையைப் பயன்படுத்தி செய்யலாம்.eROC அமைப்பைப் பயன்படுத்தி தேவையான துணை ஆவணங்களை சமர்ப்பிக்கவும் அல்லது வணிகப் பெயரை முன்பதிவு செய்த பின்னர் அவற்றை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்திற்கு தபாலிடவும். பயனர் உள்நுழைவு (login ) மற்றும் பெயர் முன்பதிவு பற்றிய வழிகாட்டுதலுக்கும், அனுமதி பெற்ற பின்னர் நிறுவனத்தின் பெயரை கூட்டிணைப்பதற்கும் இந்த இணைப்பை பார்க்கவும்.

அதே நேரத்தில், வணிகத்தின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் வங்கிக் கணக்கு ஒன்றைத் திறக்கவும். வணிகத்திற்கான வங்கிக் கணக்கைத் திறப்பது பற்றிய தகவலுக்கு இந்த வழிகாட்டியை பார்க்கவும்.

### கட்டம் 2: வரி தொடர்பான பதிவு

ஒரு வணிகம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற வேண்டும். இதனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் IRD இலத்திரனியல் சேவைகள் மூலம் பெறலாம்.

வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பெற்ற பின்னர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இலத்திரனியல் சேவைகள் போர்ட்டலைப் பயன்படுத்தி பெறுமதி சேர் வரிக்கு (VAT) பதிவு செய்யுங்கள். இந்த செயன்முறை பற்றிய விரிவான தகவலுக்கு இந்த வழிகாட்டியை பார்க்கவும்.

ஒவ்வொரு தனிப்பட்ட கப்பல் சரக்கேற்றலுக்கும், வணிகம் தற்காலிக வெற் வரி பதிவைப் பெற வேண்டும். ஏற்றுமதிகளுக்கு 0% வெற் வரி விதிக்கப்படுகிறது.

ரூ 60 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த புரள்வைக் கொண்ட வணிகங்கள் நிரந்தர வெற் வரிக்கு பதிவு செய்ய வேண்டும், ஏனெனில் இது நிரந்தர வெற் வரி பதிவுக்கான வரம்பை அடைகிறது.

## கட்டம் 3: வர்த்தகத் திணைக்களத்தில் பதிவு செய்தல்


ஐக்கிய இராச்சியம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் (DCTS) கீழ் முன்னுரிமை கட்டண விகிதங்களைக் கோர விரும்பும் ஏற்றுமதியாளர்கள் இலங்கை வர்த்தகத் திணைக்களத்தில் ஏற்றுமதியாளர்களாகப் பதிவுசெய்து அதன் இணையவழி முறைமையில் ஏற்றுமதி சுருக்கத்தை பதிவேற்ற வேண்டும். விண்ணப்பப் படிவத்தை துணை ஆவணங்கள், ஏற்றுமதியாளர் பிரகடனம் மற்றும் பதிவுக் கட்டணம் ஆகியவற்றுடன் வர்த்தகத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கவும்

### விரைவான உதவிக்குறிப்பு

தற்காலிக வெற் வரி பதிவு புதுப்பிக்கப்படும் ஒவ்வொரு முறையும் இலங்கை சுங்கத்தில் பதிவைப் புதுப்பிக்கவும்.

## கட்டம் 4: இலங்கை சுங்கத்தில் பதிவு செய்தல்

இலங்கை சுங்கத்தில் ஒரு கணக்கை உருவாக்கி சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்க முறைமையில் (ASYCUDA) பதிவு செய்யுங்கள். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தேவையான துணை ஆவணங்களுடன் சமர்ப்பிக்கவும். இந்த பதிவுக்கு எந்த செலவும் இல்லை.




## கட்டம் 5: வணிக மற்றும் வர்த்தக சங்கங்களின் சம்மேளனங்களில் இணைந்துகொள்ளுங்கள்

வர்த்தக சம்மேளனங்கள், சந்தை நுண்ணோக்குகள், திறன்-விருத்தி பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள், வலையமைப்பு வாய்ப்புகள் மற்றும் சான்றளிக்கும் ஆவணங்கள் போன்ற அத்தியாவசிய வணிகச் சேவைகள் உள்ளிட்ட பெறுமதியான சேவைகளின் தொகுப்பை தங்கள் உறுப்பினர்களுக்கு வழங்குகின்றன.

ஆடைகள், காலணிகள், பெண்கள் அணிகலன்கள் மற்றும் வீட்டு அலங்காரங்கள் ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவு சேவைகளை வழங்கும் சில சம்மேளனங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- இலங்கை வர்த்தக சம்மேளனம்:
- இலங்கை ஏற்றுமதியாளர்களின் தேசிய சங்கம்
- இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம்
- இலங்கை தேசிய வர்த்தக சங்கம்
- பெண்கள் கைத்தொழில் மற்றும் வர்த்தக சங்கம்
- இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் சங்கம்
- இணைந்த ஆடை சங்க மன்றம்

## கட்டம் 6: கைத்தொழில் பதிவு

ஏற்றுமதிகளுக்கான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் ITEP மற்றும் INFAC திட்டங்களின் கீழ் நன்மைகளைப் பெற உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்தித் தளத்தை கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள கைத்தொழில்கள் பதிவாளரிடம் பதிவு செய்யலாம்.

### பெட்டி 1: ஏனைய அதிகார அமைப்புகளில் பதிவு செய்தல்

ஏற்றுமதி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் புதிய ஏற்றுமதியாளர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் தன்னார்வமாக முன்வந்து பதிவு செய்து கொள்ள முடியும் என்பதோடு, ஏற்றுமதியாளர்கள் மற்றும் சாத்தியமான ஏற்றுமதியாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட திறன் விருத்தி, தர மேம்பாடு, சந்தை வாய்ப்புகள், திறன் மேம்பாடு, ஆலோசனை மற்றும் ஏற்றுமதி சந்தைப்படுத்தல் ஆலோசனை சேவைகளை அணுகலாம்.

## கட்டம் 7: நிதி அணுகல்

உற்பத்தி வணிகங்கள் தங்கள் வர்த்தக வங்கி மூலம் சிறு மற்றும் நுண் கைத்தொழில்களின் தலைவர் மற்றும் தொழில்முனைவோர் ஊக்குவிப்பு திட்ட சுழல் நிதியிலிருந்து பயனடையலாம். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ரூ. 25 மில்லியன் வரை கடன்களை வழங்கும் இந்த நிதி, இயந்திரங்களை கொள்வனவுசெய்வதற்கும், செயற்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்தப்படலாம். கடனை இரண்டு வருட மேலதிக சலுகைக் காலம் அடங்கலாக அதிகபட்சம் 10 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தலாம். மேலும் விவரங்களுக்கு இங்கே பார்க்கவும்.

மேலும், இலங்கையில் அரச மற்றும் பதிவுசெய்யப்பட்ட வர்த்தக வங்கிகளால் வழங்கப்படும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் மற்றும் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு பல கடன் திட்டங்கள் உள்ளன. அவற்றில் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- இலங்கை மக்கள் வங்கியினால் (அரச வங்கி) வழங்கப்படும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன்கள்
- இலங்கை வங்கியினால் (அரசு வங்கி) வழங்கப்படும் SME Energizer
- சனச அபிவிருத்தி வங்கியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் திட்டம்
- இலங்கை கொமர்ஷல் பேங்க் பிஎல்சியின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன்கள்
- இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து நேஷன் டெவலப்மென்ட் வங்கியினால் வழங்கப்படும் SME re-energizer

8, 9 மற்றும் 10 ஆம் கட்டங்கள் பெரும்பாலும் இணையாக நடைபெறுகின்றன என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும்.

## கட்டம் 8: விற்பனை ஒப்பந்தம்

உற்பத்தியாளர்கள் அட்டவணை 1 இல் வழங்கப்பட்ட உட்பிரிவுகள் தங்கள் விற்பனை ஒப்பந்தங்களில் சேர்க்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு செய்வது, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு பிணக்கையும் தெளிவாகவும் நட்பு ரீதியாகவும் தீர்க்க தரப்பினருக்கு உதவலாம்.

### அட்டவணை 1: விற்பனை ஒப்பந்தத்தின் முக்கிய விதிமுறைகளின் சுருக்கம்

| | |
|---|---|
| முன்வரை விலைப்பட்டியல் (Pro forma invoice) | • கொள்வனவு கட்டளையின் விதிமுறைகளை உறுதிப்படுத்த விற்பனையாளரால் கொள்வனவாளருக்கு அனுப்பப்பட்டது. பல விலைப்பட்டியல்கள் ஒரே விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படலாம்<br>• உற்பத்தி விபரம், அளவு, விலை மற்றும் விநியோக விதிமுறைகள் போன்ற தகவல்களை உள்ளடக்கியது<br>• கொள்வனவாளரிடமிருந்து கட்டணத்தைக் கோரவும் பயன்படுத்தப்படுகிறது |
| கட்டண விதிமுறைகள் | • விலைப்பட்டியல் செலுத்துவதற்கான இணக்கம் காணப்பட்ட நிபந்தனைகள்<br>• செலுத்த வேண்டிய திகதி, நாணயம் மற்றும் பணம் செலுத்தும் முறை மற்றும் நிலுவையில் உள்ள கட்டணத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அபராதங்கள் |
| முன்னணி நேரம் (Lead time) | • உற்பத்தி, ஏற்றுமதியாளர் மற்றும் கப்பலேற்றல் முறையைப் பொறுத்து, கொள்வனவு கட்டளை செய்யப்பட்ட நேரத்திலிருந்து பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் வழங்குவதற்கும் எடுக்கும் நேரத்தின் அளவு.<br>• லீட் டைம் குறித்த இணக்கம் இரு தரப்பினருக்கும் இடையே நம்பிக்கை மற்றும் சுமூகமான வர்த்தக உறவுகளுக்கு வழிவகுக்கும் |
| குறைந்தபட்ச கொள்வனவு கட்டளை அளவுகள் | • ஒரு கொள்வனவாளர் ஏற்றுமதியாளரிடம் இருந்து கொள்வனவு கட்டளை செய்ய வேண்டிய குறைந்தபட்ச அலகுகளின் எண்ணிக்கை<br>• உற்பத்தியில் வினைத்திறனை மேம்படுத்த உதவுகிறது |
| வடிவமைப்பு உரிமைகள் | • உற்பத்திப்பொருளின் வடிவமைப்பு உரிமைகளின் அடிப்படையில் தயாரிப்பாளர் மற்றும் கொள்வனவாளரின் பாத்திரங்களை இது கோடிட்டுக் காட்டுகிறது (வடிவமைப்பு உரிமைகள் பற்றி மேலும் அறிய, அத்தியாயம் 2 ஐ பார்க்கவும்).<br>– உதாரணம்: "வடிவமைப்பில் ஏதேனும் சாத்தியமான மீறல்கள் இருந்தால் அதை கொள்வனவாளருக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதை தயாரிப்பாளர் ஒப்புக்கொள்கிறார்…' |
| முத்திரையிடல் மற்றும் பொதியிடல் (Labelling and packaging) | • முத்திரையிடல் மற்றும் பொதியிடல் அடிப்படையில் உற்பத்தியாளர் மற்றும் கொள்வனவாளரின் பாத்திரங்களை கோடிட்டுக் காட்டுகிறது. சில உதாரணங்கள்:<br>– 'ஒழுங்குமுறை முகவரமைப்பின் முத்திரையிடல் தேவைகளுக்கு இணங்குவதை உறுதிசெய்வதற்கு உற்பத்தியாளர் பொறுப்பேற்க வேண்டும்…'<br>– 'கொள்வனவாளர் சார்பாக போதுமானளவு முத்திரைகள் மற்றும் வேறு பொதியிடல் பொருட்களை கொள்வனவு கட்டளை செய்வதற்கு உற்பத்தியாளரே பொறுப்பாவார்…'<br>– 'உற்பத்தி மாற்றங்கள் காரணமாக பயன்படுத்தப்படாத முத்திரைகள் அல்லது பொதியிடல் பொருட்களுக்கு கொள்வனவாளர் பொறுப்பேற்க மாட்டார்…' |
| தனிப்பயனாக்கப்பட்ட அபிவிருத்திகள் | • கொள்வனவாளரின் குறிப்பிட்ட தயாரிப்பு மற்றும் உற்பத்தி கோரிக்கைகள் உற்பத்தியாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இரு தரப்பினரும் ஒப்புக்கொள்கிறார்கள் என்பதைக் காட்ட விற்பனை ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. |
| விநியோக விதிமுறைகள் அல்லது சர்வதேச வர்த்தக விதிமுறைகள் (Incoterms) | • அட்டவணை 2 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, சர்வதேச பரிவர்த்தனைகளில் பொருட்களை விற்பனை செய்வதற்கான ஏற்றுமதியாளர்கள் மற்றும் வாங்குபவர்களின் பொறுப்புகள், விநியோக மையம் மற்றும் செலவுகள் ஆகியவற்றை வரையறுக்கும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின் தொகுப்பு<br>• விநியோகம் செய்யும் இடம் அல்லது சேருமிடம் முடிந்த வரையில் குறிப்பிடப்பட்டுள்ளதை தரப்புகள் உறுதி செய்ய வேண்டும். சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின்படி, பின்வரும் சொற்றொடர்களைப் பயன்படுத்துவதே சிறந்த நடைமுறையாக உள்ளது "[தெரிவுசெய்யப்பட்ட Incoterm] [பெயரிடப்பட்ட மையம் அல்லது இடம்] Incoterms 2020" |



விற்பனை ஒப்பந்தங்களில் சர்வதேச விற்பனை பரிவர்த்தனையில் தயாரிப்பாளர்கள் / ஏற்றுமதியாளர்கள் மற்றும் கொள்வன வாளர்களின் பொறுப்புகளை வரையறுக்கும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட விதிகளான ஐஉெழவநசஅள உள்ளடக்கப்பட வேண்டும். Incoterms 2020 11 பொது விதிகளை அமைக்கிறது, அவை ஒவ்வொன்றும் சரக்கேற்றல் செயல்பாட்டில் வெவ்வேறு புள்ளிகளில் விற்பனையாளர் மற்றும் கொள்வனவாளரின் பொறுப்புகளை வரையறுக்கின்றது.

Incoterms உட்பட, ஒவ்வொரு தரப்பினரின் பொறுப்புகளையும் குறிப்பிடுவது மட்டுமல்லாமல், விற்பனையாளரிடமிருந்து கொள்வனவாளருக்கு இடர்நிலை மாற்றப்படும் புள்ளியையும், தரப்புகளுக்கு இடையிலான செலவுகளைப் பிரிப்பதையும் குறிப்பிடுகிறது. அட்டவணை 2 சில விருப்ப விநியோக விதிமுறைகள் மற்றும் தயாரிப்பாளர்/விற்பனையாளர் (S) மற்றும் கொள்வனவாளர் (B) இடையே சாத்தியமான நிகழ்நிலவரங்களைக் காட்டுகிறது. கொழும்பில் உள்ள துறைமுகம் வழியாக அடிக்கடி ஏற்றுமதி செய்யப்படும் போது, அட்டவணை 2 கடல் வழி போக்குவரத்துக்கு ஏற்புடைய Incoterms களில் கவனம் செலுத்துகிறது. ஏனையவை அட்டவணை A1, இணைப்பு ஐ இல் தரப்பட்டுள்ளன.

### அட்டவணை 2: Incoterms 2020 இன் உதாரணம்

| INCOTERM | DESCRIPTION | RESPONSIBILITIES |
|---|---|---|
| *பன்முக போக்குவரத்து* | | |
| Ex Works (EXW) (கப்பலேற்றல் ஏற்பாடுகள்) | S இன் (விற்பனையாளரின்) வளாகமாக இருக்க வேண்டிய அவசியமில்லாத ஒரு பெயரிடப்பட்ட இடத்தில் S (விற்பனையாளர்) பொருட்களை B (கொள்வானவாளரு)க்கு வழங்குகிறார். ஏற்றுதல், விநியோகம் மற்றும் தொடர்புடைய அனைத்து அபாயங்கள் மற்றும் செலவுகளுக்கு B (கொள்வனவாளர்) பொறுப்பாகும் | S இன் எல்லைக்குள் விநியோகம் நடந்தால், ஏற்றுமதி அனுமதிகள் பெறப்படுவதை உறுதிசெய்ய S கடப்பாடுடையவரன்று. அது B இன் பொறுப்பாகும். தொடர்புடைய தகவல் மற்றும் ஆவணங்களைப் பெறுவதற்கு மட்டுமே S உதவ வேண்டும். |
| இடத்தில் விநியோகம் செய்யப்பட்டது (DAP) | S, பெயரிடப்பட்ட இடத்தில் டீக்கு பொருட்களை வழங்குகிறார். B இன் இழப்பு அல்லது பொருட்களுக்கு சேதம் ஏற்படும் அபாயத்திற்கு எதிராக காப்புறுதித் திட்டத்தை வாங்க S கடப்பாடுடையவரன்று. | S பணம் செலுத்தி ஏற்றுமதி அனுமதிகளைப் பெற வேண்டும் ஆனால் மூன்றாம் நாடுகளின் வழியாகப் போக்குவரத்துக்கான இறக்குமதி அனுமதிகள் அல்லது அனுமதிகளைப் பெற வேண்டிய கட்டாயம் இல்லை. பரிமாற்றம் மற்றும்/அல்லது இறக்குமதி அனுமதிகளைப் பெறுவதற்கு ஆவணங்கள் மற்றும்/அல்லது தகவல்களைப் பெறுவதற்கு B இன் செலவில் S Bக்கு உதவ வேண்டும். |
| *கடல் மற்றும் உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து* | | |
| பிரீ ஒன் போட் Free on Board (FOB) | S, B-ஆல் பரிந்துரைக்கப்பட்ட கப்பலில் B-க்கு பொருட்களை கப்பலேற்றல் துறைமுகத்தில் வழங்குகிறார். பொருட்கள் கப்பலில் இருக்கும் தருணத்தில் பொருட்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து செலவுகளுக்கும் B பொறுப்பாவார். | S பணம் செலுத்தி ஏற்றுமதி அனுமதிகளைப் பெற வேண்டும் ஆனால் மூன்றாம் நாடுகளின் வழியாகப் போக்குவரத்துக்கான இறக்குமதி அனுமதிகள் அல்லது அனுமதிகளைப் பெற வேண்டிய கட்டாயம் இல்லை. |
| செலவு மற்றும் சரக்கனுப்புக் கட்டணம் Cost and Freight (CFR) | S கப்பலில் B க்கு பொருட்களை வழங்குகிறார். பொருட்கள் உண்மையில் அவர்களின் இலக்குக்கு வந்தாலும் இல்லாவிட்டாலும் S இன் கடமை முடிந்தாக கொள்ளப்படும். B இன் இழப்பு அல்லது பொருட்களுக்கு சேதம் ஏற்படும் அபாயத்திற்கு எதிராக காப்புறுதித் திட்டத்தை வாங்க S கடப்பாடுடையவரன்று. | S பணம் செலுத்தி ஏற்றுமதி அனுமதிகளைப் பெற வேண்டும் ஆனால் மூன்றாம் நாடுகளின் வழியாகப் போக்குவரத்துக்கான இறக்குமதி அனுமதிகள் அல்லது அனுமதிகளைப் பெற வேண்டிய கட்டாயம் இல்லை.<br>பரிமாற்றம் மற்றும்/அல்லது இறக்குமதி அனுமதிகளைப் பெறுவதற்கு ஆவணங்கள் மற்றும்/அல்லது தகவல்களைப் பெறுவதற்கு B இன் செலவில் S Bக்கு உதவ வேண்டும் |
| செலவு காப்புறுதி சரக்கனுப்புக் கட்டணம் (CIF) | S கப்பலில் B க்கு பொருட்களை வழங்குகிறார். பொருட்கள் உண்மையில் அவர்களின் இலக்குக்கு வந்தாலும் இல்லாவிட்டாலும் S இன் கடமை முடிந்தாக கொள்ளப்படும். B இன் இழப்பு அல்லது பொருட்களுக்கு சேதம் ஏற்படும் எதிராக காப்பீட்டுத் தொகையை வாங்க S கடமைப்பட்டு உள்ளது. | S பணம் செலுத்தி ஏற்றுமதி அனுமதிகளைப் பெற வேண்டும் ஆனால் மூன்றாம் நாடுகளின் வழியாகப் போக்குவரத்துக்கான இறக்குமதி அனுமதிகள் அல்லது அனுமதிகளைப் பெற வேண்டிய கட்டாயம் இல்லை.<br>பரிமாற்றம் மற்றும்/அல்லது இறக்குமதி அனுமதிகளைப் பெறுவதற்கு ஆவணங்கள் மற்றும்ஃஅல்லது தகவல்களைப் பெறுவதற்கு B இன் செலவில் S Bக்கு உதவ வேண்டும் |

# பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்தல்:

## கட்டம் 9: ஒத்திசைவான முறைமை குறியீடுகள் மற்றும் தயாரிப்பு வகைப்பாடு

ஒப்படைப்பு விலைப்பட்டியல் (proforma invoice) மற்றும் விற்பனை ஒப்பந்தத்தில் தயாரிப்பை விவரிக்கும் போது, விற்பனையாளர்கள் சரியான தயாரிப்பு வகைப்பாடு அல்லது ஒத்திசைவான முறைமை (HS) குறியீட்டை உள்ளடக்க வேண்டும். பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்வதற்கு, ஒவ்வொரு தயாரிப்புக்கும் ஐக்கிய இராச்சிய பண்ட குறியீடு (UKCC) அமைப்பினால் வழங்கப்படும் 10 இலக்க தயாரிப்புக் குறியீடு உள்ளது. இது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட HS குறியீட்டை, அடிப்படையாகக் கொண்டது என்பதுடன், இது அட்டவணை A2, இணைப்பு I இல் விளக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதியாளர்கள் சரியான UKCC தயாரிப்புக் குறியீட்டை அடையாளம் காண வேண்டும். உளு குறியீடு மற்றும் UKCC வகைப்பாடு பற்றிய ஒரு மேலோட்டத்தைப் பெற, அட்டவணை A2, இணைப்பு ஐ இல் வழங்கப்பட்டுள்ள விரிவான உதாரணத்தைப் பார்க்கவும்..

இருப்பினும், உற்பத்தியின் சிக்கலான தன்மை அதிகரிக்கும் போது, தயாரிப்பு வகைப்பாடு ஏற்றுமதியாளர்களுக்கு கடினமான நடை முறையாக மாறும். பருத்திச் சட்டை மற்றும் பருத்தி பாவாடையை பத்திக் முறையின் மூலம் கையால் அச்சிடுதல் மற்றும் ஏற்புடைய தயாரிப்புக் குறியீட்டைத் தீர்மானித்தல் எப்படி என்பதை விளங்கிக்கொள்ள, பெட்டி 3 ஐப் பார்க்கவும்.

### சட்டை மற்றும் பாவாடைக்கான தயாரிப்பு வகைப்பாடு

ஏற்றுமதியாளர்கள் இந்த முக்கியமான நடைமுறையை மேற்கொள்ள இரண்டு காரணங்கள் உள்ளன:

1. பிரித்தானிய சந்தையில் நுழைவதற்கான தயாரிப்புகளுக்கான ஏற்புடைய கட்டணங்கள் மற்றும் வரி விகிதங்களைக் கணக்கிடுதல்.
2. தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கு முன் பூர்த்தி செய்ய வேண்டிய குறிப்பான தயாரிப்பு இணக்கத் தேவைப்பாடுகளைப் புரிந்து கொள்ளுதல்.

உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், பிரித்தானியாவில் இறக்குமதி செய்வதற்கான தோல் பொருட்கள் மற்றும் மரப் பொருட்களை வகைப் படுத்துவது தொடர்பான பிரித்தானிய வழிகாட்டுதலையும் (இது ஆடை வகைகளுக்கான வகைப்பாடு வழிகாட்டியைப் போன்றது) மற்றும் வருமானம் மற்றும் சுங்கத்தால் வெளியிடப்பட்ட கட்டண அறிவிப்புகளையும் பார்வையிடலாம். கட்டண அறிவிப்புகளில் சில தயாரிப்புகளை எவ்வாறு வகைப்படுத்துவது என்பது குறித்த குறிப்பான தகவல்கள் உள்ளன. உதாரணமாக, 2022 ஆம் ஆண்டின் கட்டண அறிவிப்பு 21 சரியான விளக்கத்துடன் ஓட்ட உடைக்கான UKCC குறியீட்டைக் குறிப்பிடுகிறது. இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான சாத்தியமான ஏற்புடைய UKCC குறியீடுகள் பற்றிய ஒரு மேலோட்டம் இந்த கைநூலின் அட்டவணை A4 இணைப்பு I இல் வழங்கப்பட்டுள்ளது.

### பெட்டி 3: தயாரிப்பு வகைப்பாட்டின் உதாரணம்

**சட்டை மற்றும் பாவாடைக்கான தயாரிப்பு வகைப்பாடு**

ஒரு சட்டை மற்றும் ஒரு பாவாடை இரண்டு ஆடை துண்டுகள். ஒவ்வொரு ஆடையும் பருத்தியால் ஆனது, பத்திக் முறையால் கை ரேகையிடப்பட்டவை, பின்னப்படாதவை அல்லது சரிகை வேலைப்பாடு செய்யப்படாதவை.

பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்வதற்கான ஆடைகளை வகைப்படுத்துவதற்கான பிரித்தானிய வழிகாட்டுதலை பார்வையிட்ட பின்னர், ஏற்றுமதியாளர்கள் ஒவ்வொரு ஆடையையும் விவரிக்க முடியும் என்பதோடு, பின்வரும் முறையில் சாத்தியமான குறியீட்டை தீர்மானிக்கலாம்.

| தயாரிப்பு | விபரம் | சாத்தியமான குறியீடு |
|---|---|---|
| பருத்தி சட்டை, பத்திக் முறையில் கை ரேகையிடப்பட்ட | சட்டைக்கைகளுடன் அல்லது இல்லாமல் மற்றும் கழுத்தில் ஒரு திறப்புடன் அல்லது இல்லாமல் உடலின் மேல் பகுதியை மறைக்க வடிவமைக்கப்பட்ட தளர்வான-பொருத்தப்பட்ட ஆடைகள் | 6206.3000.10 |
| பருத்தி பாவாடை, பத்திக் முறையில் கை ரேகையிடப்பட்ட | இணைப்பு அல்லது அணையாடைகள் இல்லாத, உடலின் கீழ்ப் பகுதியை மறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஆடை | 6204.5200.10 |

தயாரிப்பு விளக்கத்தைத் தயாரிக்க, இந்த கைநூலின் அட்டவணை A3 இணைப்பு ஐ இல் வழங்கப்பட்டுள்ள தயாரிப்பாளர்கள் தங்கள் தயாரிப்பை விவரிக்க உதவும் கேள்விகளுடன் தயாரிப்பு விபர அமைவுருவைப் பார்க்கவும்.



## கட்டம் 10: ஏற்றுமதி நிதி

ஏற்றுமதி பரிவர்த்தனைகளுக்கு பணப்பாய்வு (Cash flow) மிகவும் முக்கியமானது, குறிப்பாக தயாரிப்பாளர்கள் / ஏற்றுமதியாளர்கள் கொள்வனவாளரிடமிருந்து உடனடியாக பணம் பெற மாட்டார்கள். இலங்கை வங்கிகளால் வழங்கப்படும் சில ஏற்றுமதி நிதி திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து ஹட்டன் நஷனல் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர் களுக்கான ஹட்டன் நேஷனல் வங்கி SME எக்ஸ்போ கடன் (SME Expo Credit)
- சம்பத் வங்கியின் ஏற்றுமதி நிதி
- சனச அபிவிருத்தி வங்கியின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கடன்கள்
- ஜயகமு ஸ்ரீ லங்கா ஏற்றுமதியாளர்கள் மற்றும் புத்தாக்குனர்களுக்கான நிதி மற்றும் ஆலோசனை சேவைகள்
- பான் ஏசியா வங்கியின் சரக்கேற்றலுக்கு முந்திய மற்றும் பிந்தைய நிதி

**விரைவான உதவிக்குறிப்பு: உங்கள் ஏற்றுமதி நிதித் தெரிவுகளை அறிந்து கொள்ளுங்கள்**

ஏற்றுமதியாளர்கள் தங்கள் வர்த்தக வங்கியிலிருந்து ஏற்றுமதி நிதித் திட்டத்தைப் பெறலாம். பரிவர்த்தனை அடிப்படையிலான வசதி அல்லது செயலாற்றுகை அடிப்படையிலான வசதி உங்கள் வணிகத்திற்கு மிகவும் பொருத்தமானதா என்பதைப் புரிந்து கொள்ள அவர்களிடம் பேசவும். ஏற்புடைய வட்டி விகிதம், கடனுக்குத் தகுதிபெறத் தேவையான பிணை அல்லது பாதுகாப்புத் தொகை மற்றும் திருப்பிச் செலுத்தும் விதிமுறைகள் ஆகியவற்றை அறிய உங்கள் வர்த்தக வங்கியிடம் பேசவும்.



உரு 1: ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம் பற்றிய கண்ணோட்டம்






# ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம்

ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் கீழ், இலங்கை ஒரு 'மேம்படுத்தப்பட்ட முன்னுரிமை' நாடாகும், அதாவது இலங்கை ஏற்றுமதியாளர்கள் பல தயாரிப்பு நிரல்களில் பூஜ்ஜியம் அல்லது குறைக்கப்பட்ட வரி விகிதங்களிலிருந்து பயனடையலாம். ஏற்றுமதியாளர்கள் இந்தப் பயனைப் பெறுவதற்கு நான்கு படித்தரங்களை DCTS வழிகாட்டி வழங்குகிறது.

## ஏற்புடைய கட்டணங்கள்

இந்த அத்தியாயத்தின் படிமுறை 9 இல் விளக்கப்பட்டுள்ளபடி, தயாரிப்பாளர்கள்/ஏற்றுமதியாளர்கள் சரியான HS குறியீட்டைக் கண்டறிந்த பின்னர் ஏற்புடைய கட்டணங்கள், தீர்வைகள், தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளைத் தீர்மானிக்க முடியும். ஏற்புடைய கட்டண விகிதங்களைத் தீர்மானிக்க, தயாரிப்பாளர்கள் மற்றும்ஃஅல்லது ஏற்றுமதியாளர்கள் ஐக்கிய இராச்சிய ஒருங்கிணைந்த இணையவழி கட்டண ஆவணத்தில் விரைவான தேடலை மேற்கொள்ளலாம். தயாரிப்பைப் பொறுத்து, பல்வேறு வகையான கட்டணங்கள் விதிக்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும். பல்வேறு வகையான கட்டணங்கள் பற்றிய ஒரு மேலோட்டத்திற்கு, இந்த கையேட்டின் இணைப்பு I  ஐப் பார்க்கவும்..

## உற்பத்தி இடம் தொடர்பான விதிகள் (Rules of origin)

தயாரிப்பாளர்கள்/ஏற்றுமதியாளர்கள் வேறு நாடுகளில் இருந்து மூலப்பொருட்களை எந்த அளவிற்கு கொள்வனவு செய்யலாம் மற்றும் முன்னுரிமை கட்டண விகிதங்களில் இருந்து பயனடைவதற்காக, தயாரிப்பு 'இலங்கை' உற்பத்தி இடம் என்று உரிமை கோரலாம் என்பதை உற்பத்தி இடம் தொடர்பான விதிகள் (சுரடநள ழக ழசபைைெ) குறிப்பிடுகின்றன. தயாரிப்பாளர்கள்/ஏற்றுமதியாளர்கள், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் பெறுமதி, விலை மற்றும் தயாரிப்பு செயன்முறைகள் பற்றிய ஆவண ஆதாரத்தை வைத்திருக்க வேண்டும். பொருட்களின் உற்பத்தி இடத்தைத் தீர்மானிப்பதற்கான அளவுகோல்கள் பற்றிய மேலும் தகவலுக்கு உற்பத்தி இடம் தொடர்பான விதிகள், இணைப்பு ஐ  ஐப் பார்க்கவும்.

## தரநிலைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள்

இந்த கைநூலின் அத்தியாயங்கள் 2 மற்றும் 3, இந்த கைநூலில் உள்ள தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான ஏற்புடைய தர நிலைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய விரிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது. தரநிலைகள் மற்றும் ஒழுங்கு முறை இறக்குமதி தேவைகள் பற்றிய னுஊவுளு வழிகாட்டி அனைத்து தேவைப்பாடுகள் பற்றிய ஒரு பயனுள்ள கண்ணோட்டத்தை வழங்குகிறது.

**விரைவான உதவிக்குறிப்பு: உங்கள் தயாரிப்பின் ஏற்றுமதித் தகுதியைச் சரிபார்க்கவும்**

இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள தயாரிப்புகள் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு பிரித்தானியாவுக்கு இறக்குமதி செய்யப்படலாம் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், அவர்கள் ஒரே மாதிரியான தயாரிப்புக் குறியீடுகளுக்குள் வரக்கூடிய ஒத்த மற்றும் புதுமையான தயாரிப்புகளுக்கான தகுதி குறித்து அவர்களது வர்த்தக சங்கம் அல்லது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிரதிநிதிகளிடம் பேசுவது பெரிதும் பரிந்துரைக்கப்படுகிறது. ஏற்றுமதியாளர்கள் இலங்கையின் ஏற்றுமதி கொள்கையுடன் நன்கு பரீட்சயமாக இருக்க வேண்டும்

## DCTS இன் கீழ் விருப்பத்தேர்வுகளைக் கோருதல்

விருப்பத்தேர்வுகளைக் கோர, இலங்கை ஏற்றுமதியாளர்கள் தாங்கள் அவ்வாறு செய்யத் தகுதியுடையவர்கள் என்பதை உறுதிசெய்து, வர்த்தக விலைப்பட்டியல் அல்லது பொதியிடல் பட்டியலில் அல்லது படிவம் A இல் இட பிரகடனத்தின் வடிவில் பொருட்களின் உற்பத்தி இடம் பற்றிய ஆவண ஆதாரத்தை வழங்க வேண்டும். நடைமுறையில், விற்பனை ஒப்பந்தத்தை கலந்துரையாடி கையொப்பமிடுவதற்கு முன் இந்த படிமுறை பூர்த்திசெய்யப்படுகிறது என்பதை கவனத்திற்கொள்ளவும். அடுத்து, தெரிவுசெய்யப்பட்ட தயாரிப்புகளை பிரித்தானியாவில் இறக்குமதி செய்ய முடியுமா என்று சரிபார்க்கவும். கொள்முதல், செலவு மற்றும் பெறுமதி மற்றும் கூறுப் பொருட்களின் உற்பத்தி செயன்முறைகள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் பொருட்கள் மற்றும் கூறு பொருட்களின் உற்பத்தி இடம் உட்பட, துணை ஆவண ஆதாரங்களை வழங்குமாறு ஏற்றுமதியாளர்கள் கேட்கப்படலாம். மேலும் தகவலுக்கு, இந்த கைநூலின்  இணைப்பு IV ஐப் பார்க்கவும்.


© Shutterstock.com

# 02 தயாரிப்பு மற்றும் உற்பத்தி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல்

வணிகம் பதிவு செய்யப்பட்டு ஏற்றுமதிக்குத் தகுதி பெற்றவுடன், பிரித்தானியாவுக்கு வெற்றிகரமாக ஏற்றுமதி செய்வதற்கான அனைத்து உற்பத்தித் தேவைப்பாடுகள் மற்றும் தயாரிப்பு விவரக்குறிப்புகளைப் பூர்த்தி செய்வதே அடுத்த மற்றும் மிக முக்கியமான படியாகும். தயாரிப்பு மற்றும் உற்பத்தித் தேவைப்பாடுகளின் இரண்டு தொகுப்புகள் தயாரிப்பாளர்களுக்கு ஏற்புடையதாகும். முதலாவது பிரித்தானிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின் கீழ் வழங்கப்பட்ட கட்டாயத் தேவைப்பாடுகள், அவை இந்த அத்தியாயத்தில் மேலும் விளக்கப்பட்டு உள்ளன. இரண்டாவது, சட்டப்படி தேவைப்படாத ஆனால் கொள்வனவாளர் மற்றும் நுகர்வோரால் கோரப்படுகின்ற தன்னார்வ சான்றிதழ்கள், அவை இந்த கைநூலின் அத்தியாயம் 3 இல் விளக்கப்பட்டுள்ளன

தயாரிப்பாளர்கள் தங்கள் தயாரிப்புகள் ஏற்றுமதிக்குத் தயாராகும் முன் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாய, சட்டத் தேவைப்பாடுகள் ஆறு வகைகளாக உள்ளன. அவ்வகைகளாவன:

- தயாரிப்பு பாதுகாப்பு
- அழிவடைந்துவரும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பயன்பாடு
- புலமைச் சொத்துரிமைகள் (IPRs);
- தயாரிப்பு பேண்தகுதன்மை
- தயாரிப்பு பொதியிடல்
- தயாரிப்பு அடையாளமிடல்

ஒவ்வொரு வகைக்குமான தேவைப்பாடுகள் தயாரிப்பு, வடிவமைப்பு மற்றும் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களைப் பொறுத்து மாறுபடும் என்பதை தயாரிப்பாளர்கள் கவனிக்க வேண்டும்.

இந்த தேவைப்பாடுகள் உற்பத்தி செயன்முறையின் வெவ்வேறு கட்டங்களில் ஏற்புடையதாகும். சில தேவைப்பாடுகள் மூலப பொருட்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும், மற்றவை வெவ்வேறு உற்பத்தி நிலைகளுக்கும் ஏற்புடையதாகும். ஏற்புடைய சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதைக் காட்டும் துணை ஆவணங்களை உங்கள் விநியோகஸ்தர்கள் வழங்குவதை உறுதிசெய்யவும்.

# தயாரிப்பு பாதுகாப்பு

## பொதுவான தயாரிப்பு பாதுகாப்பு

பிரித்தானியா தனது சந்தைகளில் “பாதுகாப்பான தயாரிப்புகளை” மட்டுமே வைக்க அனுமதிக்கிறது. இதன் பொருள் என்ன? ஒரு வாடிக்கையாளர் ஒரு கடையில் இருந்து ஒரு பொருளை வாங்கும் போது, அதன் பயன்பாட்டிலிருந்து அவர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கு நேரடி அல்லது மறைமுக ஆபத்துகள் எதுவும் இருக்கக்கூடாது. பொது தயாரிப்பு பாதுகாப்பு விதிமுறைகள், 2005 வாடிக்கையாளர்களால் கொள்வனவு செய்யக்கூடிய அனைத்து தயாரிப்புகளுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது. அத்தகைய தயாரிப்புகளின் உதாரணங்களில் டி-ஷர்ட்கள், பணப்பைகள், கைப்பைகள் மற்றும் வீட்டு அலங்கார பொருட்கள் ஆகியவை அடங்கும்.

அனைத்து தயாரிப்புகளிலும் மனித ஆரோக்கியத்திற்கு ஏதேனும் மறைமுக ஆபத்துகள் மற்றும் பயன்பாட்டிலிருந்து பாதுகாப்பு மற்றும் அத்தகைய மறைமுக ஆபத்துகளுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் இருப்பதை உறுதிசெய்யுங்கள். இந்த தகவல் தயாரிப்பு அடையாள குறியீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட சில தயாரிப்பு பாதுகாப்பு இணக்க நடைமுறை களுக்கு பெட்டி 5 ஐப் பார்க்கவும். ஒரு தயாரிப்பு பாதுகாப்பற்றதாகக் கண்டறியப்பட்டால் என்ன நடக்கும் என்பதைப் பற்றி மேலும் அறிய, இந்த கைநூலின் இணைப்பு II ஐப் பார்க்கவும்.

### பெட்டி 5: தயாரிப்பு பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள்

**தயாரிப்பு பாதுகாப்பு சட்டத்தை பூர்த்தி செய்தல்**

- பதிவுகளைபேணுதல்:தயாரிப்புவடிவமைப்பு,பயன்படுத்தப்படும்மூலப்பொருட்கள்மற்றும்தொடர்புடைய விநியோகஸ்தர்கள்,தயாரிப்பு குறியீடு மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட தயாரிப்புக்கான உற்பத்தித்தொகுதி போன்ற அனைத்துதொழில்நுட்பதகவல்களையும் ஆவணப்படுத்துவதுடன், அதன்வன் அல்லது மென்பிரதியை ஐந்து ஆண்டுகளுக்கு சேமித்து வைக்கவும்.
- பாதுகாப்பு அறிவுறுத்தல்கள்:தயாரிப்பை எவ்வாறு பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவது என்பது குறித்த ஒரு அறிவுறுத்தல் அட்டையைச் சேர்க்கவும்.
- குறிக்கப்பட்ட தரநிலைகளைப் பயன்படுத்தவும் (ஏற்புடையதாயின்): குறிக்கப்பட்ட தரநிலைகளை பயன்படுத்துவது, தயாரிப்பு பாதுகாப்புச் சட்டத்துடன் ஒரு “இணக்கத்தின் அனுமானத்தை” காட்டதயாரிப்பாளர்களுக்கு உதவுகிறது. குறிக்கப்பட்ட தரநிலைகளைப் பற்றிய மேலும் விபரங்களை இங்கு பெறலாம்.
- தயாரிப்பு பாதுகாப்பு குறித்த விழிப்பூட்டல்கள்: தயாரிப்பு பாதுகாப்பு மற்றும் தர நிலைகளுக்கான பிரித்தானிய அலுவலகம் தயாரிப்பு பாதுகாப்பு விழிப்பூட்டல்கள், அறிக்கைகள் மற்றும் மீளளழைப்புகள் ஆகியவற்றை தொடர்ந்து வெளியிடுகிறது. தயாரிப்புப்பாதுகாப்புச் சிக்கல்களின் வகையைக் கண்டறிந்து, அவற்றின் தயாரிப்பு வடிவமைப்பில் அவற்றைத் தடுக்கும் வகையில் அவற்றைத் தீர்ப்பதை உறுதிசெய்ய, தயாரிப்பாளர்கள் அவற்றை பார்வையிட வேண்டும்.



# இரசாயன ஒழுங்குமுறையின் பதிவு, மதிப்பீடு, அங்கீகாரம் மற்றும் கட்டுப்பாடு

தோல், புடவை அல்லது ஆடைகளை உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் மனித ஆரோக்கியத்திற்கும் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் நச்சு கூறுகளைக் கொண்டிருக்கலாம். இவை மிகவும் அதிக கரிசனைக்குரிய பொருட்கள் (SVHCs) என்றும் அறியப்படுகின்றன. ளுஏஉஊகள் பற்றிய மேலும் தகவலுக்கு பெட்டி 6 ஐப் பார்க்கவும்.

இரசாயனப் பொருட்களின் பதிவு, மதிப்பீடு, அங்கீகாரம் மற்றும் கட்டுப்பாடு (REACH) ஒழுங்குமுறை SVHC கள் மற்றும் அவற்றின் பயன்பாடு குறித்த விதிகளை வகுக்கிறது. இது பொருட்களை தயாரிக்க அல்லது உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் இரசாயனங்களுக்கு ஏற்புடையதாகும். உதாரணமாக, ஆபரண தயாரிப்புகளில், ஈயத்தின் செறிவு எடையில் 0.05% க்கு சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கக்கூடாது மற்றும் உலோகத்தின் எடையில் காட்மியத்தின் செறிவு 0.01% (100 மிக/கிகி) ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

இந்த கைநூலில் உள்ள தயாரிப்புகளில் பொதுவாகக் காணப்படும் SVHCகள் மற்றும் SVHCகளைப் பயன்படுத்துவது பற்றிய மேலும் தகவலுக்கு, இணைப்பு II ஐப் பார்க்கவும்.

### பெட்டி 6: SVHC என்றால் என்ன?

ஒரு பொருள் எப்போது SVHC ஆகும்:
- இது புற்றுநோயை ஏற்படுத்தும் அல்லது மீளுற்பத்திக்கு நச்சுத்தன்மை வாய்ந்தது
- இது நீண்ட காலத்திற்கு சூழலில் தங்கியிருக்கும்
- இது மனித உடலுக்குள் குவிந்து தங்குகிறது.

உதாரணமாக: புடவைகளுக்கு ஒரு மேற்பூச்சு அடுக்கு கொடுக்க, தயாரிப்பாளர்கள் பென்சோட்ரியாசோல் கலவைகளைக் கொண்ட UV-320, UV-327, UV-328 மற்றும் UV-350 போன்ற இரசாயனங்களைப் பயன்படுத்துகின்றனர். இவை நச்சுத்தன்மை வாய்ந்தவை, நீடித்தவை மற்றும் சூழலில் தங்கிவிடக்கூடியவை. இந்த இரசாயனங்களுக்கு தொடர்ந்து தாக்கத்திற்குள்ளாவது மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும், எனவே அவை SVHC களாக வகைப்படுத்தப்படுகின்றன.

### REACH இணக்கம்

இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து தயாரிப்புகளும் பிரித்தானிய சந்தையில் நுழைவதற்கு முன்பு REACH இணக்க முடையதாக இருக்க வேண்டும். REACH இணக்கம் சான்றுப்படுத்தப்பட்ட மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதுடன், விநியோகஸ்தர்கள் விலைப்பட்டியல் மற்றும் சோதனை சான்றிதழ்களை வழங்குவதை உறுதி செய்யவும். பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் மற்றும் அபாயகரமான பொருட்கள் அனுமதிக்கப்பட்ட வரம்புகளுக்குள் இருப்பதை இந்த சான்றிதழ்கள் உறுதிப்படுத்துகின்றன. REACH கண்காணிப்பு இருந்தால், விலைப்பட்டியல்களைச் சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் மற்றும் சான்றிதழ்களை சோதனை செய்வது பயனுள்ளதாக இருக்கும்.

### பெட்டி 7: இலங்கையில் REACH பரிசோதனை

QIMA மற்றும் ளுபுளு ஆகியவை இலங்கையில் REACH சோதனைச் சேவைகளை வழங்கும் இரண்டு மூன்றாம் தரப்பு ஆய்வகங்களாகும். REACH ஆய்வுகூட சோதனைக்கு $300 டொலர்கள் முதல் $600 டொலர்கள் வரை செலவாகும், இது சோதனை செய்யப்படும் பொருட்கள் மற்றும் மாறுபாடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.

## உயிர்க்கொல்லிகளின் பயன்பாடு

உயிர்க்கொல்லிகள் பூஞ்சை மற்றும் பூச்சிகள் போன்ற தீங்கு விளைவிக்கும் விலங்கு அல்லது தாவரத்தின் தாக்கத்தை துண்டிக்கின்றன அல்லது குறைக்கின்றன, மேலும் அவை விலங்குகள் மற்றும் மனிதர்களைப் பாதுகாக்கப் பயன்படுகின்றன. பூச்சி விரட்டி மற்றும் மரப் பதனப்பொருட்கள் பொதுவான உதாரணங்களாகும். புடவை அல்லது துணிப் பொருட்களில் கிருமிநாசினிகள் மற்றும் பாசிக்கொல்லிகள் போன்ற உயிர்க்கொல்லி பொருட்கள் இருக்கலாம். தோல் பொருட்கள் எந்த நுண்ணுயிரியல் சிதைவையும் தடுக்க உயிர்க்கொல்லிகளைப் பயன்படுத்தலாம். உயிர்க்கொல்லிகளைக் கொண்ட அனைத்துப் பொருட்களும் “பதப்படுத்தப்பட்ட பொருட்கள்“ என்று அழைக்கப் படுகின்றன. இந்த உயிர்க்கொல்லி பொருட்கள் மனிதர்களுக்கோ அல்லது விலங்குகளுக்கோ நேரடியாகப் பிரயோகிக்கப்படுவதில்லை, ஆனால் அவை பெரும்பாலும் மனிதர்கள் பயன்படுத்தும் பொருட்களில் காணப்படுகின்றன. அத்தகைய அனைத்து உயிர்க் கொல்லி பொருட்களின் வகைகளின் விவரங்களை இங்கே காணலாம்.

இந்த கைநூலில் உள்ள தயாரிப்புகள் “பதப்படுத்தப்பட்ட பொருட்களாக“ கருதப்படும், மேலும் தயாரிப்பாளர்கள் தங்கள் விநியோகஸ்தர்களிடம் பேசி மூலப்பொருட்களில் உயிர்க் கொல்லிகளின் பயன்பாட்டை உறுதிப்படுத்த வேண்டும்.

## நிலைத்திருக்கும்  சேதன மாசுபடுத்திகள்

நிலைத்திருக்கும் சேதன மாசுபடுத்திகள் (POPs) எளிதில் செயலற்றுப் போகாத இரசாயன பொருட்கள் ஆகும். நிலைத்திருக்கும் சேதன மாசுபடுத்திகள் (POPs) நீண்ட காலத்திற்கு சூழலில் இருக்கும் பல்வேறு புவியியல் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட முடியும் மீன், பறவைகள் மற்றும் விலங்குகளில் குவிந்திருக்க முடியும் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். உதாரணங்களில் DDT, எண்டோசல்பான், ஆல்ட்ரின் (Aldrin) மற்றும் எல்ட்ரின் (Eldrin) ஆகியவை அடங்கும். நிலைத்திருக்கும் சேதன மாசுபடுத்திகள் (POPs) பூச்சிக்கொல்லிகள் மற்றும் கைத்தொழில்துறை இரசாயனங்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன, மேலும் நிலைத்திருக்கும் சேதன மாசுபடுத்திகள் (POPs) பொருட்கள், தயாரிப்புகள் அல்லது ஆடைகள் போன்ற உற்பத்திப் பொருட்களில் வேண்டுமென்றே செய்யப்படாத மாசுபாடு காணப்பட்டாலேயன்றி, அவற்றின் பயன்பாடு பொதுவாக பிரித்தானியாவில் தடைசெய்யப்பட்டுள்ளது. பிரித்தானியா வேண்டுமென்றே செய்யப்படாத மாசுபடுத்திகளின் தடயத்தின் அனுமதிக்கப்பட்ட வரம்புகளை பட்டியலிட்டுள்ளது, அதை இங்கே அணுகலாம்.

உற்பத்தி செயன்முறைகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் எந்த நிலைத்திருக்கும் சேதன மாசுபடுத்திகளையும் கொண்டிருக்கவில்லை என்பதை தயாரிப்பாளர்கள் உறுதி செய்ய வேண்டும். தயாரிப்பாளர்கள் தங்கள் விநியோகஸ்தர்களிடம் இதைப் பற்றிப் பேசவும், பெறப்பட்ட மூலப்பொருட்களில் ஏதேனும்நிலைத்திருக்கும் சேதன மாசுபடுத்திகள் (POPs) உள்ளதா என்பதைச் சரிபார்க்க எழுமாறான சோதனைகளைச் செய்யவும் பரிந்துரைக்கப்படுகிறது.

## இரவு ஆடை பாதுகாப்பு

13 வயதுக்குட்பட்ட நபர்கள் அணியக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட குழந்தைகளுக்கான இரவு ஆடைகள், எரிதன்மை செயலாற்றுகை (flammability performance) தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் இழைகளிலிருந்து தயாரிக்கப்பட வேண்டும். பைஜாமாக்கள், குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் குளியலின் பின் அணியும் பருத்தி உடைகள் ஆகியவை இந்தத் தேவையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன, ஆனால் அவை பொருத்தமான அடையாள குறியீட்டைக் கொண்டிருக்க வேண்டும். வயது வந்தோருக்கான இரவு ஆடைகளும் பொருத்தமான அடையாள குறியீட்டு தேவைப்பாட்டுக்கு இணங்க வேண்டும். எரிதன்மை செயலாற்றுகை தேவைப்பாடுகள் பற்றிய மேலும் தகவலுக்கு  இணைப்பு II  ஐப் பார்க்கவும்.






# அழிவடைந்து வரும் தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இருந்தான தயாரிப்புகள்

சிலதயாரிப்புகள் பூமியில் இருந்து அழிவடையும் அபாயத்தில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகளில் இருந்து வரும் அன்னிய அல்லது அரிய மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. ஆபத்திற்குள்ளாகும் வன விலங்குகள் மற்றும் தாவர இனவகைகளின் சர்வதேச வர்த்தகம் பற்றிய சாசனம் (CITES)  என்பது அத்தகைய மூலப் பொருட்களின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்தும் ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். ஊஐவுநுளு இன் கீழ், தாவரங்கள் மற்றும் விலங்குகள் பூமியில் இருந்து மறைந்து போகும் அபாயத்தைப் பொறுத்து வகைப்படுத்தப்படுகின்றன. முற்றிலும் காணாமல் போகும் அபாயத்தில் உள்ள இனங்கள் CITES பின் இணைப்பு I  இல் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு தாவரம் அல்லது விலங்கு  CITES இணைப்பு II அல்லது III இல் வகைப்படுத்தப்பட்டால், அது மறைந்துவிடும் அபாயம் அதிகம் இல்லை ஆனால் அதன் வர்த்தகம் இன்னும் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.  வணிகங்களைப் பொறுத்தவரை, அவர்கள் தங்கள் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கு முன் அனுமதிக்கு விண்ணப்பித்து, ஏற்றுமதி அனுமதியைப் பெற வேண்டும்.

இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய இரண்டும் CITES இல் கைச்சாத்திட்டுள்ளன. இதன் பொருள் இரண்டு நாடுகளும் அவற்றில் உள்ள வணிகங்களும் அதற்கு இணங்க வேண்டும். இலங்கையில், CITES வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தால்  நடைமுறைப் படுத்தப்படுகிறது. உங்கள் தயாரிப்பு CITES இணைப்பு II அல்லது III இல் வகைப்படுத்தப்பட்ட விலங்கு அல்லது தாவரத்தின் பொருட்களால் செய்யப்பட்டிருந்தால், CITES சான்றிதழைப் பெற விண்ணப்பப் படிவத்தை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கவும். துணை ஆவணங்கள் மற்றும் மேலும் விவரங்களுக்கு இங்கே பார்க்கவும்.

**விரைவான உதவிக்குறிப்பு: ஏற்றுமதி தயாரிப்புகளில் CITES இனங்கள் உள்ளனவா என சரிபார்க்கவும்**

CITES பிற்சேர்க்கைகளில் ஏதேனும் ஒரு விலங்கு அல்லது தாவரம் பட்டியலிடப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க, இந்த இணைப்பை கிளிக் செய்து, தேடல் பகுதியில் (search bar) தாவரம் அல்லது விலங்கின் பெயரை உள்ளிடவும்.

# புலமைச் சொத்துரிமைகள்

இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தயாரிப்பும் ஒரு தனித்துவமான கருத்திலிருந்து வருகிறது. இந்த கருத்தை சந்தையில் விற்கக்கூடிய ஒன்றாக மாற்ற ஆக்கத்திறன், தனித்துவமான வடிவமைப்புகள், பல மாத ஆராய்ச்சி மற்றும் குறிப்பிட்ட அறிவு தேவை. சட்டம், ஜீசுகள் வடிவில், இந்த படைப்புகளைப் பாதுகாக்கிறது. பல வகையான ஜீசுகள் உள்ளன, ஒவ்வொன்றும் வெவ்வேறு செயற்பாடுகளைச் செய்கின்றன. இவைகாப்புரிமைகள், பதிப்புரிமை, வடிவமைப்புகள், வர்த்தக சின்னங்கள், புவியியல் குறிப்புகள் மற்றும் வர்த்தக ரகசியங்கள் ஆகியனவாகும்.

இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள தயாரிப்புகளின் தயாரிப்பாளர்கள் பிரித்தானிய தயாரிப்பாளர்களின் ஜீசு உரிமைகளை அவர்கள் மதிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும். அவை மதிக்கப்படாவிட்டால், அத்தகைய தயாரிப்புகள் சந்தையில் நுழைய அனுமதிக்கப்படாது. பிரித்தானியாவில் உள்ள ஜீசு விதிகளை தயாரிப்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே இதன் பொருள்.

அதேவேளை, இலங்கையில் தனித்துவமான தயாரிப்புகள் பாதுகாக்கப்படவும் முடியும். அவ்வாறு செய்ய, இலங்கை தயாரிப்பாளர்கள் அதற்காக விண்ணப்பித்து சரியான ஜீசு பதிவை பெற வேண்டும். இதன் பின்னர், ஜீசு உரிமையாளர் உரிம ஏற்பாடுகளில் நுழையலாம் என்பதோடு, பிறர் தங்கள் ஜீசு களை மீறும் வகையில் பொருட்களை உற்பத்தி செய்தல், தயாரித்தல், விற்பனை செய்தல் மற்றும்ஃஅல்லது இறக்குமதி செய்வதிலிருந்து தடுக்க தங்கள் உரிமையைப் பயன்படுத்தலாம். இந்த கைநூலின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ள தயாரிப்புகள் அனைத்தும் தனித்துவமான தரச்சின்னங்கள் (வர்த்தக முத்திரைகளால் பாதுகாக்கப்படுகின்றன) மற்றும் வடிவமைப்புகளை (வடிவமைப்புகளால் பாதுகாக்கப்படுகின்றன) கொண்டுள்ளன. இந்த பிரிவு வர்த்தக சின்னங்கள் மற்றும் வடிவமைப்புகள், இலங்கையில் உங்கள் ஜீசு ஐ எவ்வாறு பாதுகாப்பது மற்றும் ஏற்றுமதி செய்யும் தயாரிப்பு பிரித்தானியாவில் ஜீசு பாதுகாப்புகளை மீறினால் என்ன நடக்கும் என்பது பற்றிய ஒரு மேலோட்டத்தை வழங்குகிறது.

## வர்த்தக சின்னங்கள்

வர்த்தக சின்னங்கள் ஒரு வணிகத்தின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மற்றொரு வணிகத்திலிருந்து வேறுபடுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் அடையாளங்களாகும். எழுத்துகள், சொற்கள், எண்கள், வரைபடங்கள் மற்றும் இணைந்த சின்னங்கள் போன்ற காணக்கூடிய அடையாளங்கள்  வர்த்தக சின்னப் பதிவைப் பெறலாம். அவை தயாரிப்பு வடிவம் மற்றும் பொதியிடலுக்கும் வழங்கப்படுகின்றன. ஜீசு இன் ஏனைய வடிவங்களைப் போலவே, வர்த்தக சின்னங்கள் விண்ணப்பிக்கும் நாட்டில் பாதுகாப்பு அளிக்கப்படுகின்றன. உங்கள் தரச்சின்னத்தைப் பாதுகாக்க, உங்கள் வர்த்தக சின்னத்தை  இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தில் பதிவு செய்யுங்கள். ஏற்புடைய பதிவுக் கட்டணங்களுக்கு இங்கே பார்க்கவும்.

### விரைவான உதவிக்குறிப்பு

உங்கள்  தரச்சின்னத்தைப் பாதுகாக்க, வர்த்தக சின்ன பதிவு செயன்முறையை விரைவுபடுத்தவும்  மற்றும் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் வர்த்தக சின்னத்தைப் பதிவு செய்வதற்கான செலவுகள் மற்றும் நன்மைகளை மதிப்பிடவும் ஒரு ஜீசு சட்டத்தரணியிடம் பேசுங்கள்.

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பணம் செலவாகும் என்பதை நினைவில் கொள்வது அவசியம். வெவ்வேறு நாடுகளில் பதிவு செய்வதற்கு விண்ணப்பிப்பதற்கான செலவுகள் மற்றும் நன்மைகளைப் பற்றித் தெரிந்துகொள்வதை உறுதிசெய்யுங்கள்.

வர்த்தக சின்னம் பதிவு செய்யப்பட்டவுடன், வர்த்தக சின்ன உரிமையாளர் 10 ஆண்டுகளுக்கு வர்த்தக சின்னத்தின் மீது பிரத்யேக உரிமைகளை வழங்கும் பதிவுச் சான்றிதழைப் பெறுகிறார். ஏற்புடைய கட்டணங்களைச் செலுத்தியவுடன் இதை பருவகால அடிப்படையில் புதுப்பிக்கலாம். உரிமையாளர் வர்த்தக சின்னத்தை பிரத்தியேகமாகப் பயன்படுத்த முடியும், அதாவது உரிமையாளரின் அனுமதியின்றி அந்த வர்த்தக சின்னத்தை வேறு எவரும் பயன்படுத்த முடியாது. மாற்றீடாக, உரிமக் கட்டணத்திற்கு ஈடாக உரிமையாளர் மூன்றாம் தரப்பினருக்கு வர்த்தக சின்னத்தை உரிமம் அளிக்கலாம்.

பல நாடுகளில் வர்த்தக சின்ன பாதுகாப்பைப் பெற, விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன. தேசிய வழியின் கீழ், விண்ணப்பதாரர் தனது தரச்சின்னப் பெயரைப் பதிவுசெய்து பாதுகாக்க விரும்பும் அனைத்து நாடுகளிலும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கிறார். சர்வதேச வழித்தடத்தின் கீழ், விண்ணப்பதாரர் 130 நாடுகளில் பாதுகாப்பைப் பெற  மெட்ரிட் முறையை பயன்படுத்தி ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.



## வடிவமைப்புகள்:

வடிவமைப்புகள் அல்லது கைத்தொழில்துறை வடிவமைப்புகள் முப்பரிமாண (தயாரிப்பு வடிவம் அல்லது கட்டமைப்பு) (product shape or configuration) அல்லது இரு பரிமாண வடிவத்தில் (நிறங்கள், கட்டமைப்புகள் மற்றும் வடிவங்கள்) (colours, textures and patterns) ஒரு தயாரிப்பை உயிர்ப்புள்ளதாக்கும். இவை தயாரிப்பின் "அலங்கார அம்சம்" ('ornamental aspect') அல்லது தயாரிப்பின் அழகியல் மற்றும்வெளிப்புறத் தோற்றத்தை (aesthetics and exterior appearance) உருவாக்குகின்றன.'உங்கள் வடிவமைப்பைப் பதிவு செய்வது பற்றிய மேலதிக விவரங்களைப் பெற இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தை  நாடவும். விண்ணப்பதாரர்கள் தங்கள் வடிவமைப்பு பெட்டி 8 இல் வழங்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதைக் காட்ட வேண்டும்.

வடிவமைப்பு பதிவு செய்யப்பட்டவுடன், விண்ணப்பதாரர் 10 ஆண்டுகளுக்கு வடிவமைப்பின் மீது பிரத்யேக உரிமையை வழங்கும் பதிவுச் சான்றிதழைப் பெறுகிறார். பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர் இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தில் புதுப்பித்தல் விண்ணப்பத்தை சமர்ப்பித்து வடிவமைப்பு பதிவை புதுப்பிக்க முடியும்.

நடைமுறையில், விண்ணப்பதாரர்கள் முழு விண்ணப்ப செயன்முறையிலும் அவர்களுக்கு உதவ பெரும்பாலும் ஒரு ஜீசு முகவரை பணியமர்த்துவார்கள். முகவருக்குச் செலுத்தப்படும் கட்டணங்களும் விண்ணப்பத்தின் சிக்கலான தன்மையைப் பொறுத்தது.

வடிவமைப்பு பாதுகாப்பைப் பெற்றவுடன், பணம் சம்பாதிப்பதற்காக பாதுகாக்கப்பட்ட வடிவமைப்பை பிரதியெடுக்கும் அல்லது கணிசமாக பிரதியெடுக்கும் வடிவமைப்புகளைக் கொண்ட பொருட்களை உற்பத்தி செய்தல், தயாரித்தல், விற்பனை செய்தல் மற்றும்ஃஅல்லது இறக்குமதி செய்வதிலிருந்து உரிமையாளர் தடுக்கலாம். மிக முக்கியமாக, எந்தவொரு வடிவமைப்பு பாதுகாப்பும் எல்லைக்குட்பட்டது என்பதைக் கவனியுங்கள், அதாவது அத்தகைய பாதுகாப்பு வழங்கப்பட்ட நாட்டில் மட்டுமே அது பாதுகாக்கப்படுகிறது.

பல நாடுகளில் வடிவமைப்பு பாதுகாப்பைப் பெற, விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன. தேசிய வழியின் கீழ், ஒரு விண்ணப்பதாரர் தனது வடிவமைப்பைப் பதிவுசெய்து பாதுகாக்க விரும்பும் அனைத்து நாடுகளிலும் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கிறார். சர்வதேச வழியின் கீழ், விண்ணப்பதாரர் 90 க்கும் மேற்பட்ட நாடுகளில் பாதுகாப்பைப் பெற ஹேக் முறைமையை பயன்படுத்தி ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.

### பெட்டி 8: வடிவமைப்பு பாதுகாப்பைப் பெறுவதற்கான தேவைப்பாடுகள்

- இது புதியதாக இருக்க வேண்டும், அதாவது பொது டொமைனில் ஏற்கனவே அதே வடிவமைப்பு இருக்ககூடாது.
- இது அசலானதாக இருக்க வேண்டும், அதாவது இது ஏற்கனவே உள்ள வடிவமைப்பின் ஒரு பிரதியாக இருக்க கூடாது.

### பெட்டி 9: உங்கள் தயாரிப்பை எவ்வாறு தனித்துவமாக்குவது

1. பிரித்தானியாவில் சரியான தயாரிப்பு சந்தையை நீங்கள் கண்டு அறிந்ததும், உங்கள் போட்டியாளர்களின் தயாரிப்பு சுய விவரங்களை ஆய்வு செய்து, உங்கள் தயாரிப்புகளை அவர்களிடம் இருந்து எவ்வாறு வேறுபடுத்தப்படலாம் என்பதைப் பார்க்கவும்.
2. ஒரு  அந்தரங்க ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமல், உங்கள் சமீபத்திய புத்தாக்கம் அல்லது தயாரிப்பு வடிவமைப்பு பற்றிய தகவலை ஏற்றுமதி முகவர், சாத்தியமான வர்த்தக பங்குதாரர் அல்லது விநியோகஸ்தர் ஆகியோருக்கு ஒருபோதும் தெரிவிக்க வேண்டாம். அந்தரங்கத்தன்மை ஒப்பந்தம் இல்லாமல் தகவலைப் பகிர்ந்தால், உங்கள் தனிப்பட்ட தயாரிப்பின் மீது வடிவமைப்பு பாதுகாப்பைக் கோரும் உரிமையை இழக்க நேரிடும்.

### விரைவான உதவிக்குறிப்பு

விற்பனை ஒப்பந்தத்தில் உங்கள் வர்த்தக சின்னம் மற்றும் வடிவமைப்பு பதிவு விவரங்களை எப்போதும் சேர்க்க நினைவில் கொள்ளுங்கள். இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தர் உங்கள் பாதுகாக்கப்பட்ட வர்த்தக சின்னம் மற்றும்/அல்லது வடிவமைப்பைப் பயன்படுத்தக்கூடிய விதி முறைகளைப் பற்றி கலந்துரையாடவும், மேலும் அத்தகைய பயன்பாட்டிற்கான தனி உரிமத்தில் நீங்கள் கையொப்பமிட விரும்பினால்.

உங்கள் இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தர் பிரித்தானியாவில் பதிவுசெய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட தரச்சின்ன பெயர் அல்லது வடிவமைப்பைப் பயன்படுத்த விரும்பினால், குறைந்தபட்சம் விற்பனை ஒப்பந்தத்தின் முழு காலத்தையும் உள்ளடக்கிய உரிமம் அல்லது அங்கீகாரத்தை வழங்குவதை உறுதிசெய்யவும்.

அங்கீகாரம் இல்லை என்றால் என்ன நடக்கும்? ஜீசு மீறல் பற்றிய மேலதிக தகவலுக்கு கீழே உள்ள துணைப்பிரிவைப் பார்க்கவும்.

## புலமைச்சொத்துரிமையை மீறினால் என்ன நடக்கும்?

ஜீசு மீறல் என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் முன் அனுமதியின்றி ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட ஜீசு ஐப் பயன்படுத்துவதாகும். உதாரணமாக, நீங்கள் தோல் கைப்பைகளை உற்பத்தி செய்து இலங்கையில் ஹைட் ரூ ஹேர் என்ற வர்த்தக சின்னத்தின் கீழ் விற்பனை செய்கிறீர்கள். இருப்பினும், ஹைட் ரூ ஹேர்  பிரித்தானியாவில் நன்கு அறியப்பட்ட கைப்பை நிறுவனமாகும். இதன் பொருள் நீங்கள் இந்த பொருட்களை பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்ய விரும்பினால், உரிமம் அல்லது அங்கீகார வடிவில் ஹைட் ரூ ஹேர்  என்ற தரச்சின்னத்தைப் பயன்படுத்த முன் அனுமதி பெற வேண்டும். அத்தகைய அனுமதியைப் பெறாமல் நீங்கள் கைப்பைகளை ஏற்றுமதி செய்தால், பிரித்தானியாவை தளமாகக் கொண்ட கைப்பை நிறுவனமான ஹைட் ரூ ஹேர் நிறுவனத்திற்கு பிரித்தானியாவில் பிரத்தியேகமாக அந்த தரச்சின்னத்தைப் பயன்படுத்துவதற்கான பாதுகாக்கப்பட்ட உரிமையை நீங்கள் மீறுகிறீர்கள்.

ஜீசு மீறல் ஒரு கடுமையான குற்றமாகும், மேலும் போலி மற்றும் மறுஉற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் நுழைவைக் கட்டுப்படுத்த நாட்டிற்குள் கொண்டுவரப்படும் துறைமுகத்தில் சுங்க அதிகாரிகளால் தீவிர நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பிரித்தானியாவில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு ஜீசு களையும் (வர்த்தக சின்னங்கள் மற்றும் கைத்தொழில்துறை வடிவமைப்புகள் உட்பட) உங்கள் தயாரிப்புகள் புறக்கணிப்பதைக் கண்டறிந்தால் அல்லது சந்தேகப்பட்டால், தயாரிப்புகளை நிறுத்தவோ, நிறுத்திவைக்கவோ அல்லது அழிக்கவோ கூட சுங்க அதிகாரிகளுக்கு உரிமை உண்டு. “பொருட்களை வைத்திருப்பவர்” அல்லது இறக்குமதியாளருக்கு அதுபற்றி றஉடனடியாகத் தெரிவிக்கப்படும். ஜீசு வைத்திருப்பவர், விதிமீறல் உள்ளதா என்பதை எழுத்துப்பூர்வமாக சுங்க அதிகாரிகளுக்குத் தெரிவிக்கத் தவறினால், மற்றும் தயாரிப்பை அழிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டால், மற்ற அனைத்து சுங்க நடைமுறைமைகளும் முடிந்த பின்னர் சுங்க அதிகாரிகள் தயாரிப்பை சந்தையில் வெளியிடுவார்கள்.


© Shutterstock.com



# தயாரிப்பு பேண்தகுதன்மை (Product sustainability)

2021ஆம் ஆண்டின் சூழல் சட்டம் “வன-அபாய பொருட்கள்“ (குசுஊள) அல்லது அத்தகைய குசுஊகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் தயாரிப்புகளை வணிக நடவடிக்கைகளில் பயன்படுத்த முடியாது, ஏனெனில் அவை காடழிப்புக்கு பங்களிக்கின்றன. பெட்டி 10 இல் “வன-அபாய பொருட்களை” (குசுஊள)  பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்.

£50 மில்லியனுக்கும் அதிகமான யூரோக்கள் உலகளாவிய நிதிப் புரள்வைக் கொண்ட பிரித்தானிய கொள்வனவாளர்களுக்கு விநியோகம் செய்யும் தயாரிப்பாளர்கள் குசுஊ திட்டத்திற்கு இணங்க வேண்டும். பெட்டி 10 இல் குறிப்பிடப்பட்டுள்ள குசுஊ களைப் பயன்படுத்தும், 500 தொன்கள் வருடாந்த அளவைத் தாண்டாத உற்பத்தியாளர்கள், விலக்கு பெற விண்ணப்பிக்கலாம்.

ஒரு தயாரிப்பு ஒரு குசுஊ அல்லது குசுஊ ஐப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு, மேலே குறிப்பிட்ட அளவுகோல்களைப் பூர்த்தி செய்தால், என்ன நடக்கும்?

இறக்குமதியாளர் பொருட்களைக் கண்டறிந்து, அதைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு உரிய சிரத்தையை மேற்கொள்ள வேண்டும், மேலும் சரக்கு தொடர்பான அனைத்து உள்ளூர் சட்டங்களையும் திருப்திப்படுத்தாததால் ஏற்படும் ஆபத்து மற்றும் அந்த ஆபத்தை எவ்வாறு குறைப்பது என இரண்டையும் அளவிட வேண்டும். பொருட்கள் தொடர்பான உள்ளூர் சட்டங்களின் உதாரணங்கள் நில பயன்பாடு மற்றும் உரிமை பற்றிய சட்டங்களாகும். தயாரிப்பாளர்களைப் பொறுத்தவரை, தயாரிப்பு உள்ளூர் சட்டத் தேவைகளைப் பூர்த்திசெய்கிறது என்பதையும், அவர்களின் தயாரிப்புகளிலிருந்து காடுகள் அழிக்கப்படுவதற்கான ஆபத்து மிகக் குறைவு என்பதையும் அவர்கள் நிரூபிக்க வேண்டும் என்பதே இதன் பொருள். வரவிருக்கும் குசுஊ திட்டத்திற்கு தயாரிப்பாளர்கள் நீண்ட காலத்திற்கு பதிவுகளை வைத்திருக்க வேண்டும்.

### பெட்டி 10: வன–ஆபத்து பண்டம் என்றால் என்ன?

**FRC என்பது:**

- ஒரு தாவரம், விலங்கு அல்லது உயிரினத்திலிருந்து தயாரிக்கப்படும் ஒரு பொருள் மற்றும்
- ஒரு காடு வெட்டப்பட்டு அந்த பொருளை தயாரிக்க விவசாய நிலமாக மாற்றப்படுகிறது.

பிரித்தானியா ஒரு குசுஊ திட்டத்தை அறிமுகப்படுத்தும் , அதன் கீழ் பின்வரும் தயாரிப்புகள் குசுஊ களாக வகைப்படுத்தப்படும்:

- பால் அல்லாத கால்நடை பொருட்கள் (மாட்டிறைச்சி மற்றும் தோல்)
  - கொகோ்
  - சோயா்
  - பாம் எண்ணெய் ̄யடஅ ழுடை).

இது ஒரு குறிகாட்டி பட்டியல் என்பதை நினைவில் கொள்ளவும். குசுஊ விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன் மட்டுமே குசுஊ பொருட்களின் இறுதி பட்டியல் வெளியிடப்படும்.

### பெட்டி 11: ஒரு பேண்தகு எதிர்காலத்திற்கு தயாரிப்பாளர்கள் எவ்வாறு தயாராகலாம்?

- உங்கள் விநியோகஸ்தர்களிடம் அவர்களின் மூலப்பொருட்களின் மூலங்கள் மற்றும் அவற்றை எப்படி காடுகளுக்கு ஏற்றதாக மாற்றுவது என்பதைப் பற்றி பேசுங்கள்.
- ஒவ்வொரு விநியோகஸ்தரிடமிருந்தும் கொள்வனவுகள் போன்ற முக்கிய தகவல்கள் மற்றும் வணிகப் பெயர், உரிமையாளரின் பெயர், அஞ்சல் முகவரி, வர்த்தக சின்னம், மின்னஞ்சல் மற்றும் இணைய முகவரி போன்ற ஒவ்வொரு விநியோகஸ்தரைப் பற்றிய தகவல்களும் பற்றிய பதிவுகளை பேணிவாருங்கள்.
- 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அல்லது 2025 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள குசுஊ திட்டம் தொடர்பான அனைத்துச் செய்திகளிலும் உங்களைத் தொடர்ந்து இற்றைப்படுத்திக் கொள்ளுங்கள்.
- கழிவுப் பொருட்களைப் பயன்படுத்துதல் அல்லது முற்றிலும் சூழலுக்கு உகந்த பொருட்களைப் பயன்படுத்துவது போன்ற தயாரிப்பு புத்தாக்கங்களில் ஈடுபடுங்கள். இது உங்கள் தயாரிப்புக்கான தனித்துவமான விற்பனைப் புள்ளியாக மாறுவதுடன், ஒரு சிறந்த சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள உங்களை அனுமதிக்கிறது.

# தயாரிப்பு பொதியிடல்

பொதியிடல் என்பது உங்கள் பொருட்களை சுற்றுதல், அவற்றைப் பாதுகாக்க மற்றும் அவை மிக உயர்ந்த தரத்தை பேணுவதை உறுதிசெய்ய சில பொருட்களைப் பயன்படுத்துவதாகும். 2015 ஆம் ஆண்டு பொதியிடல் (அத்தியாவசியத் தேவைப்பாடுகள்) விதிமுறைகள் படி, இதில் விற்பனை பொதியிடல், வகைப்படுத்தப்பட்ட பொதியிடல் மற்றும் போக்குவரத்து பொதியிடல் ஆகியவை அடங்கும். சட்டத்திற்கு உட்பட்ட வகையில் வெவ்வேறு பொதியிடல் அடுக்குகளை தயாரிப்பாளர்கள் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும் என்பதற்கான உதாரணம் பெட்டி 12 இல் உள்ளது.

தயாரிப்பு பொதியிடல், ஒரு தனி அலகில் உள்ள கூறுகளுக்கான பொதியிடல் உட்பட, இணைப்பு ஐஐ இல் விவரிக்கப்பட்டுள்ள அத்தியாவசியத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கிறது என்பதை உறுதிப்படுத்துங்கள். . பொதியிடல் மட்டுமீறியதாக இருக்கக்கூடாது. நுகர்வோர் தயாரிப்பை ஏற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்கும், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கும் தேவையான குறைந்தபட்ச அளவுக்கு அதை மட்டுப்படுத்தவும்.

தயாரிப்பாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், அத்தகைய பொதியிடல் பிரித்தானிய சந்தையில் வைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்கிறது என்பதை நிரூபிக்கும் தொழில்நுட்ப தகவல்களின் பதிவுகளை பேணிவர வேண்டும். அத்தியாவசியத் தேவைப்பாடுகளுக்கு இணங்கத் தவறினால் அல்லது பதிவுகளைப் பேணத் தவறினால் ஏற்படும் விளைவுகள் இணைப்பு ஐஐ  இல் விவரிக்கப்பட்டுள்ளன. இணக்கத்தை உறுதி செய்வதற்கான பயனுள்ள உதவிக்குறிப்புகளுக்கு  இந்த வழிகாட்டி ஐ பார்க்கவும்..

### பெட்டி 12: தயாரிப்பு பொதியிடல் பற்றிய உதாரணங்கள்

**பொதியிடலின் வெவ்வேறு அடுக்குகளைப் புரிந்துகொள்ளுதல்**

மான்செஸ்டரை தளமாகக் கொண்ட ஒரு கொள்வனவாளருக்கு 500 பாவாடைகளை வழங்குவதற்கான கொள்வனவு கட்டளையை இலங்கை தயாரிப்பாளர் ஒருவர் பெற்றுள்ளார். பாவாடைகள் தைக்கப்பட்டு, பொதிசெய்யத் தயாரானதும், தயாரிப்பாளர் மூன்று அடுக்கு பொதியிடலைப் பயன்படுத்துவார்:

- முதன்மை பொதியிடல்: பொதியிடல் என்பது இறுதி நுகர்வோருக்கு விற்கப்படும் ஒரு ஒற்றை பாவாடை அலகை உள்ளடக்கி, பாதுகாக்கப் பயன்படுகிறது.
- இரண்டாம் நிலை பொதியிடல்:பொதியிடல் பல பாவாடை அலகுகளை ஒன்றாக இணைக்கப் பயன்படுகிறது, ஒரு தொகுதிக்கு 10 அல்லது 20 என்று சொல்லலாம். இத்தொகதி நேரடியாக இறுதி நுகர்வோருக்கு விற்கப்படலாம் அல்லதுகையிருப்புகளை நிரப்ப மட்டுமே பயன்படுத்தப்படும்.
- மூன்றாம் நிலை பொதியிடல்: கையாளுதல் மற்றும் போக்குவரத்தின் போது அனைத்து 500 பாவாடைகளையும் பாதுகாக்க இந்த பொதியிடல் பயன்படுத்தப்படுகிறது. ஏற்பாட்டைப் பொறுத்து, ஏற்றுமதியாளர்கள் மூன்றாம் நிலை பொதியிடலையும் வழங்கலாம். மூன்றாம் நிலை பொதியிடலின் உதாரணங்களில் சாக்குகள் மற்றும் பெட்டிகள் அடங்கும். இருப்பினும், அதில் வீதி, கப்பல் அல்லது விமான கொள்கலன்கள் உள்ளடங்காது என்பதை நினைவில் கொள்ளவும்.



# தயாரிப்பு அடையாள குறியீடு இடுதல் (Product labelling)

தயாரிப்பு அடையாள குறியீடுகள் தயாரிப்பு கலவை, விலை, எண்ணிக்கை, அளவு, பயன்பாடு மற்றும் உற்பத்தி இடம் பற்றி நுகர்வோருக்கு தெரிவிக்கின்றன. விரிவான மற்றும் துல்லியமான அடையாள குறியீடுகள் நுகர்வோர் விரைவான கொள்முதல் தீர்மானத்தை எடுக்க உதவுவதோடு தரச்சின்ன பெறுமதியை அதிகரிக்க உதவுகின்றன. அடையாள குறியீடு இடுதல் நிபந்தனைகள் தயாரிப்பு சார்ந்தவை. ஆடை மற்றும் காலணி அடையாள குறியீடு தேவைப்பாடுகள் பற்றிய விரிவான கண்ணோட்டத்திற்கு இணைப்பு ஐஐ  ஐப் பார்க்கவும்.

**விரைவான உதவிக்குறிப்பு**

சரியான பொதியிடல் இறக்குமதி சந்தையில் விற்பனையை அதிகரிக்க உதவும். சரியான பொதியிடல் பயன்பாடு, தொழிற்பாடு, தரச்சின்ன பெறுமதிகளுடனான சீரமைப்பு, தரம், அழகியல் ஈர்ப்பு மற்றும் இறக்குமதி சந்தையில் தற்போதைய பொதியிடல் போக்குகள் ஆகியவற்றைக் கருத்திற்கொள்கிறது. உதாரணமாக, பிரித்தானிய நுகர்வோர் நிலையான, சூழல் நட்புடைய, புத்தாக்கமுடைய, நெகிழ்வான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட பொதியிடலை விரும்புகிறார்கள். தயாரிப்பாளர்கள் பிரித்தானிய பொதியிடல் சந்தை போக்குகள் மற்றும் முன்னறிவிப்புகளுடன் தங்களை நன்கு பரீட்சயமாக்கிக்கொள்ள வேண்டும். அத்தகைய அறிக்கையை இங்கே அணுகலாம்.






03

# பேண்தகுதன்மை தரநிலைகள் (Sustainability standards)

அத்தியாயம் 2 இல் கலந்துரையாடப்பட்ட சட்டத் தேவைகளுக்கு மேலதிகமாக, கொள்வனவாளர்கள் மற்றும் நுகர்வோர் சில மேலதிக தேவைகளைப் பூர்த்தி செய்ய தயாரிப்பாளர்-ஏற்றுமதியாளர்கள் தேவைப்படலாம். தயாரிப்புகள் சூழலுக்கு உகந்தவை என்பதையும் அவற்றின் விநியோகச் சங்கிலி முழுவதும் நல்ல தொழிலாளர் நடைமுறைகளைப் பின்பற்றுவதையும் காட்டுவது இதில் அடங்கும். இது தன்னார்வ பேண்தகுதன்மை தரநிலை (VSS) சான்றிதழ்களைப் பாதுகாப்பதன் மூலம் மற்றும்/அல்லது கொள்வனவாளரின் நிறுவனக் குறியீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் இறுதி தயாரிப்பில் பிரதிபலிக்க முடியும்.

## தன்னார்வ பேண்தகுதன்மை தரநிலை

தயாரிப்பாளர்கள் தானாக முன்வந்து சான்றிதழைப் பெற்று, தங்கள் தயாரிப்பில் தொடர்புடைய அடையாள குறியீடு அல்லது முத்திரையை ஒட்டுவதன் மூலம் ஏளுஏ களுக்கு இணங்கலாம். அவ்வாறு செய்வதன் மூலம் உற்பத்தியாளர்கள் தங்கள் போட்டித்தன்மையை தக்கவைத்துக்கொள்ளவும், பரந்த நுகர்வோர் தளத்தை அடைந்து கொள்ளவும் அனுமதிக்கிறது.

### பெட்டி 13: பேண்தகுதன்மை தரநிலைகள் என்றால் என்ன

பேண்தகுதன்மை தரநிலைகள் சூழல் செயலாற்றுகை, நெறி முறைசார் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகை போன்ற பேண்தகுதன்மையின் வெவ்வேறு குறிகாட்டிகளைக் குறிப்பிடுகின்றன. ஐஎஊ தரநிலைகள் வரைபடத்தில் வெவ்வேறு குறிகாட்டிகளைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்



விநியோகச் சங்கிலியின் ஒவ்வொரு கட்டமும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கொள்கைகள் மற்றும் பணி விதிகள் மற்றும் இலங்கை மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஆல் வகுக்கப்பட்ட ஏற்புடைய விதிகள்,ஒழுங்குமுறைகள் மற்றும் சூழல் தர நியமங்கள் போன்ற அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்வதை உற்பத்தியாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும். ஏளுஏ சான்றிதழ் செயல்முறை பற்றிய குறிப்பான தகவல் மற்றும் இந்த கைநூலில் உள்ள தயாரிப்புகளுக்கான சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஏளுஏ சான்றிதழ்களின் உதாரணங்கள் இணைப்பு ஐஐஐ இல் வழங்கப்பட்டுள்ளன.

## நிறுவனத்தின் குறியீடுகள்

சில கொள்வனவாளர்கள் தயாரிப்பு மற்றும் உற்பத்தி செயல் முறையின் கண்ணுக்கு தெரியாத அம்சங்களை முன்னிலைப்படுத்த வழிகாட்டுதல்கள் அல்லது நடத்தை விதிகள் வடிவில் தங்கள் சொந்த நிறுவனக் குறியீட்டை அறிமுகப்படுத்தலாம். நடைமுறையில், கொள்வனவாளர்கள் வழக்கமாக தயாரிப்பாளர்-ஏற்றுமதியாளர்கள் தங்கள் நிறுவனத்தின் நடத்தை விதிகள் அல்லது வழிகாட்டுதல்கள் ஏதேனும் இருந்தால், விற்பனை ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தையின் போது அவற்றை கடைபிடிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றனர்.

### பெட்டி 14: விநியோகஸ்தர் பேண்தகுதன்மை வளங்கள்

உங்கள் நாட்டில் எந்த விநியோகஸ்தர் தொடர்புடைய மூலப் பொருட்களுக்கான (பருத்தி, மரம் மற்றும் தோல் போன்றவை) பேண்தகுதன்மை சான்றிதழைப் பெற்றுள்ளார் என்பதைச் சரிபார்க்க, ITC பேண்தகுதன்மை நுழைவினை (ITC Sustainability Gateway) பயன்படுத்தவும்.பேண்தகுதன்மை தரநிலைகள் மற்றும் சான்றிதழ்கள் பற்றி மேலும் அறிய, ITC SME வர்த்தக அகாடமியில் உள்ள பல்வேறு கற்கைகளைப் பார்க்கவும்.

**விரைவான உதவிக்குறிப்பு: கொள்வனவாளர்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொள்ளுங்கள்**

விற்பனை ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தையின் போது VSS சான்றிதழ்களைப் பெறுதல் மற்றும் நிறுவனத்தின் நடத்தை விதிகளுக்கு இணங்குதல் ஆகியவற்றின் அடிப்படையில் கொள்வனவாளரின் எதிர்பார்ப்புகளைப் பற்றி கலந்துரையாட நினைவில் கொள்ளுங்கள். விற்பனை ஒப்பந்தத்தில் கலந்துரையாடப்பட்ட மற்றும் இணக்கம் காணப்பட்டதை தெளிவாகக் குறிப்பிடும் ஒரு விதியைச் சேர்க்கவும்.

**விரைவான உதவிக்குறிப்பு**

பேண்தகுதன்மை சான்றிதழுக்கு விண்ணப்பிக்க நீங்கள் இன்னும் தயாராக இல்லை என்றால், ஏற்கனவே பேண்தகு தன்மையானது என சான்றளிக்கப்பட்ட இலங்கை விநியோகஸ்தர்களுடன் இணைந்திருங்கள் மற்றும் அத்தகைய விநியோகஸ்தர்களிடமிருந்து மூலப்பொருட்களை கொள்வனவு செய்யுங்கள். உதாரணமாக, ஓஷன் லங்கா, ஹேலிஸ் ஃபேப்ரிக் பிஎல்சி, சவுத் ஏசியா டெக்ஸ்டைல்ஸ் அல்லது சேதன-சான்றளிக்கப்பட்ட பருத்தி உற்பத்தியாளர்களிடமிருந்து பருத்தியை கொள்வனவு செய்யுங்கள்.

சில சான்றளிக்கும் அமைப்புகள் குழு சான்றிதழை அனுமதிக்கின்றன, இது செலவு குறைந்த தெரிவாக கருதப்படலாம். நீங்கள் ஒரு வர்த்தகர் அல்லது சில்லறை விற்பனையாளராக இருந்தால், அந்த தயாரிப்பு சான்றிதழ் உங்கள் தரச்சின்ன பெயரில் மட்டுமே என்பதை நினைவில் கொள்ளுங்கள்.


© Shutterstock.com

# 04 சுங்க மற்றும் தொடர்புடைய நடைமுறைகள்

பிரித்தானியாவில் பொருட்கள் வெற்றிகரமாக உள்வருவதை உறுதிசெய்ய ஏற்றுமதி -யாளர்கள் சுங்க நடைமுறைகள் மற்றும் தேவையான துணை ஆவணங்களுடன் தங்களை நன்கு பரீட்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஒரு  நடைமுறை நியதியாக, அனைத்து ஏற்றுமதியாளர்களும் னுஊவுளு-ஐ மனதிற்கொண்டு, சரியான தயாரிப்புக் குறியீட்டைக் கண்டறிந்து, தங்கள் தயாரிப்புகளை சரியாக மதிப்பிட்டுள்ளதை உறுதிசெய்ய வேண்டும். தயாரிப்பு குறியீடுகள், னுஊவுளு மற்றும் கட்டண விகிதங்கள் பற்றிய தகவலுக்கு அத்தியாயம் 1  ஐப் பார்க்கவும்.

## சுங்க பதிவு

யுளுலுஊருனுயு போர்ட்டல் ஐ பயன்படுத்தி இலங்கை சுங்கத்தில் பதிவு செய்வது முதல் படியாகும். . பதிவு செய்தவுடன், பயனர்கள் சுங்க அதிகாரிகளிடம் 'வர்த்தகர்களாக' பதிவு செய்வதை தொடரலாம்.

ஏற்றுமதி சரக்குகள் சுங்கத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதோடு, ஏற்றுமதியாளர் ஏற்றுமதி செய்யத் தயாரானவுடன் இணைய வழியாக சுங்க அறிவிப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்க வேண்டிய தகவல்/ விவரங்களுக்கு இணைப்பு ஐஏ  ஐ பார்க்கவும்.

தேவையான அனைத்து விவரங்கள் / ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால், தயாரிப்பாளர்கள் சுங்க அனுமதியை இழக்க நேரிடும். சுங்க முகவர் அல்லது ஏற்றுமதியாளர் அறிவிப்பாளராக இருக்கலாம்.


ஒவ்வொரு அறிவிப்புக்கும் ரூ. 550 (கணினி கட்டணம்    ரூ. 250 மற்றும் பரீட்சிப்புக் கட்டணம்    ரூ.300) செலுத்த வேண்டும். ஏற்றுமதி சுங்க அறிவிப்புகள் பின்வரும் மூன்று அலுவலகங்களில் ஒன்றில் செயன்மறைப்படுத்தப்படும்.

- சுங்கத் தலைமையகத்தில் உள்ள ஏற்றுமதி அலுவலகம் - குறிப்பாக கொள்கலனை விட குறைவான சரக்கு மற்றும் விமான சரக்கு
- ஏற்றுமதி வசதிப்படுத்தல் மையம் - முழு கொள்கலன் ஏற்றும் சரக்கு (தேவைப்படும் போது, கொள்கலனை விட குறைவான சுமை சரக்கு)
- விமான சரக்கு ஏற்றுமதி அலுவலகம் - அழிந்துபோகக்கூடிய பொருட்கள் உட்பட அனைத்து விமான சரக்கு ஏற்றுமதி

சுங்க அறிவிப்பு பதிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிதியியல் ஆவணங்கள்

யுளுலுஊருனுயு அமைப்பில் பதிவு செய்தவுடன், உங்கள் வங்கி கணக்கு இலக்கம், பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி மற்றும் கைத் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைச் சமர்ப்பித்து உங்கள் வங்கி சுயவிவரத்தை இணைக்க தொடரவும். யுளுலுஊருனுயு முறைமை, டெலக்ஸ் பரிமாற்றம், கடனுறுதிக் கடிதம், பணம் செலுத்திய பின்னர் இறக்குமதியாளர் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்கள் மற்றும் பொருட்களுக்கு பிந்திய ஒரு திகதியில் பணம் செலுத்துவதற்கான ஆவணங்கள் போன்ற நிதிக் கருவிகளுக்காக முக்கிய வணிக வங்கிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.





# சுங்க அனுமதி

பொருட்கள் மற்றும் ஏனைய இடர் முகாமைத்துவ அளவு கோல்களைப் பொறுத்து, பொருட்கள் மூன்று வகைகளில் ஒன்றின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும்: "விலக்கு" (நுஒநஅிவநன), "குழு பரிசோதனை" ('யெநெட நுஒயஅஐைெவைழைஎ') அல்லது "பரிசோதனை செய்யப்பட வேண்டிய சரக்கு"('ஊயசபழ வழ டிந நுஒயஅஐைநென'). 'குழு பரிசோதனை' மற்றும் 'பரிசோதனை செய்ய வேண்டிய சரக்குகள்' வகைகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சரக்குகள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன, அதேசமயம் 'விலக்கு' பிரிவின் கீழ் உள்ள சரக்குகள் பரிசோதனையின்றி ஏற்றுமதிக்காக வெளியிடப்படுகின்றன. யுளுலுஊருனுயு பிரகடனம் சரிபார்க்கப்பட்டு முழுமையானதாகக் கண்டறியப்பட்டதும், ஏற்றுமதியாளர்கள் முனையக் கட்டணங்களைச் செலுத்தி சுங்க அனுமதியைப் பெற வேண்டும். இலங்கையில் சுங்க அனுமதி செயன்முறை பற்றிய மேலும் விவரங்களுக்கு இங்கே பார்க்கவும்.

இதைத் தொடர்ந்து, கப்பல் சரக்கு விடுவிக்கப்பட்டு கப்பல் அல்லது ஏனை படகில் ஏற்றப்படும். நேரடி ஏற்றுமதியின் போது பொருளாதார செயற்படுத்துனர்கள் பதிவு மற்றும் அடையாள இலக்கம் (நுழுசுஐ) தேவைப்படலாம். பதிவு தேவையா என்பதை தீர்மானிக்க சிறு தயாரிப்பாளர்கள் தங்கள் இறக்குமதி பங்காளருடன் கலந்துரையாட வேண்டும். இணைப்பு ஐஏ இல் நுழுசுஐ இலக்கத்தைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்.

## சுங்க பண்டக சாலைகள்
## (Customs bonded warehouses)

ஏற்பாட்டியல் நோக்கங்களுக்காக, பொருட்கள் நேரடியாகவோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஊடாக போன்ற பல்வேறு கப்பல் பாதைகள் மூலமாகவோ பிரித்தானிய எல்லையை அடையலாம். பொருட்கள் பிரித்தானிய எல்லையை அடைந்தவுடன், அவை வழக்கமாக சுங்க பண்டக சாலைகளில் களஞ்சியப்படுத்தப்படும். இறக்குமதியாளர்கள் அனுப்பப்பட்ட பொருட்களின் ஓட்டத்தை கட்டுப்படுத்தலாம், அவற்றை மறுசீரமைக்கலாம் மற்றும் ஏற்புடைய சுங்க வரிகள் மற்றும் ஏனைய வரிகளை தாமதப்படுத்தலாம். பிரித்தானியாவில் உள்ள சுங்க களஞ்சியசாலைகள் பற்றிய மேலும் தகவலுக்கு இங்கே பார்க்கவும்.

ஐரோப்பிய ஒன்றியம் வழியாக பிரித்தானியாவுக்கு பொருட்கள் அனுப்பப்பட்டால், அவை சுங்க பண்டக சாலைகளில் களஞ்சியப்படுத்தப்படும், எனவே பொருளாதார செயற்படுத்துனர்கள் பொருட்களின் மீது இறக்குமதி வரிகளை செலுத்த வேண்டியதில்லை. சுங்கத் தீர்வைகளுக்கு உட்பட்ட பொருட்கள் (அத்தகைய தீர்வைகள் செலுத்தப்படாவிட்டால்) மற்றும் கட்டுப்பாடுகள் அல்லது சுகாதாரத் தேவைப்பாடுகளுக்கு உட்பட்ட பொருட்கள் துணை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால் களஞ்சியப்படுத்த முடியாது என்பதை நினைவில் கொள்க.

**விரைவான உதவிக்குறிப்பு: சுங்க பண்டக சாலைகள் (ஊரளவழஅள டிழனெநன றயசநாழரளநள)**

- சுங்க பிணைப்பு பண்டக சாலைகள், போக்குவரத்துக்குப் பின்னர் பொருட்களை மீள்கட்டமைத்தல், ஒட்டுயிர்களுக்கு எதிரான பதப்படுத்தல் மற்றும் சேதமடைந்த அல்லது மாசடைந்த கூறுகளை அகற்றுதல் போன்ற சிறிய கையாளுதல் தேவைப்பாடுகளுடன் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. பொருட்களை செயன் முறைப்படுத்தவோ மாற்றவோ அவற்றைப் பயன்படுத்த முடியாது.
- மனித ஆரோக்கியம் அல்லது சூழலுக்கு அச்சுறுத்தலாக இல்லாத வரை, சுங்கப் பிணைப்பு பண்டகசாலைகளில் பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு நேர வரம்புகள் எதுவும் இல்லை. உங்கள் பொருட்கள் பிரித்தானிய சந்தையில் பிரவேசிக்கும் போது மற்றும் நீங்கள் பணம் பெறும் போது இது பாதிக்கலாம். இதைப் பற்றி உங்கள் கொள்வனவாளரிடம் பேசுங்கள்.
- ஐரோப்பிய ஒன்றியம் வழியாக பொருட்களைக் கொட்டுவதைத் தடுக்கும், எதிர்வினையாற்றல் அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்காக மோசடியாக அனுப்பப்பட்ட பல நிகழ்வுகள் உள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதி வழியின் உண்மைத் தன்மையை உறுதி செய்வதற்கான ஒரு வழி, அத்தகைய சுங்கப் பிணைப்பு பண்டகசாலைகளில் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படும் போது எந்தவொரு செயலாக்கத்தையும் மாற்றத்தையும் தவிர்க்க வேண்டும்.




# 05 போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல்கள்

சரியான போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல்களைத் தெரிவுசெய்வது ஏற்றுமதி செயன்முறையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். விற்பனை ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட ஐஉெழுவநசஅள கள், சரியான போக்குவரத்தை அடையாளம் காண்பது, ஊர்திகளுக்கு ஏற்பாடு செய்தல், சரக்குக் காப்புறுதி, ஏற்றுமதிக்கு முந்தைய ஆய்வுகள் மற்றும் இறுதி இலக்குக்கு விநியோகம் செய்வதற்கு எந்தத் தரப்பு பொறுப்பாகும் என்பதைக் குறிப்பிடும். சரக்கு தொடர்பான பிணக்குகளின் போது முறையான மற்றும் வெளிப்படையான போக்குவரத்து ஆவணங்கள் முக்கியமானதாகும்.

விமானம் அல்லது கடல் போக்குவரத்தை வேறுபடுத்தும் முக்கிய ஆவணம் கடல் போக்குவரத்திற்கான டிடைட ழக டயனைபெ  ஆகும் என்பதோடு, விமானப் போக்குவரத்திற்கானது ஏர்வே பில் (யசைறயல டிடைட) ஆகும். இலங்கையில் இருந்து கடல் மார்க்க கப்பலேற்றல்களின் அடிக்கு நிகழ்வுகளை கருத்திற்கொண்டு, இந்த கைநூல் டிடைட ழக டயனைபெ பற்றி மட்டுமே குறிப்பிடுகிறது. இவற்றில் ஏதேனும் ஒன்றை ஆதரிக்க, தயாரிப்பாளர்கள் வணிக விலைப்பட்டியல், பொதியிடல் பட்டியல், மூல அறிவிப்பு அல்லது படிவம் யு( இணைப்பு ஐஏ இல் விவரிக்கப்பட்டுள்ளபடி) இணைக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்ய வேண்டும். தேவையான காப்புறுதித் திட்டம் பெறப்பட்டிருப்பதையும், அத்தகைய காப்புறுதிக்கான ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளதையும் உறுதிசெய்யவும்.



## பில் ஒப் லேடிங் (Bill of lading)

சாராம்சமாக ஒரு டிடைட ழக டயனைபெ என்பது பொருட்கள், சரக்கு பெறுனர் அல்லது ஏற்றுமதியைப் பெறும் நிறுவனம், மற்றும் சேருமிடம் பற்றிய விவரங்களைக் கொண்ட, கப்பல் சரக்கு ஏற்றுமதியாளருக்கு சரக்கு அனுப்புனரால் (பொதுவாக கப்பலின் எஜமானரால்) வழங்கப்படும் ஒப்பந்தம் ஆகும். இது மூன்று முக்கியமான செயற்பாடுகளை செய்கிறது:

- இது அதில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களின் உரிமைக்கான ஆவணமாகும்
- இது அனுப்பப்பட்ட பொருட்களுக்கான ஒரு பற்றுச்சீட்டு
- இது சரக்கு ஏற்றுமதிக்கான விதிமுறைகளைக் கொண்டுள்ளது.

**விரைவான உதவிக்குறிப்பு:**
**சரக்கு அனுப்புபவர்களைப் (freight forwarders) பயன்படுத்தவும்**

சிறிய அளவிலான ஏற்றுமதிகளைக் கொண்ட சிறிய ஏற்றுமதியாளர்கள் சரக்கு அனுப்புபவர்கள் மற்றும் உள்ளூர் போக்குவரத்து நிறுவனங்களின் சேவைகளிலிருந்து பயனடையலாம்.

## காப்புறுதி

அத்தியாயம் 1 இல் விளக்கப்பட்டுள்ளபடி, ஐஉெழுவநசஅள கள் பொருட்களின் போக்குவரத்து மற்றும் காப்புறுதி போன்ற தொடர்புடைய செலவுகளால் ஏற்படும் அபாயங்களை நிர்வகிப்பதற்கான பொறுப்பை தீர்மானிக்கிறது. சரக்குக் காப்புறுதி, பரிமாற்றத்தில் உள்ள பொருட்களுக்கு ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புகளுக்கு எதிராக நிதிப் பாதுகாப்பை வழங்குகிறது. உதாரணமாக, ஒரு ஊஐகு ஒப்பந்தத்தில், விற்பனையாளர் தங்கள் சொந்த செலவில் சரக்குக் காப்புறுதியைப் பெறுவதற்குப் பொறுப்பானவர். சரக்குக் காப்புறுதியின் விவரங்கள் வர்த்தக விலைப்பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும்.

**விரைவான உதவிக்குறிப்பு**

நீங்கள் அனைத்து ஐஉெழுவநசஅள மற்றும் ஒவ்வொரு ஐஉெழுவநசஅ இன் விளைவை கவனமாக வாசித்து புரிந்து கொள்வதை உறுதிசெய்யுங்கள். இது முழு ஏற்றுமதி பரிவர்த்தனையிலும் நீங்கள் ஏற்க வேண்டிய பொறுப்பு, ஆபத்து மற்றும் செலவுகளை தீர்மானிக்கும்.



# இணைப்புகள்

# 01 இணைப்பு I: ஒரு இலங்கை ஏற்றுமதியாளராக இருக்க தயாராதல் Incoterms பற்றிய சுருக்கம்

## Incoterms பற்றிய சுருக்கம்

**அட்டவணை A I: Incoterms பற்றிய சுருக்கம்**

| INCOTERM | ROLE OF THE BUYER | ROLE OF THE SELLER |
|---|---|---|
| **கப்பலேற்றல் ஏற்பாடு** ExWorks (EXW) | ஏற்றுமதியாளரின் வளாகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | அவர்கள் பொருட்களை தங்கள் வளாகத்தில் கிடைக்கச் செய்ய மட்டுமே வேண்டும் |
| **பிரீ கேரியர்** (FCA) Free Carrier (FCA) | ஏற்றுமதியாளரின் வளாகம் முதல் ஊர்தி இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | கொள்வனவாளரால் நியமிக்கப்பட்ட ஊர்திக்கு பொருட்களை வழங்க வேண்டும் |
| **பிரீ எலோங்சைட் சிப்** Free Alongside Ship) | ஏற்றுதல் துறைமுகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | கொள்வனவாளரால் நியமிக்கப்பட்ட ஊர்திக்கு பொருட்களை வழங்க வேண்டும் |
| **பிரீ ஒன் போர்ட்** Free On Board (FOB) | ஏற்றுதல் துறைமுகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | பொருட்களை ஏற்றும் துறைமுகத்தில் கப்பலில் பொருட்களை ஏற்ற வேண்டும் |
| **செலவு மற்றும் சரக்கனுப்புக் கட்டணம்** (Cost and Freight) | ஏற்றுதல் துறைமுகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | ஏற்றும் துறைமுகத்தில் கப்பலில் பொருட்களை ஏற்ற வேண்டும் |
| **செலவு காப்புறுதி சரக்கனுப்புக் கட்டணம்** (CIF) | ஏற்றுதல் துறைமுகம் முதல் சென்றடையும் இடம் வரை அனைத்திற்குமான பொறுப்பு | சென்றடையும் துறைமுகத்திற்கு சரக்குகளை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதோடு, சரக்கிற்கு கட்டணம் செலுத்த வேண்டும். |
| **செலவு செலுத்தப்பட்டது** | ஊர்தி செல்லும் இடம் முதல் சேருமிடம் வரை அனைத்திற்கும் பொறுப்பு | பெயரிடப்பட்ட சேருமிடத்திற்கு சரக்குகளை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதோடு சரக்கு கட்டணம் செலுத்த வேண்டும் |
| **ஏந்தூர்தி மற்றும் காப்புறுதி செலுத்தப்பட்டது** (CIP) | ஊர்தி செல்லும் இடம் முதல் சேருமிடம் வரை அனைத்திற்கும் பொறுப்பு | பெயரிடப்பட்ட இடத்திற்கு பொருட்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும், சரக்கு கட்டணம் செலுத்தி காப்புறுதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் பெயரிடப்பட்ட இடத்திற்கு பொருட்களை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும், சரக்கு கட்டணம் செலுத்தி காப்புறுதி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் |
| **இடத்தில் விநியோகம் செய்யப்பட்டது** Delivered at Place (DAP) | இறக்குதல் தவிர, ஏற்றுமதியாளரின் வளாகம் முதல் சேருமிடம் வரை அனைத்திற்கும் பொறுப்பு | கொள்வனவாளரின் வளாகத்திற்கோ அல்லது வேறு பரிந்து உரைக்கப்பட்ட இடத்திற்கோ பொருட்களை வழங்க வேண்டும் |
| **இறக்கப்பட்ட இடத்தில் வழங்கப்பட்டது** Delivered at Place Unloaded (DPU) | விற்பனையாளரின் வளாகம் முதல் சேருமிடம் வரை, இறக்குதல் உட்பட அனைத்திற்கும் பொறுப்பு | கொள்வனவாளரின் வளாகத்திற்கோ அல்லது வேறு பரிந்து உரைக்கப்பட்ட இடத்திற்கோ பொருட்களை வழங்க வேண்டும் அவற்றை இறக்கவும் வேண்டும் |
| **வழங்கப்பட்ட தீர்வை செலுத்தப்பட்டது** Delivered Duty Paid (DDP) | பொருட்களை ஏற்றுக்கொள்ள மட்டுமே வேண்டும் | ஏற்றுமதியாளரின் வளாகம் முதல் சேருமிடம் வரை, இறக்குதல் மற்றும்  சுங்க அனுமதி உட்பட அனைத்திற்குமான பொறுப்பு |

# தயாரிப்பு வகைப்பாடு: HS குறியீடுகள்

## HS குறியீடுகள் மற்றும் UKCCகள் பற்றிய மேலோட்டம்

உளு குறியீடு ஒத்திசைக்கப்பட்ட பொருட்களின் விபரம் மற்றும் குறியீட்டு முறை தொடர்பான சர்வதேச சமவாயத்தில் உள்ளடங்கி உள்ளது. உளு குறியீட்டின் தொடர்புடைய அத்தியாயம், தலைப்பு மற்றும் உப தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்பு விளக்கத்தின் அடிப்படையில், ஒவ்வொரு தயாரிப்புக்கும் ஆறு இலக்கங்களைக் கொண்ட தயாரிப்புக் குறியீடு அல்லது உளு குறியீடு உள்ளது.

எவ்வாறாயினும், நாடுகள் உளு குறியீட்டிற்கு அப்பால் ஒரு கட்டம் சென்று, மேலும் தயாரிப்பு வகைப்பாடு நிரல்களை அறிமுகப்படுத்தலாம். பிரித்தானியாவில், பொருட்களின் வகைப்பாடு அட்டவணை 10 இலக்க அளவில் தயாரிப்புகளை வகைப்படுத்துகிறது. தயாரிப்பு வகைப்பாட்டின் பல்வேறு நிலைகளை உளு குறியீடு மற்றும் அட்டவணை யு2 இல் காட்டப்பட்டுள்ள ருமுஊஊ இன் படி தோல் கைப்பைகளுக்கான தயாரிப்பு வகைப்பாட்டின் உதாரணத்தைப் பயன்படுத்தி காட்சிப்படுத்தலாம்.

### அட்டவணை A2: HS குறியீடு மற்றும் UKCC வகைப்பாட்டின் உதாரணங்கள்

| உளு குறியீடு | | | |
|---|---|---|---|
| **HS அத்தியாயம்** | 2 இலக்கங்கள் | 42 | தோல் பொருட்கள் குதிரை சேணம் இருக்கைப் பட்டைப் பயணப் பொருட்கள், கைப்பைகள் மற்றும் ஒத்த கொள்கலன்கள் விலங்கு குடல் பொருட்கள் (பட்டு-புழு குடல் தவிர) |
| **HS தலைப்பு** | 4 இலக்கங்கள் | 42 02 | கைப்பைகள், ஷொப்பிங் பைகள், பணப்பைகள், கருவிப் பைகள், விளையாட்டுப் பைகள், போத்தல்-உறைகள், நகைப் பெட்டிகள், தூள் பெட்டிகள், கத்தி-கரண்டி வகை பெட்டிகள் மற்றும் ஒத்த கொள்கலன்கள், தோல் அல்லது கலவை தோல், பிளாஸ்டிக் விரிப்புகள், ஆடை பொருட்கள், கந்தகமூட்டிய இழைகள் அல்லது காகித அட்டை, அல்லது முழுமையாக அல்லது முக்கியமாக அத்தகைய பொருட்கள் அல்லது காகிதத்தால் மூடப்பட்டவை |
| **HS உபதலைப்பு** | 6 இலக்கங்கள் | 4202 21 | கைப்பைகள், தோள்பட்டையுடன் இருந்தாலும், கைப்பிடி இல்லாதவை உட்பட: தோலின் வெளிப்புற மேற்பரப்பு அல்லது கலவை தோல் |
| **UKCC** | | | |
| **UKCC உப தலைப்பு** | 10 இலக்கங்கள் | 4202.2100.10 | கைப்பைகள், தோள்பட்டையுடன் இருந்தாலும், கைப்பிடி இல்லாதவை உட்பட: தோலின் வெளிப்புற மேற்பரப்பு அல்லது கலவை தோல் கையால் செய்யப்பட்ட |
| **UKCC உப தலைப்பு** | 10 இலக்கங்கள் | 4202.2100.90 | கைப்பைகள், தோள்பட்டையுடன் இருந்தாலும், கைப்பிடி இல்லாதவை உட்பட: தோலின் வெளிப்புற மேற்பரப்பு அல்லது கலவை தோல் வேறு |



## தயாரிப்பு விளக்க அமைவுரு

உங்கள் தயாரிப்பை விவரிக்கவும், சரியான ருமுஊஊ ஐ எளிதாகக் கண்டறியவும், அட்டவணை யு3 இல் வழங்கப்பட்ட அமைவுருவை பயன்படுத்தலாம்

### அட்டவணை A3: HS குறியீடு வகைப்படுத்தலுக்கான தயாரிப்பு விபர அமைவுரு

| அளவுகோல்கள் | விபரம் |
|---|---|
| **ஒற்றை அல்லது பல துண்டு தயாரிப்பு** | பல துண்டு தயாரிப்பு அல்லது தொகுப்பிற்கு, தயாரிப்பின் ஒவ்வொரு பகுதிக்கும் பொருட் குறியீடு தீர்மானிக்கப்பட வேண்டும். தயாரிப்பில் உள்ள அனைத்து தனிப்பட்ட பகுதிகளையும் பட்டியலிடுங்கள்.<br>• உ-ம் ஒரு பாவாடை மற்றும் சட்டை இரண்டு ஆடைகள், ஒரு பாவாடை ஒரு ஆடை மட்டுமே. |
| **வகை** | தயாரிப்பு(கள்) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகை(களில்) உள்ளதா? தயாரிப்பு வகைப்படுத்தப்பட முடியுமான அனைத்து வகைகளையும் பட்டியலிடுங்கள்.<br>• உ-ம். ஆடை, ஆபரணம், உணவுப் பொருள், பாதணிகள் போன்றவை. |
| **பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள்** | தயாரிப்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறதா? இறுதி தயாரிப்பை ஆக்குவதில் பயன்படுத்தப்படும் அனைத்து மூலப்பொருட்களையும் பட்டியலிடுங்கள்.<br>• உ-ம் பருத்தி, மரம், சணல், பட்டு, இரப்பர் போன்றவை. |
| **மூலப்பொருட்களின் மூலம்** | நீங்கள் அனைத்து மூலப்பொருட்களையும் இலங்கை விநியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்கிறீர்களா அல்லது சில மூலப்பொருட்களை இறக்குமதி செய்கிறீர்களா? உள்நாட்டில் பெறப்பட்ட மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தையும் பட்டியலிடுங்கள். |
| **தயாரிப்பு முறை** | தயாரிப்பு எவ்வாறு உற்பத்திசெய்யப்படுகிறது?<br>• உ-ம் கையால் செய்யப்பட்டவை, கைத்தறி, கைத்தொழில்துறை உற்பத்தி போன்றவற்றில் தயாரிக்கப்பட்டது. |
| **தயாரிப்பு பயன்பாடு** | தயாரிப்பின் கருதப்படும் பயன் அல்லது நோக்கம் என்ன? இது சில்லறை விற்பனைக்கானதா அல்லது வேறு நோக்கங்களுக்காக உள்ளதா? குறிப்பு: ஏற்றுமதியின் நோக்கம் பொதுவாக தயாரிப்பின் கருதப்படும் பயனை தீர்மானிக்கிறது.<br>• உ-ம். பருத்தி நூலை பின்னல் அல்லது சரிகை நடவடிக்கைகளில் பயன்படுத்த சில்லறை நோக்கங்களுக்காக விற்கலாம் அல்லது ஒரு இறக்குமதியாளருக்கு விற்கலாம், அவர் அதை உற்பத்தி நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவார். |
| **கருதப்படும் பயனர்** | தயாரிப்பு யாருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது? குறிப்பிட்ட வயது அல்லது தொழிலில் உள்ளவர்கள் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதா?<br>• உ-ம். விளையாட்டு நடவடிக்கைகளுக்கான காலணிகள் டென்னிஸ் அல்லது கூடைப்பந்து போன்ற ஒரு குறிப்பிட்ட விளையாட்டு நடவடிக்கைக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன, நடைபயிற்சிக்கு மட்டுமல்ல. |
| **பொதியிடல் பொருள்** | தயாரிப்பு மரப்பெட்டிகள், சணல் சாக்குகள், அட்டைப் பெட்டிகள் அல்லது வேறு எந்த விதத்திலும் பொதியிடப்படுமா?<br>• உ-ம். ஒரு சட்டை தொகுதி ஒரு பருத்தி சாக்கில் பொதியிடப்படுகிறது, பின்னர் அது ஒரு அட்டை பெட்டியில் வைக்கப்படுகிறது. |

# இந்த கைநூலில் உள்ள தயாரிப்புகளுக்கான பொருட் குறியீடுகளின் குறிப்பான பட்டியல்

இந்த கைநூலில் உள்ள தயாரிப்புகளுக்கு ஏற்புடைய UKCC களின் குறிப்பான பட்டியலை அட்டவணை A4 வழங்குகிறது.

## அட்டவணை A4 : இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்ட தயாரிப்புகளுக்கான UKCC களின் குறிப்பான பட்டியல்

| UKCC | விபரம் |
|---|---|
| **துணி மற்றும் ஆடை** | |
| 6212.1010.00 | பின்னப்பட்ட அல்லது சரிகை பின்னலினாலான ஒரு தொகுதி மார்புக் கச்சை மற்றும் ஒரு சோடி உள்ளாடைகள், |
| 6109.9090.00 | பின்னப்பட்ட அல்லது சரிகை டி-சேர்ட்கள், உட்சட்டைகள் மற்றும் பிற உள்ளாடைகள் |
| 6104.6300.00 | பெண்கள் அல்லது சிறுமிகளுக்கான உடைகள், ஜக்கெட்டுகள், பிளேசர்கள், ஆடைகள், பாவாடைகள், பிரிக்கப்பட்ட பாவாடைகள், கால்சட்டை, பிப் மற்றும் பிரேஸ் (bib and brace) மேலாடைகள், குட்டை கால் சட்டைகள் (breeches) மற்றும் அரைக்கால் சட்டை (நீச்சலுடை தவிர), பின்னப்பட்ட அல்லது செயற்கை இழைகளால் பின்னப்பட்டவை. |
| 6107.1100.00 | ஆண்கள் அல்லது சிறுவர்களுக்கான உள்ளாடைகள், ப்ரீஃப்கள், இரவு ஷர்ட்கள், பைஜாமாக்கள், குளியலுடைகள், டிரஸ்ஸிங் கவுன்கள், பருத்தியினால் பின்னப்பட்ட அல்லது சரிகை செய்யப்பட்ட. |
| 6108.2200.00 | பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கான உள்ளாடைகள், உள் பாவாடைகள், இரவு ஆடைகள், பைஜாமாக்கள், பெண்களுக்கான இலகு ஆடைகள் (negligées), குளியலாடைகள் மற்றும் டிரஸ்ஸிங் கவுன்கள், பின்னப்பட்ட அல்லது சரிகைசெய்யப்பட்ட ஆடைகள் |
| 6112.4100.00 | உடற்பயிற்சி உடைகள், பனிச்சருக்கு ஆடைகள், நீச்சலுடைகள், பின்னப்பட்ட அல்லது சரிகை செய்யப்பட்டவை |
| 6110.3010.00 | ஜெர்சிகள், கம்பளிச்சட்டைகள், பின்னல் கம்பளி உடற்சட்டைகள் (cardigans) , மேலங்கிகள் (waistcoats), பின்னப்பட்ட அல்லது சரிகை செய்யப்பட்டவை |
| 6209.2000.20 | குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் பருத்தி ஆடை அணிகலன்கள் |
| **வீட்டு அலங்காரம்** | |
| 6304.9900.92 | பின்னப்படாத அல்லது சரிகை செய்யப்படாத மேசை துணிகள் உள்ளிட்ட அலங்காரப் பொருட்கள் |
| **காலணிகள்** | |
| 6404.2010.00 | தோல் அல்லது தோலின் கலவையினாலான அடிப்புறங்களுடன் கூடிய காலணிகள் |



UKCC யில் உள்ள ஒவ்வொரு அத்தியாயமும் அத்தியாயக் குறிப்புகளைக் கொண்டுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம், இது சரியான தயாரிப்பு வகைப்பாட்டை தீர்மானிப்பதற்கு முன் ஏற்றுமதியாளரால் வாசித்து அறியப்பட வேண்டும். அத்தியாயம் 71 க்கான அத்தியாயக் குறிப்புகளின் உதாரணம் - "இயற்கை அல்லது வளர்ப்பு முத்துக்கள், விலை மதிப்பற்ற அல்லது பகுதியளவு விலையுயர்ந்த கற்கள், விலை உயர்ந்த உலோகங்கள், விலைமதிப்பற்ற உலோகத்தால் உறையிடப்பட்ட உலோகங்கள் மற்றும் அவற்றின் பொருட்கள் போலி நகைகள் நாணயம் - படம் A1 இல் தரப்பட்டுள்ளன.

### உரு A1: UKCCகளின் அத்தியாயம் 71க்கான அத்தியாயக் குறிப்புகளின் உதாரணங்கள்

**There are important chapter notes for this part of the tariff:**

1. Subject to note 1(A) to Section VI and except as provided below, all articles consisting wholly or partly:

   a. of natural or cultured pearls or of precious or semi-precious stones (natural, synthetic or reconstructed),

   or

   b. of precious metal or of metal clad with precious metal, are to be classified in this chapter.

2. (A) Headings 7113, 7114 and 7115 do not cover articles in which precious metal or metal clad with precious metal is present as minor constituents only, such as minor fittings or minor ornamentation (for example, monograms, ferrules and rims), and paragraph (b) of the foregoing note does not apply to such articles.

   (B) Heading 7116 does not cover articles containing precious metal or metal clad with precious metal (other than as minor constituents).

3. This chapter does not cover:

   a. amalgams of precious metal, or colloidal precious metal (heading 2843);

   b. sterile surgical suture materials, dental fillings or other goods of Chapter 30;

   c. goods of Chapter 32 (for example, lustres);

   d. supported catalysts (heading 3815);

   e. articles of heading 4202 or 4203 referred to in note 3(B) to Chapter 42;

   f. articles of heading 4303 or 4304;

   g. goods of Section XI (textiles and textile articles);

   h. footwear, headgear or other articles of Chapter 64 or 65;

   ij. umbrellas, walking sticks or other articles of Chapter 66;

# ஐக்கிய இராச்சிய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத் திட்டம்

2023 ஜூன் மாதம், ஐக்கிய இராச்சியம் முன்பு இருந்த பொது மைப்படுத்தப்பட்ட முன்னுரிமைத் திட்டங்களை DCTS உடன் மாற்றியமைத்தது. இந்த னுஊவுளு இலங்கை உட்பட 65 நாடுகளுக்கு இலகுவான சந்தை அணுகலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம், ஏற்றுமதியாளர்கள் பின்வரும் நன்மைகளைப் பெறுகின்றனர்:

- பிரித்தானியாவுக்கான ஏற்றுமதிகளில் பூஜ்ஜியம் அல்லது குறைக்கப்பட்ட வரிகள்
- தாராளமய உற்பத்தி இட விதிகள்.

படம் A2 இல் காட்டப்பட்டுள்ளபடி, மூன்று முன்னுரிமை வகைகளில் ஒன்றாக  நாடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன, இது அத்தகைய நாடுகளில் இருந்து ஏற்றுமதியாளர்களுக்கு தயாரிப்புகளின் எண்ணிக்கையை பூஜ்ஜியம் அல்லது குறைக்கப்பட்ட கட்டண விகிதங்களில் நிர்ணயிக்கிறது.  DCTS திட்டத்தின்படி, இலங்கை ஒரு மேம்பட்ட முன்னுரிமை நாடு. ஏற்றுமதியாளர்கள் தங்கள் UKCC நிரல்களில் 92% மீது பூஜ்ஜிய கட்டணத்தை அனுபவிக்க முடியும். DCTS UKCC நிரல்களுக்கு வெளியே உள்ள அனைத்து தயாரிப்புகளுக்கும் பிரித்தானிய பொது கட்டண முறையின்படி கட்டணம் விதிக்கப்படும்.

### உரு A2: DCTS நாடுகள் வகைப்பாடு

| Product tariff | Comprehensive Preferences | Enhanced Preferences | Standard Preferences |
|---|---|---|---|
| Tariff free products (0%) | 99.8% | 92% | 65% |
| Products with 0% to 5% tariffs | 0.2% | 0.4% | 10% |
| Products with 5% to 10% tariffs | 0% | 0.4% | 12% |
| Products with more than 10% tariffs (including Specific Tariffs* | 0% | 7.2% | 13% |

*Specific tariffs are tariffs calculated as a fixed charge on a unit of the product. The product unit could be weight, volume, number of items or other criteria.

## DCTS இன் கீழ் கட்டண விகிதங்கள்

உற்பத்தியைப் பொறுத்து, ஏற்றுமதியாளர்கள் பல்வேறு வகையான கட்டணங்களைச் செலுத்த வேண்டியிருக்கும். உதாரணமாக, புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளை ஏற்றுமதி செய்பவர்கள் மதிப்பீட்டு விகிதம் அல்லது குறிப்பிட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக பருவகால கட்டணங்களையும் செலுத்த வேண்டியிருக்கும். DCTS இன் கீழ் ஏற்புடைய அனைத்து கட்டணங்களையும் ஒரு ஏற்றுமதியாளர் எவ்வாறு அடையாளம் காண முடியும்? கட்டணங்களை அடையாளம் காண்பது தொடர்பான DCTS வழிகாட்டல் ஆவணம் வெவ்வேறு, ஆனால் ஏற்புடைய கட்டண வகைகளின் பயனுள்ள கண்ணோட்டத்தை வழங்குகிறது. மேலும் தகவலுக்கு, உரு A2 இல் உள்ள விளக்கப்படத்தைப் பார்க்கவும்



### Figure A3: Different tariffs chargeable under the DCTS

**Ad-valorem tariffs**

Most tariffs under the DCTS are ad-valorem tariffs. An ad-valorem tariff is a percentage of the value of the product. The value refers to the total customs value of the product.

For example, the tariff for white chocolate for Comprehensive and Enhanced Preference Tiers is 0%, while Standard Preferences is 4.5% of the value of the product.

**Specific tariffs**

Specific tariffs are tariffs calculated as a fixed charge on a unit of the product. The product unit could be weight, volume, number of items or other criteria.

For example, the tariff for carcasses and half carcases of domestic swine is £44 per 100kg.

**Compound tariffs**

Compound tariffs are a combination of ad-valorem tariffs and specific tariffs.

**Example of compound tariffs:**

| Commodity Code | Product Description | Tariff |
|---|---|---|
| 04032051 | Yoghurt, whether concentrated, flavoured or with added fruit, nuts or cocoa, sweetened, in solid forms, of a milkfat content by weight of less than or equals to 1.5% | 4.5% plus £79 per 100 kg |

In this example, the ad-valorem tariff is the 4.5% charged on the value of the product while the specific tariff is £79 per 100 kg.

**Seasonal tariffs**

Seasonal tariffs are tariffs that change depending on the time of the year.

## உற்பத்தி இடம் தொடர்பான விதிகள்

பயன்படுத்தப்படுகின்றன. னுஊவுளு இன் கீழ், தயாரிப்பாளர்கள் தங்கள் பொருட்கள் இலங்கையில் இருந்து முழுமையாக பெறப்பட்ட விதி அல்லது போதுமான செயற்பாட்டு அல்லது செயன்முறையாக்க விதியைப் பயன்படுத்தி உருவாக்கப்படுகிறது என்பதைக் காட்ட முடியும். இறக்குமதி செய்யப்பட்ட எந்த மூலப்பொருட்களையும் உள்ளடக்காமல், முழுவதுமாக இலங்கையில் தயாரிக்கப்படும் தயாரிப்புகள், முழுமையாக பெறப்பட்ட விதியின் கீழ் ‘இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்டவை’ (‘Originating in Sri Lanka’) என வகைப்படுத்தலாம். தயாரிப்புகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களைக் கொண்டிருந்தால், அவை தயாரிப்பு-சார்ந்த விதிகளுக்கு (product-specific rules) இணங்கினால், அவையும் ‘இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்டவை’ என வகைப்படுத்தலாம். இது பற்றி மேலும் அறிய, உற்பத்தி இட விதிகளைப் புரிந்துகொள்வதற்கான DCTS வழிகாட்டுதல் ஆவணத்தை பார்க்கவும்.

ஏற்புடைய தயாரிப்பு-சார்ந்த விதிகளைப் புரிந்து கொள்ள, தயாரிப்பாளர்கள் / ஏற்றுமதியாளர்கள் ஊடாடும் DCTS காட்சிப்படுத்தல் கருவியை (interactive னுCTS Visualization Tool) பார்க்க முடியும்.  ஏற்புடைய உற்பத்தி இட விதிகளைத் தீர்மானிக்க , உற்பத்தி இட விதிகள் டெப்பைத் (tab) தெரிவுசெய்து, துறை, அத்தியாயம் மற்றும் HS தலைப்பு மூலம் (browse செய்யவும்) உலாவவும். ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் தயாரிப்பு சார்ந்த அனைத்து விதிகளையும் குறிப்புகளையும் தாங்கள் வாசித்து அறிந்திருப்பதை தயாரிப்பாளர்கள் உறுதிசெய்ய வேண்டும்.

02

# இணைப்பு II: தயாரிப்பு மற்றும் தயாரிப்பு தேவைப்பாடுகள்

## பொதுவான தயாரிப்பு பாதுகாப்பு

ஒரு உற்பத்தியாளர்/ ஏற்றுமதியாளர் என்ற முறையில், தயாரிப்புகள் எந்த தாமதமும் சிரமமும் இல்லாமல் பிரித்தானிய எல்லையை கடப்பதை உறுதிசெய்வது மிகப்பெரிய கரிசனைகளில் ஒன்றாகும். சரக்குகள் ஆபத்தானவை அல்லது நுகர்வோருக்கு ஆபத்தை ஏற்படுத்துபவை என்றிருந்தால் அவை சந்தையை அடைவதில் தாமதம் ஏற்படலாம்.

அட்டவணை யு5 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, அதிகாரத் தரப்புகள் பல்வேறு நடவடிக்கைகளைப் பயன்படுத்தி தயாரிப்பு பாதுகாப்புச் சட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட நடவடிக்கையானது தயாரிப்பின் மூலம் ஆபத்தை பிரதிபலிக்கும்.

### அட்டவணை A5: தயாரிப்பு பாதுகாப்பு மீறல்களுக்கு பிரித்தானிய அதிகார தரப்புகளால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

| நடவடிக்கை (Measure) | வினையாற்றுதல்கள் (Actions) |
|---|---|
| இடைநிறுத்தல் அறிவிப்பு (Suspension notice) | தயாரிப்பு பாதுகாப்புச் சட்டங்களின் ஏற்பாடுகளை தயாரிப்பு திருப்திப்படுத்தவில்லை என்று அதிகாரிகள் சந்தேகித்தால், “இடைநிறுத்த அறிவிப்பு“ வெளியிடப்படலாம். பாதுகாப்பு மதிப்பீடுகள், சரிபார்ப்புகள் மற்றும் கட்டுப்பாடுகளை ஒழுங்கமைக்க அதிகாரிகளுக்கு தேவைப்படும் காலத்தை இது உள்ளடக்கும். இந்த காலகட்டத்தில், அதிகாரிகளின் அனுமதியின்றி தயாரிப்பு சந்தையில் வைக்கப்படவோ அல்லது எந்தவொரு நபருக்கும் வழங்கப்படவோ முடியாது. |
| குறிக்க / எச்சரிக்க வேண்டிய தேவைப்பாடு (Requirement to mark / warn) | தயாரிப்பாளர், இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தர், அதிகாரிகளால் குறிப்பிடப்பட்ட விதத்தில் தயாரிப்பு சில நிபந்தனைகளில் வழங்கக்கூடிய அபாயங்கள் பற்றிய எச்சரிக்கையுடன் தயாரிப்பைக் குறிக்குமாறு அதிகாரிகள் கோருவார்கள். |
| மீளப் பெறுவதற்கான அறிவிப்பு (Withdrawal Notice) | ஒரு தயாரிப்பு ஆபத்தானது என்று அதிகாரிகள் நம்புவதற்கு ஏதுவான காரணம் இருந்தால், அவர்கள் மீளப் பெறுவதற்கான அறிவிப்பை வெளியிடலாம், இது அதிகாரிகளின் அனுமதியின்றி தயாரிப்பை சந்தையில் வைப்பதையோ அல்லது எந்தவொரு நபருக்கும் வழங்குவதையோ தடைசெய்கிறது. தயாரிப்பாளர், இறக்குமதியாளர் அல்லது விநியோகஸ்தர், தயாரிப்பு முன்வைக்கும் அபாயங்கள் குறித்து வாடிக்கையாளர்களை எச்சரிக்குமாறு அதிகாரிகள் கோரலாம். |
| மீளழைப்பு அறிவிப்பு (Recall notice) | தயாரிப்பு ஏற்கனவே சந்தையில் கிடைப்பனவாக இருந்தால், தயாரிப்பு ஆபத்தானதாக இருந்தால், அதிகாரிகள் மீளழைக்கும் அறிவிப்பை வெளியிடலாம். மீளழைக்கும் அறிவிப்பில், ஏற்படைய நடைமுறைக் குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய தயாரிப்பாளர்கள், இறக்குமதியாளர்கள் அல்லது விநியோகஸ்தர்களை அதிகாரிகள் கோரலாம்.<br>**முக்கியமானது: மீளழைக்கும் அறிவிப்பானது, நுகர்வோருக்கு ஏற்படும் ஆபத்தைத் தடுக்க தயாரிப்பாளர் அல்லது விநியோகஸ்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உட்பட பிற சரிசெய்தல் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லாவிட்டால், மீளழைக்கும் அறிவிப்பை அதிகாரிகளால் மட்டுமே வழங்க முடியும்.** |



## ரீச் ஒழுங்குவிதிகள் (REACH Regulation)

ரீச் ஒழுங்குமுறையின் கீழ், ஒரு பொருள் ஒரு ளுஏஉஊ என அடையாளம் காணப்பட்டவுடன், அது தானாகவே ரீச் வேட்பாளர் பட்டியலில் (சுநுயுஊஉ ஊயனெனையவந டுளைவ) சேர்க்கப்படும். இந்தப் பட்டியல் அது சேர்க்கப்பட்ட திகதியையும், அது சேர்க்கப்பட்டதற்கான காரணத்தையும் குறிப்பிடும். வேட்பாளர் பட்டியலில் இருந்து, ரீச் (சுநுயுஊஉ) அதிகாரிகள் காலமுறையாக அங்கீகரிப்பு பட்டியலில் பொருட்களை உள்ளடக்குவர். அங்கீகரிப்புப் பட்டியலில் பொருட்கள் சேர்க்கப்படும் போது, அதிகாரிகள் ‘சூரிய அஸ்தமனத் திகதி’ (‘ளரளெநவ னயவந’) (முடிவுத் திகதி) அல்லது அதிகாரிகள் அத்தகைய ளுஏஉஊகளைப் பயன்படுத்த அனுமதிக்கும் கடைசித் திகதியையும் குறிப்பிடும்.

உதாரணமாக, இந்தக் கைநூலின் 2வது அத்தியாயத்தில் உள்ள பெட்டி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள ளுஏஉஊகளான, UV-320, UV-327, UV-328 மற்றும் ருஏ-350 ஆகியவற்றின் சூரிய அஸ்தமன (முடிவுத்) திகதி அல்லது கடைசித் திகதி 2023 நவம்பர் 27ஆகும். இதன் பொருள் இந்த சூரிய அஸ்தமன (முடிவுத்) திகதிக்குப் பின்னர், இந்த ளுஏஉஊ களில் ஏதேனும் உள்ள தயாரிப்புகள் ரீச் (சுநுயுஊஉ) ஒழுங்குமுறைக்கு இணங்காது என்பதாகும். நிக்கல், டையோக்டைல்டின் (னழைஉவலடவைெ) சேர்மங்கள், ட்ரிப்யூட்டில்டின் (வசளைரவலடவைெ) கலவைகள், குரோமியம் ஏஐ (ஊாசழஅரைஅ ஏஐ) மற்றும் தாலேட்டுகள் (ிாவாயடயவநள) ஆகியவை இந்த கைநூலில் உள்ள பொருட்களில் காணப்படும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் மற்றும் அபாயகரமான பொருட்களில் சிலவாகும்.

## இரவு ஆடை பாதுகாப்பு


### குழந்தைகள் இரவு உடைகள்

1985 ஆம் ஆண்டு இரவு ஆடை (பாதுகாப்பு) விதிமுறைகள் மற்றும் 5722 பிரித்தானிய தர நிலைகள் (BS) ஆகியவற்றின் படி, பைஜாமாக்கள், குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் பருத்தி கம்பளி குளியல் ஆடைகள் தவிர்த்து குழந்தைகளுக்கான இரவு ஆடைகள் ஆகியவை செயலாற்றுகை எரிதன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். குழந்தைகளின் ஆடைகள் பின்வரும் அளவீடுகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(I) இரவு ஆடைகள்: மார்பு அளவீடு 91 செ.மீ.க்கு அதிகமாகவோ, நீள அளவீடு 122 செ.மீ.க்கு அதிகமாகவோ இருக்காது.

(II) டிரஸ்ஸிங் கவுன்கள், குளியலறை உடைகள் மற்றும் ஏனைய அதுபோன்ற ஆடைகள்: மார்பு அளவீடு 97 செ.மீ. ஐ விட அதிகமாகவோ மற்றும் சட்டைக்கை அளவீடு 69 செ.மீ. ஐ விட அதிகமாகவோ இருக்காது.

BS 5722 குழந்தைகளின் இரவு ஆடைகள் எரிதன்மை செயலாற்றுகை தேவைப்பாடுகளை பூர்த்தி செய்கிறது என்பதை நிரூபிக்க சலவை மற்றும் சோதனை முறையை வழங்குகிறது.



## வயது வந்தோருக்கான இரவு ஆடைகள், பைஜாமாக்கள், குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் பருத்தி கம்பளி குளியல் ஆடைகள்

BS 5722 இன் படி எரிதன்மை செயலாற்றுகை தேவைப் பாடுகளைப் பூர்த்தி செய்யும் துணிகளைக் கொண்டு தயாரிக்கப்படும் இந்தத் தலைப்பின் கீழ் உள்ள அனைத்து தயாரிப்புகளும் 'தீயில் இருந்து விலகி இருங்கள்' ('KEEP AWAY FROM FIRE') என்ற அடையாளக் குறியீட்டை கொண்டிருக்க வேண்டும். இந்தத் தலைப்பின் கீழ் உள்ள ஏனைய எல்லா தயாரிப்புகளும் '5722 இற்கு குறைந்த எரிதன்மை' 'LOW FLAMMABILITY TO BS 5722'' என்ற அடையாளக் குறியீட்டையோ அல்லது 'தீயில் இருந்து விலகி இருங்கள், BS 5722க்கு குறைந்த எரிதன்மை உடையது' என்ற அடையாளக் குறியீட்டை கொண்டிருக்க வேண்டும். அத்தகைய வாசகங்கள் ஆடையின் கழுத்தில் இணைக்கப்பட்டுள்ள அடையாளக் குறியீட்டில் அல்லது ஆடை பற்றிய தகவல்களைக் கொண்ட அடையாளக் குறியீட்டுக்கு அருகில் உள்ள அடையாளக் குறியீட்டில் அல்லது ஆடையின் அளவைக் குறிக்கும் அடையாளக் குறியீட்டில் காட்சியளிக்க வேண்டும். வாசகமானது அதை உடனடியாகக் காணக்கூடியவாறு பெரிய எழுத்தில் 10 புள்ளிகள் கொண்ட நடுத்தர எழுத்துக்களிலும், தெளிவான மற்றும் நீடித்த வடிவத்திலும், போதுமான வேறுபட்ட நிறத்தின் பின்னணியில் இருக்க வேண்டும்.

## தீத்தடுப்பு இரசாயனங்கள் மூலம் பதப்படுத்தப்பட்ட துணியால் செய்யப்பட்ட இரவு ஆடைகள்

இந்தத் தலைப்பின் கீழ் உள்ள தயாரிப்புகள் அடையாளக் குறியீட்டில் பின்வரும் வாசகத்தைக் கொண்டிருக்க வேண்டும்: 50 டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக்கு மேல் கழுவ வேண்டாம். சலவை முகவரின் பொருத்தப்பாட்டினை சரிபார்க்கவும் ('DO NOT WASH AT MORE THAN 50°C. CHECK SUITABILITY OF WASHING AGENT'). இந்த வாசகம் ஆடையின் கழுத்துப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ள அடையாளக் குறியீட்டிலோ அல்லது ஆடை பற்றிய தகவலைக் கொண்ட ஏதேனும் அடையாளக் குறியீட்டுக்கு உடனடுத்துள்ள ஏதேனும் அடையாளக் குறியீட்டிலோ அல்லது ஆடையின் அளவைக் குறிக்கும் அடையாளக் குறியீட்டிலோ அல்லது பிரிவு 3(b) இன் கீழ் தேவைப்படுத்தப்படும் வாசகங்களுக்குப் பின்னர் காட்சிப்படுத்தப்பட வேண்டிய வாசகங்களாயின், 1985 ஆம் ஆண்டின் இரவு ஆடை (பாதுகாப்பு) ஒழுங்குமுறைகளுக்கான இணைப்பு 3 இன்  பிரிவு 3(டி) இன் கீழ் தேவைப்படுத்தப்படும் வாசகங்களைக் கொண்ட ஏதேனும் அடையாளக் குறியீட்டிலோ காட்சிப்படுத்துப்பட வேண்டும். வாசகமானது அதை உடனடியாகக் காணக்கூடியவாறு பெரிய எழுத்தில் ஆறு புள்ளிகள் கொண்ட நடுத்தர எழுத்துக்களிலும், தெளிவான மற்றும் நீடித்த வடிவத்திலும், போதுமான வேறுபட்ட நிறத்தின் பின்னணியில் இருக்க வேண்டும். இரவு ஆடை தயாரிப்புகளுக்கான தயாரிப்பு பாதுகாப்புத் தேவைப்பாடுகள் பற்றிய மேலும் தகவலுக்கு இந்த வழிகாட்டியைப் (இணைப்பு 72) பார்க்கவும்.


© Freepik.com



# தயாரிப்பு பொதியிடல்

## அத்தியாவசிய தேவைப்பாடுகள்

தயாரிப்பாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்தப்படும் பொதியிடல் பொருட்கள் இந்த அத்தியாவசிய உற்பத்தி மற்றும் கலவை தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

**(I)** ஒழுங்குபடுத்தப்பட்ட கன உலோகங்களின் செறிவு - அதாவது காட்மியம், இரசம், ஈயம் மற்றும் இரசாயன கலவைகொண்ட குரோமியம் (hexavalent chromium) - பின்வரும் விதி விலக்குகளுக்கு உட்பட்டு ஒரு மில்லியனுக்கு 100 பாகங்களுக்கு மேல் இருக்கக்கூடாது:

- **a.** முற்றிலும் ஈயப் படிகக் கண்ணாடியைக் கொண்ட பொதியிடலுக்கு இது பொருந்தாது.
- **b.** இது அட்டவணை 2  இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்யும் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் மற்றும் மறுபயன்பாட்டு அமைப்பில் இருக்கும் பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் கிரேட்களுக்கு இது பொருந்தாது.
- **c.** அட்டவணை 3  இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் கண்ணாடிபொதியிடலுக்கு இது ஏற்புடையது ஆகாது.

**(II)** பொதியிடல் எரிக்கப்படும்போது அல்லது நிலத்தில் கழிவு நிரப்பப்படும்போது அதில் உள்ள சாம்பல், உமிழ்வுகள் அல்லது கசிவுகளில் தீங்கு விளைவிக்கும் மற்றும் பிற அபாயகரமான பொருட்கள் இருப்பது குறைக்கப்படுதல்.

**(III)** மீள்பயன்பாடு அல்லது மீட்டெடுப்பை அனுமதிக்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்டு வணிக மயமாக்கப்பட்டது, மேலும் பொதியிடல் கழிவுகள் அல்லது பொதியிடல் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளின் எச்சம் அகற்றப்படும்போது சூழலில் அதன் தாக்கத்தை குறைக்கிறது.

நீங்கள் மீள் பயன்படுத்தக்கூடிய பொதியிடலை பயன்படுத்தினால், அது பின்வரும் அனைத்து தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்கிறது என்பதை உறுதிப்படுத்தவும்.

- **a.** பொதியிடலின் பண்புகள் மற்றும் பௌதீக அம்சங்கள் பொதுவாக யூகிக்கக்கூடிய பயன்பாட்டு நிலைமைகளில் பல பயணங்கள் அல்லது சுழற்சிகளுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.
- **b.** பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய இந்த பயன்படுத்தப்பட்ட பொதியிடலைச் செயன்முறையாக்குவது சாத்தியமாக இருக்க வேண்டும்
- **c.** பொதியிடல் மீள் பயன்படுத்த முடியாமல் கழிவாக மாறும்போது, அது மீட்டெடுக்கக்கூடிய பொதியிடலுக்கான குறிப்பான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

## இணக்கமின்மையின் விளைவுகள்

அத்தியாவசியத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத பொதியிடலைப் பயன்படுத்துவது மற்றும்/அல்லது பதிவுகளைப் பேணத் தவறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். விதிமுறைகளுக்கு இணங்காதவர்கள் எனக் கண்டறியப்படுவோர் அபராதம் செலுத்த வேண்டும்.

# அடையாளக் குறியிடல் தேவைப்பாடுகள்

## ஆடை அடையாளக் குறியிடல் தேவைப்பாடுகள்

2012 ஆம் ஆண்டின் ஆடை தயாரிப்புகள் (அடையாளக் குறியிடல் மற்றும் இழை கலவை) ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, ஆடை தயாரிப்புகள் பிடவை இழைகள், தரைவிரிப்புகள், மெத்தைகள், முகாம் பொருட்கள், தளபாடங்கள், நிழல் விரிப்புகள் மற்றும் பிடைவைகளால் செய்யப்பட்ட பகுதியளவு-உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் உற்பத்திசெய்யப்பட்ட தயாரிப்புகள் அடங்கும். இருப்பினும், அனைத்து ஆடைத் தயாரிப்புகளும் அடையாளக் குறியீட்டைக் கொண்டிருக்க வேண்டியதில்லை. ஒரு அடையாள குறியீடு தேவையில்லாத தயாரிப்புகளின் குறிப்பான பட்டியலுக்கு A2 பெட்டியைப் பார்க்கவும். ஆடை தயாரிப்புகளுக்கான அடையாள குறியீடுகளில் சில தேவைப்பாடுகள் பின்வருவனவற்றைச் உள்ளடக்க வேண்டும்.

**(I)** ஆடை குறியீடு (Label) ஆங்கிலத்தில் இருக்க வேண்டும்.

**(II)** ஆடைக் குறியீடானது, அணுகக்கூடியதாகவும், நீடித்ததாகவும், படிக்கக்கூடியதாகவும், காணக்கூடியதாகவும் இருக்க வேண்டும்.

**(III)** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இழைகளைக் கொண்ட தயாரிப்புகளில், பின்வரும் வகையில் “பருத்தி 70%, பட்டு 20%, சணல் 10%“ என்ற முறையில் இழை உபயோகத்தின் சதவீதத்தை உள்ளடக்கியிருக்க வேண்டும்.

**(IV)** சல்வார் ஆடைகளில் உள்ள லைனிங் போன்ற ஒரு தயாரிப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூறுகள் இருந்தால், அத்தகைய ஒவ்வொரு கூறுகளின் உள்ளடக்கமும் அடையாள குறியிடப்பட வேண்டும்.

**(V)** ஆடை ஒரே ஒரு இழையால் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே ஒரு அடையாள குறியீட்டில் ‘தூய’ (‘pure’) என்ற வார்த்தை இருக்க முடியும்.

**(VI)** பட்டு-பருத்தி அல்லது பட்டு அசிடேற்று போன்ற பட்டுடன் கலந்த இழைகள் உட்பட வேறு எந்த இழையையும் விவரிக்க “பட்டு” என்பதை பயன்படுத்த முடியாது.

**(VII)** ஆடைத் தயாரிப்புகளின் பல்பொதிகள் தனித்தனி அலகு வாரியாக பொதியிடலுக்கு மாறாக உள்ளடங்கிய பொதி வாரியான பொதியிடலைக் கொண்டிருக்கலாம்.

ஆடை அடையாளக் குறியீடு தேவைப்பாடுகளின் முழு பட்டியலைப் புரிந்து கொள்ள இந்த வழிகாட்டி ஐ பார்க்கவும்.

### பெட்டி A1: அடையாள குறியீடுகள் தேவையில்லாத ஆடைப் பொருட்கள்

- செயற்கை பூக்கள், பொத்தான்கள் மற்றும் கொக்கிகள், அடையாள குறியீடுகள் மற்றும் பேட்ஜ்கள், மேக்-அப் உறைகள்
- அடுப்பு கையுறைகள் மற்றும் துணி, வர்ணம் பூசப்பட்ட கேன்வாஸ் (canvas), குண்டூசிச் செருகாணைகள் (pincushions) , விளையாட்டுக்கான பாதுகாப்புத் தேவைகள் (கையுறைகள் தவிர), சேணம்
- ஸ்லீவ் ப்ரொடக்டர்கள் (Sleeve protectors), கை உதவிப் பட்டிகள் (sleeve-supporting arm bands), பல பாகங்கள் கொண்ட மற்றும் மேற்பரப்பளவு 500 செமீ 2க்கு மிகாத மேசை விரிப்புகள்.
- நாடாக்கள், அவற்றின் உற்பத்திக்கான பொருட்கள் உட்பட் தேநீர் மற்றும் காபி வசதிகள், காலணிகளின் ஜவுளி பாகங்கள், அடிப்படை மற்றும் அடிப்படை துணிகள் மற்றும் விறைப்புக்கான ஜவுளி பொருட்கள்
- புகையிலை பைகள், கழிப்பறை பெட்டிகள், பொம்மைகள், பயண பொருட்கள் மற்றும் கைக்கடிகார வார்கள்

ஆடை அடையாள குறியீடுகள் தேவையில்லாத தயாரிப்புகளின் முழு பட்டியலுக்கு இந்த வழிகாட்டி I பார்க்கவும்.



## காலணி அடையாள குறியிடல் தேவைப்பாடுகள்

1995ஆம் ஆண்டு காலணி (கலவைக்கான அறிகுறி) அடையாளக் குறியிடல் ஒழுங்குவிதிகளானது பின்வருவன தவிர, எளிய செருப்புகள் முதல் தொடை வரையிலான பூட்ஸ் வரை அனைத்து விபரங்களின் காலணிகளுக்கும் ஏற்புடையதாகும்:

- பயன்படுத்திய அல்லது அணிந்த காலணிகள்
- பாதுகாப்பு காலணிகள்
- அஸ்பெஸ்டாஸ் கொண்ட காலணிகள்
- 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளால் விளையாடுவதற்கு (உதாரணமாக, வைபகங்களுக்கு அணியும் விசேட உடை (fancy dress) பயன்படுத்தப்படும் காலணி

காலணிகளின் மேல், உள்ளுறைத்தோல், மற்றும் அடிப்புறம் ஆகியவை உருவப்படங்கள் (சின்னங்கள்) அல்லது வாசகங்கள் வடிவில் செய்யப்பட்ட முக்கிய பொருளின் குறிப்புடன் அடையாள குறியிடப்பட வேண்டும்.

ஒரு காலணி சோடிக்கு குறைந்தபட்சம் ஒரு காலணியுடன் அடையாள குறியிடல் இணைக்கப்பட வேண்டும், மேலும் அது பொதியிடலிலும் தோன்றலாம்.


80% உள்ளடக்கிய பொருள் என்ன என்பதை ஆங்கிலத்திலோ அல்லது தெளிவான உருவப்படத்திலோ அடையாள குறியிடல் குறிப்பிட வேண்டும்:

- மேற்புறத்தின் வெளிப்பரப்பளவு
- உள்ளுறைத்தோலின் மேற்பரப்பு பகுதி (இது மேல் மற்றும் காலணிப் பொருளின் உட்புறத்தை உருவாக்கும் உள் அடித்தோல் என்று பொருள்படும்)
- அடிப்புறம்.

பல பொருட்கள் பயன்படுத்தப்படும் போது, காலணிகளின் கலவையில் இரண்டு முக்கிய பொருட்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு சோடியிலும் குறைந்தபட்சம் ஒரு காலணியுடன் அடையாள குறியீடு இணைக்கப்பட வேண்டும், மேலும் அச்சிடுதல், ஒட்டுதல், புடைப்புருவாக பொறித்தல் அல்லது இணைக்கப்பட்ட அடையாள குறியீட்டினை பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் ஒட்டலாம் அது தெரியும்படியாக, பாதுகாப்பாக இணைக்கப்பட்டதாக மற்றும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும். அடையாளக் குறியீடு பொதியிடலிலும் காட்சியளிக்கலாம் ஆனால் அது காலணியிலேயே இருக்க வேண்டும்.

சில்லறை விற்பனைக் கடையில் உருவப்படங்கள் பயன்படுத்தப்பட்டால், அந்த குறியீடுகள் எதைக் குறிக்கின்றன என்பதை நுகர்வோருக்கு விளக்கும் அறிவிப்பு காட்டப்பட வேண்டும். அந்த அறிவிப்பானது நுகர்வோர்களால் பார்க்கவும் புரிந்துகொள்ளவும் முடியும் அளவுக்கு பெரியதாக இருக்க வேண்டும்.




## உரு A4: காலணி அடையாளக் குறியிடல் உருவப்படங்கள் மற்றும் மொழிக்கான உதாரணம்

1. Pictograms or written indications concerning the parts of the footwear to be identified.

| | PICTOGRAMS | WRITTEN INDICATIONS |
|---|---|---|
| (a) Upper. |  | Upper. |
| (b) Lining and sock. |  | Lining and sock. |
| (c) Outer sole. |  | Outer sole. |

2. Pictograms or written indications concerning materials used in the composition of footwear.

| | PICTOGRAMS | WRITTEN INDICATIONS |
|---|---|---|
| (a) (i) Leather. |  | Leather. |
| (ii) Coated leather. |  | Coated leather. |
| (b) Natural textile materials and synthetic or non-woven textile materials. |  | Textile. |
| All other materials. |  | Other materials. |

நுகர்வோருக்கு அணுகல் இல்லாத இடத்திலிருந்து காலணிகள் விற்கப்படும் இடத்தில் உருவப்பட அடையாள குறியீடுகள் பயன்படுத்தப்பட்டால் (உதாரணமாக, அஞ்சல் கொள்வனவு கட்டளை (mail order) அல்லது இணைய விற்பனை), பயன்படுத்தப்படும் உருவப்படங்களின் அர்த்தத்தினை நுகர்வோருக்குத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

காலணி அடையாளக் குறியிடல் தேவைப்பாடுகளின் முழு பட்டியலை தெரிந்துகொள்ள இந்த வழிகாட்டியை ப் பார்க்கவும். படம் A4 இல் காட்டப்பட்டுள்ளபடி, தகவல் தேவைப்பாடுகளுடன் கூடிய அடையாள குறியீட்டினை ஒரு உருவப்படம் அல்லது எழுத்து வடிவில் வழங்கலாம்.



03

# இணைப்பு III: பேண்தகுதன்மை தரநிலைகள்

அத்தியாயம் 3 இல் குறிப்பிட்டுள்ளபடி, பேண்தகுதன்மை தரநிலைகள் மற்றும் சான்றுப்படுத்தல்கள் வணிகங்கள் ஒரு போட்டித்தன்மையை தக்கவைத்துக்கொள்ளவும் முக்கிய சந்தை வாய்ப்பினை பெறவும் உதவுகிறது. அவ்வாறு செய்ய, தயாரிப்பாளர்கள் இரண்டு முக்கிய தேவைப்பாடுகளை நன்கு அறிந்திருக்க வேண்டும்:

a. சான்றிதழைப் பெறுவதற்கான பொதுவான செயன்முறை மற்றும்
b. ஏற்புடைய சில வேறுபட்ட சான்றுப்படுத்தல்கள்.

இந்த கைநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள பெரும்பாலான தயாரிப்புகள் (i) பருத்தி (ii) பட்டு (iii) காஷ்மீர் கம்பளி (iv) பொலிஸ்டர் (v) பிளாஸ்டிக் (vi) மரம் அல்லது (vii) தோல் ஆகியவற்றால் செய்யப்பட்டவை என்பதால், இந்த இணைப்பில் தேவைப்படுத்தப்படும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சில பேண்தகுதன்மை சான்றுப்படுத்தல்களின் உதாரணங்கள் உள்ளன.



# சான்றிதழ்களைப் பெறுவதற்கான படித்தரங்கள்

பல சான்றிதழ்கள் ஒரே மாதிரியான செயன்முறைகளைக் கொண்டுள்ளதுடன், பின்வரும் படித்தரங்களாக கட்டமைக்கலாம்.

## கட்டம் 1: சரியான தரநிலையை அடையாளம் காணவும்

வெவ்வேறு VSS சான்றிதழ்கள் தயாரிப்பு மற்றும் மூலப் பொருட்களின் வெவ்வேறு கட்டங்களை உள்ளடக்கியது என்பதுடன், சில நாடுகளில் மட்டுமே பயன்படுத்தப்படலாம். சில சமயங்களில், தயாரிப்பாளர்கள் சில சான்றிதழ்களைப் பெற வேண்டும் என்று இறக்குமதியாளர் குறிப்பிடலாம். வேறு சூழ்நிலைகளில், கொள்வனவாளருடன் விற்பனை ஒப்பந்தம் குறித்து பேரம் பேசுவதற்கு முன்னர் பல்வேறு வகையான VSS சான்றிதழுடன் உங்களைப் பரீட்சயப்படுத்திக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்ய ITC தரநிலைகள் வரைபடத்தின் "தரநிலைகளை அடையாளம் காணவும்" மற்றும் "ஒப்பிடுக"   கருவிகளைப் பயன்படுத்தவும்.

## கட்டம் 2: ஒரு இடைவெளி பகுப்பாய்வினை மேற்கொள்ளவும்

ஏற்கனவேயுள்ள வணிக நடைமுறைகள் மற்றும் அடையாளம் காணப்பட்ட VSS இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இடையில் ஏதேனும் இடைவெளிகளைக் கண்டறிய தயாரிப்பாளர்கள் ஒரு இடைவெளி பகுப்பாய்வினை மேற்கொள்ள வேண்டும். பகுப்பாய்வில் இடைவெளிகள் கண்டறியப்பட்டால், தயாரிப்பாளர்கள் அடுத்த கட்டங்கள், செலவுகள் மற்றும் அத்தகைய அடுத்த கட்டங்களைச் செயற்படுத்துவதற்கான காலம் உட்பட பொருத்தமான நடவடிக்கையைத் தீர்மானிக்க வேண்டும். அவை செயற்படுத்தப்பட்டதும், கட்டம் 3 க்குச் செல்லவும். இடைவெளி பகுப்பாய்விலிருந்து எந்த இடைவெளிகளும் அடையாளம் காணப்படவில்லை என்றால், தயாரிப்பாளர்கள் நேரடியாக கட்டம் 3 க்கு செல்லலாம்.

## கட்டம் 3: சான்றிதழுக்கு விண்ணப்பிக்கவும்

விண்ணப்பிப்பதற்கு முன், ஒரு தயாரிப்பாளர் சான்றுப்படுத்தலின் விலையை கட்டமைத்திருப்பதை உறுதி செய்வது முக்கியம். செலவுகளில் அங்கத்துவக் கட்டணங்கள், கணக்காய்வுக் கட்டணம் (தேவைப்படுத்தப்படும் வருகைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மாறுபடும்),தயாரிப்பு தரநிலைக்கும் VSS சான்றுப்படுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைகளுக்கும் இடையே இடைவெளி இல்லை என்பதை உறுதி செய்வதற்கான செலவு ஆகியவை அடங்கும்.

தயாரிப்பாளர் ஏற்புடைய செலவை நிர்ணயித்து திட்டமிட்டவுடன், தயாரிப்பாளர்கள் சான்றிதழுக்காக ஏளுளு அமைப்பிற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தைத் தொடர்ந்து, தயாரிப்பாளர்-விண்ணப்பதாரர் ஒரு கணக்காய்வாளர் / கண்காணிப்பாளரை ஒரு தள மதிப்பீட்டை (on-site assessment)  மேற்கொள்ள அழைப்பார்.

வெவ்வேறு VSS சான்றுப்படுத்தல்கள் செயற்படும் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு அங்கீகரிக்கப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்ட கணக்காய்வாளர்களைக் கொண்டுள்ளன. உதாரணமாக, இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட உலகளாவிய சேதன ஆடை தர நிலை  (GOTS) கணக்காய்வாளர்களில் சிலர்  பியூரோ வெரிடாஸ் கன்சியூமர் புரடக்ட்ஸ் சேர்விசஸ் (Bureau Veritas Consumer Products Services), CCPB SRL, கிளீன் குளோப் இன்டர்நெஷனல் (Clean Globe International),கொன்ட்ரோல் யூனியன் செர்ட்டிபிகேசன்ஸ் (Control Union Certifications), ஜீசீஎல் இன்டர்நெஷனல் (GCL International) மற்றும் ஜீஎஸ்சீஎஸ் இன்டர்நெஷனல் (GSCS International). GOTS சான்றிதழைப் பெற விரும்பும் தயாரிப்பாளர்கள் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.






## கட்டம் 4: கண்காணிப்பு மற்றும் திருத்த நடவடிக்கை கோரிக்கைகள்

தயாரிப்பாளர்கள் பின்னர் ஒரு கணக்காய்வுக்குத் தயாராக வேண்டும், அங்கு கண்காணிப்பாளர் அலகின் தள மதிப்பீட்டை (on-site assessment) நடத்தி பின்னர் கணக்காய்வு அல்லது கண்காணிப்பு அறிக்கையை வெளியிடுவார். கண்காணிப்பாளர் திருத்த நடவடிக்கை கோரிக்கைகளையும் வழங்கலாம், இது ஏற்கனவே உள்ள வணிக நடைமுறைகளுக்கும் ஏளுளு சான்றிதழின் கீழ் தேவைப்படுத்தப்படும் தரத்திற்கும் இடையே உள்ள இடைவெளிகளை சரிசெய்ய தயாரிப்பாளர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விவரிக்கிறது.

திருத்த நடவடிக்கை கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன், இடைவெளிகள் சரியாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த புதிய கணக்காய்வு நடத்தப்படும். கணக்காய்வு அறிக்கையில் தெளிவற்ற பத்திகள் இருந்தால், கணக்காய்வாளரிடம் விளக்கம் கேட்க வேண்டும். தெளிவற்ற முடிவு வெளியிடப்பட்டால், விளக்கங்களை கோருவதுடன், தேவைப்பட்டால், முடிவை எதிர்த்து மேன்முறையீடு செய்யவும்

## கட்டம் 5: சான்றுப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் புதுப்பித்தல்

கணக்காய்வு முடிந்தவடைந்து மற்றும் சரிசெய்தல் நடவடிக்கை கோரிக்கைகள் எதுவும் நிலுவையில் இல்லை என்றிருந்தால் சான்றிதழ் வழங்கப்படும். சான்றுப்படுத்தப்பட்ட தயாரிப்பாளர் தொடர்ந்து ஏற்புடைய தேவைப்பாடுகளுக்கு இணங்குவதை உறுதிசெய்ய, VSS சான்றுப்படுத்தலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பொறுத்து, தள அல்லது கைவழி அடிப்படையிலான சரிபார்ப்பு (On-site or desk-based verification) கணக்காய்வுகளும் செய்யப்படலாம்.

ஒவ்வொரு சான்றுப்படுத்தலுக்கும் வெவ்வேறு செல்லுபடியாகும் காலம் உள்ளதுடன், அதற்கேற்ப புதுப்பிக்கப்பட வேண்டும். புதுப்பித்தலின் அடுத்த திகதியைத் தீர்மானிக்கவும் அதற்கேற்ப திட்டமிடவும் தயாரிப்பாளர்கள் சான்றிதழ் பெறப்பட்ட இணையதளத்தை ஆராய வேண்டும்.

# தொடர்புடைய சான்றுப்படுத்தல்களின் உதாரணங்கள்

## உலகளாவிய சேதன ஆடை தரநிலைகள் (GOTS)

**இந்த சான்றுப்படுத்தல் தோல் பொருட்கள் மற்றும் ஆடைகளுக்கு ஏற்புடையதாகும்**

GOTS சான்றுப்படுத்தல் I பெற்றுக்கொள்வது மிகவும் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த சான்றிதழ் உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், சேதன பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் இழைகளுக்கு ஒரு தரநிலையாக செயற்படுகிறது. GOTS சான்றுப்படுத்தல் ஆனது பொருள் மூலம் முதல் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி வரை விநியோகச் சங்கிலியின் ஒவ்வொரு கட்டத்தையும் உள்ளடக்கியதாகும். இது நெறிமுறை வணிக நடத்தை மற்றும் சூழல் பாதுகாப்பில் முதன்மை கவனம் செலுத்தி, தோல் பொருட்கள் மற்றும் ஆடைகளின் செயன்முறையாக்கிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு சான்றளிக்கிறது. GOTS சான்றுப்படுத்தலை எவ்வாறு பெறுவது என்பது குறித்த கட்டம் கட்டமான வழிகாட்டிக்கு இங்கே பார்க்கவும்.

நீங்கள் GOTS சான்றுப்படுத்தலுடன் ஆடை மற்றும் தோல் விநியோகஸ்தர்களைத் தேடும் தயாரிப்பாளராக இருந்தால், நீங்கள் அவர்களை GOTS தரவுத்தளத்தில்.தேடலாம்.  இந்த தரவுத்தளத்தில் GOTS சான்றிதழைப் பெற்றுள்ள இலங்கை விநியோகஸ்தர்கள் உள்ளனர், இது உங்கள் தயாரிப்புகளுக்கு GOTS சான்றிதழ் முத்திரையைப் பெறுவதற்கான ஒரு படியாக இருக்கலாம்.

**விரைவான உதவிக்குறிப்பு**

ITC தரநிலைகள் வரைபடத்தை ஆராய்வதன் மூலம் ஒவ்வொரு தரநிலையையும் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள். ITC வரைபடத்தில் உள்ள ஒவ்வொரு தரநிலையிலும் இணக்கத் தேவைப்பாடுகள், நிர்வாகம் மற்றும் வளங்கள் பற்றிய விரிவான தகவல்கள் உள்ளன.
தரநிலை தேவைப்பாடுகள் மற்றும் விண்ணப்பதாரர்களுக்கான நிதி உதவிகளைப் பூர்த்தி செய்ய கிடைக்கும் தொழில்நுட்ப உதவியைப் பற்றி மேலும் அறிய தயாரிப்பாளர்கள் 'வளங்கள்' என்ற தாவலைப் (tab) பார்க்க வேண்டும்.

---

## OEKO-TEX

**இந்த சான்றுப்படுத்தல் தோல் பொருட்கள் மற்றும் ஆடைகளுக்கு ஏற்புடையதாகும்**

நீங்கள் தோல் பொருட்கள் மற்றும் ஆடை உற்பத்தி செய்யும் தொழிலில் இருந்தால், உங்களுக்கு பொருத்தமான ஆறு OEKO-TEX சான்றிதழ்கள் உள்ளன.

- மேட் இன் கிரீன் (Made in Green)
- ஸ்டேண்டர்ட் 100 (Standard 100)
- லெதர் ஸ்டேண்டர்ட் (Leather Standard)
- ஸ்டெப் (STeP)
- ரெஸ்பொன்சிபல் பிசினஸ்
- (Responsible Business)
  எகோ பாஸ்போர்ட் (Eco Passport)

இந்தச் சான்றுப்படுத்தல்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள், தயாரிப்பு அடிப்படையிலான அளவுகோல்கள் அல்லது தயாரிப்பில் அதிக கவனம் செலுத்துவதாகும், அதேநேரம் சில செயன்முறை அடிப்படையிலானவை அல்லது தயாரிப்பை தயாரிக்கும் செயன்முறையில் அதிக கவனம் செலுத்துவதாகும். ஒரு சான்றிதழானது ஆடையில் இரசாயனப் பயன்பாட்டை மையமாகக் கொண்டது, மற்றொன்று முழு உற்பத்தி செயல்முறையிலும் பேண்தகுதன்மையில் கவனம் செலுத்துகிறது, மேலும் ஒன்று உற்பத்தியின் அனைத்து பகுதிகளின் ஒட்டுமொத்த பாதுகாப்பிலும் கவனம் செலுத்துகிறது. வணிகத்தால் அடையக்கூடிய இணக்கத் தரங்களின்படி தயாரிப்பாளர்கள் ஒரு சான்றிதழைத் தேர்ந்தெடுக்க பரிந்துரைக்கப்படுகிறது.



# 04 இணைப்பு IV : சுங்க நடைமுறைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்

அத்தியாயம் 4  இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தயாரிப்புகள் சுங்கம் வழியாக செல்வதை உறுதிசெய்ய, ஏற்றுமதியாளர்கள் சுங்க நடைமுறைகள் மற்றும் தேவையான துணை ஆவணங்களுடன் நன்கு பரிட்சயமாக இருக்க வேண்டும்.

பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்ய, இலங்கை ஏற்றுமதியாளர்கள் ASYCUDA போர்ட்டலில் பிரகடனத்தை தாக்கல் செய்யும் போது பின்வரும் ஆவணங்களைத் தயாராக வைத்திருக்க வேண்டும்.

## வணிக விலைப்பட்டியல் (Commercial Invoice)

ஏற்றுமதியாளரால் தயாரிக்கப்பட்ட, ஒரு வணிக விலைப்பட்டியல் ஏற்றுமதியாளர்களுக்கு மிக முக்கியமான ஆவணம் மற்றும் விற்பனை விலைப்பட்டியல் விட விரிவானது. வணிக விலைப்பட்டியல் பின்வருவனவற்றை கொண்டுள்ளது:

- பரிவர்த்தனை தொடர்பான அனைத்து தகவல்களும்
- ஏற்றுமதிக்கான காரணங்கள்
- கட்டணம் செலுத்தும் முறை
- உளு குறியீடு
- எடை மற்றும் பொருட்களின் எண்ணிக்கை
- தெரிவுசெய்யப்பட்ட போக்குவரத்து முறை மற்றும் போக்குவரத்து பாதை
- இன்கோடெர்ம் (Incoterms)
- சரக்கின் பெறுமதி.

வெவ்வேறு தரப்பினர் வணிக விலைப்பட்டியல்களின் வெவ்வேறு வடிவங்களைப் பயன்படுத்தும் அதேநேரம், பொதுவாகப் பயன்படுத்தப்படும் வணிக விலைப்பட்டியல் வடிவமைப்பைக் கண்டறிய உங்கள் வர்த்தகச் சங்கத்திடம் பேசுங்கள். ஒரு வணிக விலைப்பட்டியல் சரக்கு மீது ஏதேனும் தீர்வைகள் மற்றும் கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க சுங்க அதிகாரிகளால் பயன்படுத்தப்படுகிறது.

கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டவுடன், நாணய மாற்று விகிதம் மிகவும் முக்கியமானதாக மாறுகிறது. நாணய மாற்று விகிதம் பெறுமதி அதிகரிக்கவோ அல்லது பெறுமதி குறையவோ செய்யலாம், அதாவது கொள்வனவாளரிடமிருந்து பெறப்பட்ட பணத்தின் இறுதித் தொகையில் வித்தியாசம் இருக்கலாம். மாற்று விகித ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் இழப்புகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள, கீழே கொடுக்கப்பட்டுள்ள உதவிக்குறிப்புகளைப் பார்க்கவும்.

### பெட்டி யு2: ஒரு வணிக விலைப்பட்டியலின் உள்ளடக்கம்

- விற்பனையாளர், கொள்வனவாளர் மற்றும் இறுதி பெறுநரின் முழுப் பெயர், முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள் (இது கொள்வனவாளரிடமிருந்து வேறுபட்டால்)
- வர்த்தக விலைப்பட்டியல் இலக்கம் மற்றும் வழங்கப்பட்ட திகதி
- கொள்முதல் கட்டளை அல்லது ஒப்படைப்புப் பொருள் விளக்கப் பட்டியல் (proforma invoice) இலக்கம் மற்றும் வழங்கப்பட்ட திகதி (குறிப்பாக ஒரே ஒப்பந்தத்தின் கீழ் பல கட்டளைகள் இருந்தால்)
- உளு குறியீடு, தயாரிப்பு விபரம், ஐஉெழவநசஅள, பொருட்களின் உற்பத்தி நாடு
- போக்குவரத்து பாதை மற்றும் பொருட்களின் உண்மையான பெறுமதி மேலும் தகவலுக்கு, இங்கே யும் இங்கே யும் பார்க்கவும்.

**விரைவான உதவிக்குறிப்பு: மாற்று விகித ஏற்ற இறக்கங்களைக் கருத்திற்கொள்ளுங்கள்**

மாற்று விகித ஏற்ற இறக்கங்களிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள, பின்வரும் உதவிக்குறிப்புகளைக் கவனியுங்கள்.

- பணம் செலுத்தும் நாளில் ஏற்புடைய மாற்று விகிதத்தைப் பயன்படுத்துங்கள் அல்லது அந்நிய செலாவணி கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுங்கள்
- விலை ஏற்ற இறக்கங்களைக் கணக்கிடுதல் மற்றும் மேலதிக கட்டணத்தைச் சேர்த்து சாத்தியமான இழப்புகளை ஈடுகட்டுதல்
- உங்கள் வங்கி முகாமையாளரிடம் அல்லது முன் அனுபவமுள்ள ஒரு நிபுணரிடம் பேசுங்கள்

# பொதிவுப் பட்டியல் (packing list)

ஏற்றுமதியாளரால் தயாரிக்கப்பட்ட, ஒரு பொதிவுப் பட்டியலில் பின்வருவன போன்ற சரக்கு பற்றிய விரிவான தகவல்கள் உள்ளன:

- தயாரிப்பு விபரம்
- அலகுகளின் எண்ணிக்கை மற்றும் மொத்த எடை
- பொதியிடல் அறிவுறுத்தல்கள்
- பயன்படுத்தப்படும் பொதியிடல் வகை, அதாவது சிறு தொகுதிகளா அல்லது அட்டைப்பெட்டிகளில் அடைக்கப்பட்டதா, அதன் பரிமாணங்கள் மற்றும் பொதியிடலில் உள்ள அடையாளங்கள்
- விற்பனையாளர் மற்றும் கொள்வனவாளர் பற்றிய குறிப்பு.

ஏனைய எல்லா ஆவணங்களையும் போலவே, இது கொள்வனவாளர், விற்பனையாளர் மற்றும் போக்குவரத்தை மேற்கொள்பவர் பற்றிய குறிப்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**விரைவான உதவிக்குறிப்பு: குழப்பத்தைத் தவிர்க்கவும்**

ஒரு பொதிவுப் பட்டியல் வர்த்தக விலைப்பட்டியல் போன்றது அல்ல. உங்கள் தயாரிப்புகளை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்ய இரண்டு ஆவணங்களும் அவசியம்.

சரக்கு அனுப்புபவர்கள் அல்லது சரக்கு ஏற்றுமதி செய்பவர்கள் சரக்குக் கட்டணத்தைத் (bill of lading) தயாரிக்க பொதிவுப் பட்டியலைப் (packing list) பயன்படுத்துகின்றனர். இலங்கையில், சுங்க அதிகாரிகள் கப்பல் ஏற்றப்பட்ட சரக்கின் உள்ளடக்கங்களை மீளாய்வு செய்வதற்கும் கண்--காணிப்பதற்கும் இதைப் பயன்படுத்தலாம், மேலும் ஏற்றுமதியாளர்கள் கடனுறுதிக் கடிதத்தின் கீழ் பணம் பெறுவதற்குபொதிவுப் பட்டியலின் பிரதி தேவைப்படலாம்.

# உற்பத்தி இடத்தின் சான்று (Proof of origin)

அத்தியாயம் 1  இல் விளக்கப்பட்டுள்ளபடி, இலங்கை ஏற்றுமதியாளர்கள் DCTS இன் கீழ் முன்னுரிமை கட்டண விகிதங்களைக் கோருவதற்கு, அவர்களது பொருட்கள் இலங்கையில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட என்பதை நிரூபிக்க வேண்டும். ஏற்றுமதியாளர்கள் இலங்கை வர்த்தகத் திணைக்களத்தில் பதிவுசெய்து தமது ஏற்றுமதிச் சுருக்கத்தை தொடர்ந்து இற்றைப்படுத்த வேண்டும். மேலும் விவரங்களுக்கு அத்தியாயம் 1 ஐப் பார்க்கவும்.

உரிமைகோரல் விருப்பத்தேர்வுகள் பற்றிய DCTS வழிகாட்டியின்படி, இலங்கை ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதிகளை மேற்கொள்ளும் போது, வர்த்தக விலைப்பட்டியல் அல்லது பொதிவுப் பட்டியல் அல்லது படிவம் A இல் ஒரு  உற்பத்தி இடம் பற்றிய மூலப் பிரகடனத்தைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.

இது பின்வருவன போன்ற ஒரே மாதிரியான பொருட்களின் பல ஏற்றுமதிகளுக்கும் ஏற்புடையதாகும்:

- அதே விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டது
- அதே UKCC யை கொண்டிருத்தல்
- அதே ஏற்றுமதியாளரால் அதே இறக்குமதியாளருக்கு பிரத்தியேகமாக விற்கப்பட்டது
- பிரித்தானியாவில் உள்ள அதே சுங்க அலுவலகத்தில் நுழைவு ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டது.
- 12 மாதங்களுக்கு மிகாமல் குறிப்பிடத்தக்க வர்த்தக பெறுமதியின் அடிக்கடி மற்றும் தொடர்ச்சியான வர்த்தக ஓட்டங்களின் கட்டமைப்பிற்குள் இறக்குமதி செய்யப்பட்டது.



# உற்பத்தி இட  பிரகடனம் (Origin declaration)

இலங்கை ஏற்றுமதியாளர்கள் உற்பத்தி இட பிரகடனத்தை வழங்க வேண்டும், இது வர்த்தக விலைப்பட்டியல், பொதிவுப் பட்டியல் அல்லது விநியோக குறிப்பு போன்ற வர்த்தக ஆவணத்தில் செய்யப்பட வேண்டும். இது இந்த வழிகாட்டி யின் பிரிவு 2 இல் பட்டியலிடப்பட்டுள்ள தகவலைக் கொண்டிருக்க வேண்டும் என்பதோடு, பெட்டி A5 இல் வழங்கப்பட்டுள்ள “உற்பத்தி இடம் குறித்த பிரகடன வாசகங்களை“ உள்ளடக்கியிருக்க வேண்டும். உற்பத்தி இட பிரகடனம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு, ஏற்றுமதியாளரின் கையொப்பத்தை உள்ளடக்கியிருக்க வேண்டும், மேலும் ஏற்றுமதியாளரிடமிருந்து இறக்குமதியாளருக்கு இலத்திரனியல் முறையில் அனுப்பப்படலாம். ஒரு உற்பத்தி இட பிரகடனம் ஏற்றுமதியாளர் அதைச் சமர்ப்பித்த பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்.

### பெட்டி A3: உற்பத்தி இட பிரகடனத்தைத் தயாரிப்பதற்கான நிபந்தனைகள்

- முன்னுரிமை கட்டண முறைக்கு (preferential tariff treatment) தகுதியான பொருட்களின் தயாரிப்பு மற்றும் விநியோகத்திற்கான பொருத்தமான வர்த்தக கணக்கியல் பதிவுகளை பேணவும்
- தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து பொருட்களின் உற்பத்தி இடத்தை காட்டும் துணை ஆவணங்கள் அல்லது எழுத்துப்பூர்வ கூற்றுக்களை இலங்கை சுங்கம் அல்லது வேறு எந்த அதிகாரத் தரப்பிடமும் வழங்க தயாராக இருங்கள்.

### பெட்டி A4: உற்பத்தி இட பிரகடன வாசகங்கள்

**வர்த்தக விலைப்பட்டியல் அல்லது பொதிவுப் பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டும்**

இந்த ஆவணத்தால் உள்ளடக்கப்பட்ட தயாரிப்புகளின் ஏற்றுமதியாளர் (EORI இலக்கத்தை உள்ளிடவும்) வேறுவிதமாக தெளிவாகக் குறிப்பிட்டாலேயே அன்றி, இந்த தயாரிப்புகள் ஐக்கிய இராச்சியத்தின் DCTS இன் உற்பத்தி இட விதிகளின் படி (பொருட்களின் உற்பத்தி இடத்தை உள்ளிடவும்) முன்னுரிமை உற்பத்தி இடத்தைச்  சேர்ந்தவை என்று வெளிப்படுத்துவதுடன், பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்தி இட அளவுகோல் (தயாரிப்புகள் முழுவதுமாக பெறப்பட்டவை: 'P' என்ற எழுத்தை உள்ளிடவும் போதுமான அளவு செயன்முறையாக்கப்பட்ட தயாரிப்புகள்: ஒரு HS தலைப்பைத் தொடர்ந்து 'W' என்ற எழுத்தை உள்ளிடவும் (உதாரணம் 'W' 9618)).

________________ [ ][ ] [ ][ ] [ ][ ][ ][ ]

(இடமும் திகதியும் (ஆவணத்திலேயே சேர்க்கப்பட்டிருந்தால் இதைத் தவிர்க்கவும்))

____________________________________________

(ஏற்றுமதியாளரின் பெயர் மற்றும் கையொப்பம்)

## படிவம் A

ஒரு மாற்றீடாக, இலங்கை ஏற்றுமதியாளர்கள் உற்பத்தி இடத்தின் ஆதாரத்தைக் காட்ட படிவம் A ஐ பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம். படிவம் A இல் தொடர் இலக்கம் அல்லது வர்த்தக விலைப்பட்டியல் பற்றிய குறிப்பு இருக்க வேண்டும். மிக முக்கியமாக, ஒரு இலங்கை அதிகாரியால் கையொப்பமிட்டு முத்திரையிடப்பட வேண்டிய அவசியமில்லை. படிவம் A ஐ பூர்த்தி செய்தல் குறித்து பிரித்தானிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலைப் பார்க்கவும்.

## பொருட்கள் பிரகடனம்


அத்தியாயம் 4 இல் குறிப்பிட்டுள்ளபடி, நிதி ஆவணங்கள் மற்றும் வங்கி சுயவிவரம் வர்த்தகருடன் இணைக்கப்பட்டவுடன், அடுத்த கட்டமாக சரக்கு பற்றிய பிரகடனத்தை இணையவழியாக தாக்கல் செய்ய வேண்டும். ஏற்றுமதி செய்பவர் மற்றும் சரக்கு பெறுபவர், விலைப்பட்டியல் இலக்கம், சரக்கு ஏற்றுமதி துறைமுகம், மொத்த எடை, பொதியிடல் தகவல் மற்றும் சேரும் நாடு பற்றிய தகவல்களை வர்த்தகர்கள் வழங்க வேண்டும். வர்த்தகர்கள் வங்கி சுயவிவரம் மற்றும் நிதி ஆவணங்களை சரக்கு பற்றிய பிரகடனத்துடன் இணைத்து துணை ஆவணங்களைப் பதிவேற்ற வேண்டும்.

## ஒற்றை பிரகடனம்

ASYCUDA போர்ட்டலில், வர்த்தகர்கள் ஏற்றுமதி ஒற்றை பிரகடனத்தை உருவாக்க வேண்டும். பின்வருபவை போன்ற தொடர்புடைய தகவல்களை சமர்ப்பிக்கவும்.

- ஏற்றுமதியாளர் விவரங்கள்
- சரக்கு பெறுபவர் விவரங்கள்
- கப்பல் மற்றும் பயண தகவல்
- பயண திகதி
- உற்பத்தி நாடு
- சென்று சேரும் நாடு
- மாற்று விகிதம்
- HS குறியீடு
- பொருட்களின் நிகர எடை
- பொருட்களின் மொத்த எடை
- பொருளின் விலை (FOB/CIF)
- முன்னைய ஆவணம்/ குறிப்பு (பில் ஒப் லேடிங் இலக்கம் / ஏர் வேபில் (air waybill) இலக்கம்)
- நாணய வகை
- கட்டணம் செலுத்தும் விதிமுறைகள்
- வங்கியின் பெயர்
- வங்கி கிளையின் குறிப்பு இலக்கம்
- அனுமதி இலக்கம் (ஏதேனும் இருந்தால்)
- இறக்குமதியாளர் / ஏற்றுமதியாளர் / முகவரின் கையொப்பம்






# பொருளாதார செயற்படுத்துனர்கள் (Economic Operators) பதிவு மற்றும் அடையாள இலக்கம்

பிரித்தானியாவில் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும், பொருட்கள் பிரித்தானிய எல்லையில் இருக்கும்போது சுங்க பிரகடனத்தை வெளியிடுவதற்கும் ஒரு EORI இலக்கம் தேவை. பிரித்தானியாவை தளமாகக் கொண்ட இறக்குமதியாளர்கள் பொதுவாக ஒரு EORI இலக்கத்துக்கு விண்ணப்பித்து பெறுவார்கள்.

நேரடி ஏற்றுமதி மற்றும் விற்பனையின் போது, வர்த்தகர்கள் EORI இலக்கத்தைப் பெறுவதற்கும் சுங்க அதிகாரிகளுடன் ஈடுபடுவதற்கும் பிரித்தானியாவில் நிறுவப்பட்ட சுங்க முகவர்கள் அல்லது தரகர்களை அமர்த்தலாம்.

# #SheTrades

*Her success. Our future.*

The International Trade Centre's SheTrades Initiative is a global movement to unlock women's full economic potential through trade.

By working with governments, business support organizations, the private sector, and women producers and entrepreneurs, we create the right capacities and conditions for sustainable impact at scale.